திருநாவுக்கரசர்



கா. நெடுஞ்செழியன்

திருநாங்கூர்

ஆசிரியர்
கா. நெடுஞ்செழியன் எம்.ஏ., பி.ஜி.டி.இ.ஏ.,

அருண் பதிப்பகம்
ஜெயங்கொண்டசோழபுரம், 621 802
1994

திருநாங்கூர்
முதற்பதிப்பு 1000, பிரதிகள்
1994

ஆசிரியர் :
கா. நெடுஞ்செழியன் எம் ஏ., பி.ஜி டி.இ.ஏ,

அட்டை :
மதங்கரிஷி
(சிவகணம்) திருநாங்கூர்

அட்டை அமைப்பு :
ஸ்தபதி திரு சதாசிவம், மதுரை

அச்சு :
தீன் பிரிண்டர்ஸ்
கரும்பாலை, மதுரை-625 020

விலை ரூ. 15-00

அருண் பதிப்பகம்
தம்மண்ண செட்டியார் காலனி,
சிதம்பரம்சாலை, ஜெயங்கொண்டம் 621 802

காணிக்கை

பணமும் பாசமும் தந்து என்னைப் படிக்கவைத்து
ஆளாக்கிய அன்புத் தெய்வங்களாம்
என் பெற்றோர்
திருமிகு ப. காளிமுத்து
திருமதி உடையத்தம்மாள்
ஆகியோருக்கு எனது நன்றிக் காணிக்கை

திருமங்கையாழ்வார் மங்களா சாஸன
மஹோத்ஸவ நூற்றாண்டுவிழா,
11-எம்பெருமான் கருடசேவை விழா வெளியீடு
10—2—1994

உள்ளே.

		பக்கம்
1.	திருநாங்கூர்	— 1
2.	வைணவக்கோயில்கள்	— 8
3.	சைவக்கோயில்கள்	— 63
4.	சிறுதெய்வக்கோயில்கள்	— 82
5.	திருவிழாக்கள்	— 98
6.	கல்வெட்டுச்செய்திகள்	— 104
7.	சிறப்புச்செய்திகள்	— 110
8.	நாங்கூரைச்சுற்றி	— 118
9.	நாங்கூர்மக்கள்	— 135

படங்கள் :

உ

குருபாதம்



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
தருமை ஆதீனம்
தருமபுரம், மயிலாடுதுறை

23-1-1994

திருநாங்கூர் என்னும் ஊர் சீர்காழிக்கு அருகிலுள்ளது. இதனைச் சைவத்திருமுறைகள் வைப்புத் தலமாகக் குறிக்கின்றன. சுந்தரர்,

நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய்
நல்லூம் நம்பரனே

என்று குறிக்கிறார். வைணவப் பாசுரங்களிலும் இது குறிக்கப்பட்டுள்ளது

"மறையோர் வணங்கப் புகழ் நாங்கூர்" என்பது திருமங்கை ஆழ்வார் பாசுரம் எனவே சைவ வைணவ இணைப்புத் தலமாக விளங்கும் கீர்த்தி இதற்குண்டு. அதற்கேற்ப, இங்கு ஸ்ரீமதங்கீசுவரர் திருக்கோயில், ஸ்ரீநம்புவார்க்கு அன்பர் கோயில், ஸ்ரீஉத்தராபதி கோயில், என்னும் சிவன் கோயில்களும் நாராயணப் பெருமாள் கோயில், ஸ்ரீபுருஷோத்தமன் கோயில், ஸ்ரீவைகுந்தநாதர் கோயில், ஸ்ரீசெம்பொன் அரங்கர் கோயில், ஸ்ரீகுடமாடும் கூத்தர் கோயில், ஸ்ரீபள்ளிகொண்ட பெருமாள் கோயில், ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் என்னும் 7 வைணவக்

கோயில்களும் விநாயகர் கோயில்கள் மூன்றும் உள்ளன. மேலும், இங்குதான் ஒன்பதாம் திருமுறையிலுள்ள திருப்பல்லாண்டு ஓதிய சேந்தனார் அவதரித்தார். திருமங்கை ஆழ்வார் இத்தலத்திலுள்ள அனைத்து வைணவப் பதிகளுக்கும் பாசரங்கள் பாடியுள்ளார் இங்ஙனம் கோயில்களாலும், வணங்கிய அருளாளர்களாலும் பொது நிலை உடையதாக அமைந்த சிறப்பு இத்தலத்திற்குண்டு.

இத்தலத்தைப் பற்றி அன்பர் திரு நெடுஞ்செழியன் ஆய்வு நூல் ஒன்று எழுதியுள்ளார். இதில் கோயில்கள் பற்றிய செய்திகள் முழுமையும் விளக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுச் செய்திகளும் நிறைவில் இணைக்கப்பட்டுள்ளன. திருப்பெயர் விளக்கம், கோயில் அமைப்பு, புராணச் செய்திகள், திருக்குளத்தின் சிறப்பு, நிர்வாகம் என அனைத்தும் நன்கு ஆய்ந்து எழுதப் பெற்றுள்ளன நடுநிலையுடன் இந்நூல் அமைந்துள்ளது. நூலின் இடையில் ஆங்காங்கே தேவையான பாடல்கள் எடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன

நூலின் நிறைவில் இத்தலத்தைச் சுற்றி உள்ள ஊர்கள் பற்றிய குறிப்பும், இத்தலத்தில் அவதரித்தோர் பட்டியலும், இக்காலத்தில் பிறந்து, சிறந்த பணி செய்வோர் பட்டியலும் தரப்பட்டுள்ளன. தொல்பொருள் ஆய்வுத்துறையில் பணியாற்றும் அவர் எழுதியுள்ள இந்நூல் வரலாற்றாய்வாளருக்கும் இலக்கிய ஆய்வாளருக்கும் பெரிதும் பயன்படும்

இந்நூலைத் தமிழ் மக்கட்கு வழங்கிய இவ் அன்பர் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும், மென்மேலும் சிறந்த பல்நூல்களை வழங்கிச் சிறப்புறவும், இந்நூலைப் பெறும் அன்பர்கள் இதனைக் கற்றுத் தெளிந்து அறிவு நலம் பெறவும் ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

அணிந்துரை

நடன காசிநாதன்
இயக்குநர் தொல்பொருள் ஆய்வுத் துறை
தமிழ்நாடு அரசு

இத்துறையின் காப்பாட்சியர் திரு நெடுஞ்செழியன் அவர்களால் எழுதப்பட்டுள்ள 'திருநாங்கூர்' என்னும் இந்நூல் இவர் பிறந்த தலமான திருநாங்கூரைப் பற்றி விரிவான வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. திருநாங்கூர் சங்க காலந்தொட்டு இந்நாள் வரை எந்தெந்த வகைகளில் சிறப்பு பெற்ற தலமாக விளங்கியிருக்கிறது என்பது பற்றி உரிய எடுத்துக்காட்டுகளுடன் சீரிய முறையில் ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். நூலின் பெயர்க்காரணம் தொடங்கி, பக்தி இயக்கக் காலம், சோழர்காலம், பிற்காலம் ஆகிய காலங்களில் இவ்வூரின் சிறப்புக்களைத் தொகுத்து அளித்துள்ளார்.

கீழ்த்திசை நாடான தாய்லாந்து நாட்டின் 'தக்குவாபா' என்ற இடத்தில் காணும் தமிழ்க் கல்வெட்டில் நாங்கூரையும், மணிக்கிராமத்தினையும் சார்ந்த வணிகர் பெருமக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றியும், அவர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். சங்க காலத்தில் 'நாங்கூர் வேளிர்' என்று கூறக்கூடிய அளவிற்கு ஒரு தனி வேளிர் பிரிவினர் அப்பகுதியிலே வாழ்ந்திருக்கிறார்கள் என்பது சங்க இலக்கியங்களால் புலப்படுகிறது. நாங்கூருக்கு அருகில் அமைந்திருந்த பூம்புகார் துறைமுகப்பட்டினத்தில் வாழ்ந்து வந்த கரிகால் பெருவளத்தான், நாங்கூர் வேளிரோடு மண உறவு கொண்டு இருந்தான் என்ற செய்தி சங்க இலக்கியத்தின் மூலம் நமக்குத் தெரியவருகிறது பாராளும் வேந்தனுக்குப் பெண் கொடுத்து மகிழ்கின்ற பான்மையில்

நாங்கூர் வேளிர் பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் இதன் மூலம் அறியப்படுகிறது. அத்தகைய செல்வச் செழிப்போடு விளங்கிய அத்திருநாங்கூரிலே சைவமும், வைணவமும் சிறந்து விளங்கியிருக்கிறது என்பது சைவத் திருமுறைகளின் வாயிலாகவும், வைணவப் பாசுரங்கள் வாயிலாகவும் நமக்குத் தெரிய வருகிறது. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கை ஆழ்வார் இவ்வூரில் இருந்த வைணவக் கோயிலைப் பற்றி மங்களாசாசனம் செய்து இருக்கிறார். பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தமது 108 திருப்பதி அந்தாதிப் பாடல்களில் திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை துவாரகை ஆகியவைகளுக்கு இணையாக நாங்கூரையும் ஒப்பிட்டுக்கூறி இருப்பது அதன் புனிதத் தன்மையைப் புலப்படுத்துவதாகும். அவ்வளவு சிறப்புடைய இந்நாங்கூரில் அமைந்திருக்கின்ற கோயில்கள் அனைத்தையும் அவற்றின் கட்டடக் கலை அமைப்பு, அங்கு அமைந்துள்ள சிற்பங்களின் சிறப்பு, செப்புத் திருமேனிகளின் கலைநயம் ஆகியவைகளைப் பற்றி அழகாகவும், பொருள் சிறக்கவும் எழுதியுள்ள திரு. கா. நெடுஞ்செழியன் பாராட்டத்தக்கவர். பெரும் கோயில்கள் மட்டும் இன்றி சிறு தெய்வ கோயில்களுக்கும் முக்கியத்துவம் அளித்து அவற்றையும் ஆசிரியர் விளக்கியிருப்பது ஆசிரியரின் கூர்த்த மதியையும், அனைத்தையும் ஒரே சீராக நோக்குகின்ற சம நோக்கையும் தெரிவிக்கிறது. நாங்கூரிலே நிகழ்கின்ற திருவிழாக்கள் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார். கல்வெட்டுக்கள் மிகக் குறைந்த அளவிலே நாங்கூர் கோயிலில் காணப்பட்டாலும், அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய செய்திகளை மிக நேர்த்தியாகத் தொகுத்து அதைத்

தம்முடைய நூலுக்குப் பயன்படுத்தி இருப்பது ஆசிரியருடைய கல்வெட்டு அறிவைக் காட்டுவதாக உள்ளது. திருநாங்கூர் பற்றி மட்டும் அல்லாது திருநாங்கூரைச் சுற்றியிருக்கின்ற திருத்தலங்கள் பற்றியும் சில செய்திகள் கூறியிருப்பது இந்நூலுக்கு மேலும் அழகூட்டுவதாக அமைந்துள்ளது. அது மட்டுமல்லாமல் திருநாங்கூர் திருத்தலத்தில் பிறந்து வளர்ந்து இன்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்ற பெருமக்களின் பட்டியலையும் தந்திருப்பது ஆசிரியரின் பரந்த மனப்பான்மையைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. ஆதலால் தாம் பிறந்த தலத்தின் சிறப்பை ஒரு நூலாகத் தாமே எழுதி வெளியிடுதல் வேண்டும் என்ற முனைப்போடு ஆசிரியர் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார் என்று காணும்போது, இது போன்ற ஒவ்வொரு தலத்திலும் பிறந்து உயர்ந்த பதவிகளில் இருக்கின்ற பெருமக்கள் தம் திருத்தலத்தின் வரலாற்றுச்சிறப்பையும் மற்றும் பண்பாட்டுச் சிறப்பையும் நூல் வடிவில் கொண்டு வருவதற்கு முயற்சிப்பார்களானால், தமிழகத்தில் உள்ள ஊர்கள் அனைத்திற்கும் சிறந்த வரலாற்று நூல்கள் நமக்கு எளிதில் கிடைத்துவிடும். அத்தகைய முயற்சியில் முதல் முயற்சியாக ஈடுபட்டுள்ள திரு கா. நெடுஞ்செழியன் அவர்களை நான் உளமாரப் பாராட்டுகிறேன். இந்நூல் போன்ற தம்முடைய தலத்திற்கு அருகில் உள்ள ஊர்களுக்கும் இவர் சிறு சிறு நூல்கள் எழுதுவாரானால் அது தமிழகத்திற்குப் பெரும் பயனாக அமையும் என்று கூறுவதோடு இவர் அம்முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை
19—1—94

நடன. காசிநாதன்

நன்றியுரை

நான் பள்ளி மாணவனாக இருந்தபோது எனது தந்தை திரு ப. காளிமுத்து அவர்கள் நாங்கூரில் உள்ள மதங்கீஸ்வரர் கோயில், நம்புவார்க்கு அன்பர் கோயில், நாலாயிரத் தொருவர் விநாயகர் கோயில், அண்ணன் பெருமாள் கோயில் ஆகியவற்றின் அறங்காவலராக இருந்தார்கள். சைவ, வைணவ, சிறுதெய்வக் கோயில்களின் அறங்காவலராக சமயப்பொறையுடன், பக்திநெறி பூண்டு விளங்கிய அவர்களுடன் அக்கோயில்களுக்கும், திருவிழாக்-களுக்கும் சென்று கலந்து வழிபட்டு மகிழும் பாக்கியம் பெற்றேன். அதன்விளைவாக இந்தியப் பண்பாட்டினைப் பாடமாக எடுத்துப் பூம்புகார்க் கல்லூரியில் பயின்றேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொல்லியல் வரலாறு பயிலும் வாய்ப்பும், தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையில் கல்வெட்டு, கலை, வரலாறு பயிலும் வாய்ப்பும், அத்துறையில் பணி இடம் கிடைத்து நல்வாழ்வும், சங்கிலித் தொடராக அமைந்தன. நாங்கூர் கோயில்களைப் பற்றி நூல் எழுதும் அளவு வளர்ந்துள்ள என்னைக் காண எனது தந்தையாரவர்கள் இன்று இல்லை. உணர்வு வித்திட்டு வளர்த்த அப்பெருமகனை நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்ந்து வணங்குகின்றேன்.

இந்நூலிற்கு ஆசியுரை தந்து அருள்பாலித்துள்ள திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவடி போற்றித்தொழுகின்றேன்.

பூம்புகார்ப் பகுதியில் ஆழ்கடலகழாய்வு மேற்கொண்டு வரலாற்றுச் சிறப்புகளை வெளிப்படுத்தி வருபவரும், கல்வெட்டுத் தொல்லியல் ஆய்வில் ஈடுபடும் இளம் ஆய்வாளர்களை ஊக்குவித்து உணர்வூட்டி வருபவரும்,

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநருமான போற்றுதலுக்குரிய திரு நடன. காசிநாதன் அவர்களின் கீழ்ப்பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது பெரும் பேறாகும். அவர்கள் உரிய முறையில் இந்நூல் வெளியிட எனக்கு அனுமதி நல்கியதோடு இந் நூலிற்கு நல்லதொரு அணிந்துரை தந்து என்னைப் பாராட்டி வாழ்த்தியுள்ளார்கள். அவர்கள் அலுவலகப் பணிகளினிடையேயும், உடல்நலக் குறைவிடையேயும் இந்நூலை முழுதும் நோக்கி அணிந்துரை தந்த பாங்கினை என்றும் மறக்க முடியாது. அவர்களுக்கு என்நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி மகிழ்கின்றேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாகப் பயின்றபோது பூம்புகார் அகழாய்வுக்காக யுனெஸ்கோ பாராட்டுப் பெற்ற தொல்லியல் அறிஞர் முனைவர் திரு. K. V இராமன் அவர்கள் எனது மதிப்பிற்குரிய பேராசிரியராக இருந்தார்கள், பூம்புகார் எனது ஊரருகில் இருந்ததாலும், நான் வரலாற்றுச் சிறப்புமிக்க நாங்கூரைச் சேர்ந்தவன் என்பதாலும் என்னிடம் அவ்வப்போது இப்பகுதிப் பெருமைகளைப்பேசி மகிழ்விப்பார்கள். நூல்கள் தந்தும் படிக்கச் செய்வார்கள். அவர்கள் தந்த வரலாற்று ணர்வே இந்நூலை எழுதவைத்தது என்று சொல்லலாம். அவர்களுக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

கோயில்கள் பற்றி நூல்கள் எழுதி தமிழக அரசு மற்றும் பல்கலைக்கழகப் பரிசுகளைப் பெற்றவரும், பூம்புகாரப் பகுதியைச் சேர்ந்தவரும், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பதிவு அலுவலருமான திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் இந்நூல் எழுதப் பெரிதும் ஊக்கம் ஊட்டினர்கள். அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

எனது எழுத்து, நூல்வடிவம் பெறவும், இந்நூல் சிறப்பாக அமையவும் பலவகையிலும் உதவிய தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனப் பயிற்றுநரும், தேர்ந்த கல்வெட்டாய்வாளரும், எனது மதிப்பிற்குரிய ஆசிரியருமான திரு. சு. இராசகோபால் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலின் கையெழுத்துப் பிரதியைத் திருத்தியும் அச்சுப் பிழைகளை அகற்றியும் அன்புடன் வழிகாட்டியும் உதவிய தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மதுரை கல்வெட்டாய்வாளர் திரு. செ. போசு அவர்களுக்கும் தொல்லியல் அலுவலர் திரு. சொ. சாந்தலிங்கம் அவர்களுக்கும் எனது அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலின் அட்டைப் படத்தை அழகுற அமைத்துத் தந்தவர் ஸ்தபதி திரு சதாசிவம் அவர்கள். இந்நூலை நல்லமுறையில் அச்சிட்டுத் தந்தவர் தீன் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு J. சாகுல்ஹமீத் அவர்கள், இவர்களுக்கும் எனது நன்றிப் பெருக்கைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

மேலும் பல்வகையிலும் உதவியவர்கள், என் போற்றுதலுக்கு உரியவர்கள்,

1. திரு. கு. தாமோதரன் எம். ஏ., அவர்கள்
துணை இயக்குநர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள்
ஆய்வுத்துறை, சென்னை - 113
2. திரு. அ. அப்துல்மஜீத் அவர்கள்
துணை தொல்லியல் கண்காணிப்பாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள்
ஆய்வுத்துறை
3. திரு. கி. ஸ்ரீதரன் அவர்கள்
பதிவு அலுவலர், திருச்சி
4. திருமதி. டாக்டர் நா. மார்க்சீயகாந்தி அவர்கள்
உதவிகல்வெட்டுக் கண்காணிப்பாளர்
சென்னை
5. திருமதி. டாக்டர் ஆ. பத்மாவதி அவர்கள்
தேர்வு நிலைக் கல்வெட்டாய்வாளர்
சென்னை
6. திரு. பொ. இராஜேந்திரன் அவர்கள்
தேர்வு நிலைக் கல்வெட்டாய்வாளர்
மயிலாடுதுறை
7. திரு. இ. பொன்னப்பிள்ளை அவர்கள்
துணை ஆணையாளர்
இந்து அறநிலையத்துறை, மயிலாடுதுறை
8. திரு. கே அருணகிரி அவர்கள்
நிர்வாக அலுவலர்
கல்யாண ரெங்கநாதர் கோயில், திருநகரி
9. திரு ஏ. எஸ். விஷ்ணுபிரசாத் அவர்கள்
நிர்வாக அலுவலர், சுவேதாரண்ய
சுவாமி கோயில் திருவெண்காடு
10. திரு பி. வி. அனங்கராசாரியார் அவர்கள்
பரம்பரை அறங்காவலர்
புருஷோத்தமன்கோயில், நாங்கூர்

11. திரு. இராஜகோபாலபட்டர் அவர்கள்
நாராயணப்பெருமாள் கோயில், நாங்கூர்
12. திரு. லெட்சுமணபட்டாசார் அவர்கள்
செம்பொன்னரங்கர் கோயில், நாங்கூர்
13. திரு. ஆர். கே. கண்ணன் அவர்கள்
கண்ணன் கோயில், காவளம்பாடி
14. திரு. மாதவப்பட்டர் அவர்கள் அண்ணன் கோயில்
15. திரு. ஆர். கிருஷ்ணமாச்சாரி அவர்கள்
மேலாளர் மாதவப்பெருமாள் கோயில்
கீழச்சாலை
16. திரு. உமாபதி அவர்கள்
மதங்கீஸ்வரர் கோயில், நாங்கூர்
17. திரு. கா. கலியமூர்த்தி அவர்கள்
மிராசு, நாங்கூர்

ஆகியோர் ஆவர். எனது ஆய்வுக்கும் வளர்ச்சிக்கும் துணையாக இருந்து வருபவர் எனது சகோதரரும், நாங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் கணித ஆசிரியருமான திரு. கா. ஜெயராமன் பி. எஸ்ஸி, எம். ஏ., எம். எட்., அவர்கள். குடும்பப் பொறுப்பை ஏற்று எனது ஆய்வுக்கு வழிவகுத்து வருபவர் எனது மனைவி திருமதி ஜெயலெட்சுமி. என்வாழ்வு முன்னேற்றத்தில் பெரிதும் ஈடுபாடுடைய இவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

இந்நூலைத் தங்கள் முதல்வெளியீடாகக் கொண்டு வந்து என்னைப் பெருமைப்படுத்தியுள்ள அருண் பதிப்பகத்தாருக்கு என் இதயம் நிறைந்த நன்றி.

நாங்கூர்
10—2—1994

அன்பன்
கா. நெடுஞ்செழியன்

திருநாங்கூர்

திருநாங்கூர்

வரலாற்றுச் சிறப்பும் சமயச் சிறப்பும் அமைந்த நல்லூர் திருநாங்கூர். நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் சீர்காழிக்குத் தென்கிழக்கே 10 கி. மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. சீர்காழி-கோணயாம் பட்டினம், மயிலாடுதுறை-நாங்கூர் வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளில் இவ்வூரை அடையலாம். வரலாற்றுச் சிறப்புமிக்க காவிரிப் பூம்பட்டினம் திருவெண்காடு போன்ற ஊர்களும் இவ்வூரின் அருகிலேயே உள்ளன.

ஊர்ப்பெயர்

நான்கு ஊர்கள் சேர்ந்த ஊர் நாங்கூர் என்பது பொது மக்கள் குறிப்பிடும் பெயர்க் காரணமாகும். 'நாங்கு' என்ற சொல்லிற்குத் 'தானியமாகத் தரப்படும் ஒருவகை வரி' என்றும் 'ஒரு வகை மரம்' என்றும் தமிழ்ப் பேரகராதி பொருள்தருகிறது.[1] 'நாங்கு' என்ற சொல்லடிப்படையில் நாங்குநேரி போன்ற ஊர்கள் தமிழகத்தில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். நான்கு + ஊர் என்று பிரித்தால் அந்த நான்கு ஊர்கள் எவை, எவை என்பதில் தெளிவு கிடைக்கவில்லை. நான்கு ஊர்கள் என்பதை நாலூர் என்று கூட்டிப் படிக்கின்ற வாய்ப்பும் உள்ளது. எனவே 'நாங்கு' என்ற சொல்லடிப்படையில் இவ்வூர்ப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம்.

சங்க இலக்கியங்களில்

சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை ஆகியவை நாங்கூரைப் பற்றிக் குறிப்புகள் தருகின்றன. நாங்கூர் வேளிர் கரிகாலச் சோழனுக்குப் பெண் கொடுத்து மண உறவு கொண்டிருந்த செய்தியும் அறியக் கிடக்கிறது.

சைவத் திருமுறைகளில்

கி.பி. 9ஆம் நூற்றாண்டினரான சுந்தரர் நாங்கூரைப் பிற ஊர்களுடன் வைப்புத் தலமாகக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அவர் பாடல்களில் இவ்வூர் இறைவன் 'நாங்கூர் நாட்டு நாங்கூர் நாதன்' என்று போற்றப்படுகிறான்.

'தேங்கூருந் திருச்சிற்றம்பலம் சிராப்பள்ளி
பாங்கூரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை
பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலுமூர்
நாங்கூர் நாட்டு நாங்கூர்'

மேலும் ஒரு பாடலில்,

வேங்கூருறைவாய் விளமர் நகராய்
விடையார் கொடியானே
நாங்கூருறைவாய் தேங்கூர் நகராய்
நல்லூர் நம்பரனே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா
பழனம் பதியானே

என்று நாங்கூர் இறைவனைக் குறிப்பிடுகின்றார்.

வைணவப் பாசுரங்களில்

கி பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரான திருமங்கை ஆழ்வார் பாசுரங்களிலும் இவ்வூர் குறிக்கப்படுகின்றது.

'முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேதர்
ஐவேள்வி ஆறு அங்கர் ஏழின் இசையோர்
மறையோர் வணங்கப் புகழ் நாங்கூர்''

இவ்வூர் இறைவன் மணிமாடக் கோயிலில் இருப்பவன் என்பதை இவர்,

> ''எத்திசையும்
> காந்தாரம் அம்தேன் இசைபாட மாடே
> களி வண்டு மிழற்ற நிழல் துதைந்து
> மாந்தாரம் நின்று மணம் மல்கும் நாங்கூர்
> மணிமாடக் கோயில்''

என்றும்,

> மன்னும் மறை நான்கும் ஆனானை புல்லாணித்
> தென்னன் தமிழை, வடமொழியை - நாங்கூரில்
> மன்னும் மணிமாடக்கோயில் மணாளனை'

என்றும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

தாய்லாந்துக் கல்வெட்டில்

தாய்லாந்து நாட்டில் தாகூவாபா என்ற இடத்தில் தமிழ்க்கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. கி. பி 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில் நாங்கூர், மணிக் கிராமம் என்ற ஊர்ப்பெயர்கள் படிக்கப்பட்டுள்ளன. ஏறக் குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு தற்பொழுது தாய்லாந்து சென்று வந்துள்ள ஆய்வாளர்கள் நாங்கூர் என்ற சொல் அக்கல்வெட்டில் இருக்கிறதா என்று ஐயம் தெரிவித்து உள்ளனர். எனினும் மணிக்கிராமம் என்ற சொல் தெளிவாக இருக்கிறது. இன்றும் நாங்கூர் அருகே மணிக்கிராமம் என்ற ஊர் உள்ளதால் நாங்கூர் பகுதியைச் சேர்ந்தவர் கொடுத்த கொடையையே இக்கடல் கடந்த தமிழ்க் கல்வெட்டு குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

4

சோழர் கல்வெட்டுகளில்

சோழர் காலக் கல்வெட்டுகளில் (கி பி. 850 - 1250) இவ்வூர் விவசாய நிலங்கள் நிறைந்த சில 'ஊர்' சபைகளின் தலைமையிடமாக 'நாடு' என்ற அமைப்பைப் பெற்று நாங்கூர் நாடாக விளங்கியமை தெரியவருகிறது இந்நாடு அமைப்பில் திருவெண்காடு, பெருச்சிறைநல்லூர், குன்றம் என்ற குந்தவைச் சதுர்வேதிமங்கலம் (கீழையூர்) திருச்சாய்லைக்காடு (சாயாவனம்) ஆகிய ஊர்கள் அடங்கி-இருந்தன.[2] திருவெண்காடு கல்வெட்டுகள் 2 கி மீ. தொலைவில் உள்ள திருவெண்காட்டையும் நாங்கூர் என்றே குறிப்பிடுவதிலிருந்து இது ஒரு பரந்து விரிந்த பெரிய ஊராக விளங்கியிருக்கும் என்றும் தெரிகிறது. இந்நாங்கூர் நாடு இராசேந்திர சிங்க வளநாட்டில் அடங்கியிருந்தமை-யையும் இச்சோழர் கல்வெட்டுகள் காட்டுகின்றன. நாங்கூரான பாததூளிச் சதுர்வேதிமங்கலம் என்று இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளது[3] பிராமண ஊராகப் பிரம்மதேயம் என்ற பெயரிலும் விளங்கியிருக்கிறது.

பாண்டியர் கல்வெட்டுகளில்

பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் கல்வெட்டு இவ்வூரைத் திருநாங்கூர் என்றே குறிக்கின்றது. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டும் இவ்வூரைத் திருநாங்கூர் என்றே குறிக்கின்றது. எனவே சங்க காலம் தொட்டு இன்று வரை இவ்வூரின் பெயர் நாங்கூர் என்றே விளங்கியிருக்கிறது. எனினும் ஊரின் பரப்பளவுகளில் வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம்.

ஊர்ச்சிறப்பு

சோழநாட்டு வைணவத் தலங்களில் சிறப்புடைய ஓர் ஊர் திருநாங்கூர். திருநாங்கூர் கருடசேவைத் திருவிழா 11 கோயில்கள் ஒன்றாக நடத்தும் திருவிழாவாகும். இதனால் சீர்காழி வட்டத்தில் உள்ள வைணவத்தலங்கள் திருநாங்கூர்த் திருப்பதிகள் என்றே பொதுப்படையாக அழைக்கப்படுகின்றன.

திருவையாற்றில் சிவபெருமானின் வாகனமான நந்தியம்பெருமானை மையமாகக் கொண்டு ஏழு ஊர்க்கோயில்கள் ஒன்று சேர்ந்து சப்தஸ்தலத் திருவிழாக் கொண்டாடுகின்றன. அதேபோலத் திருநாங்கூரைத் தலமாகக் கொண்டு 11 திவ்யத் தலங்கள், திருமாலின் வாகனமான கருடனை மையமாகக் கொண்டு கருடசேவைத் திருவிழாக் கொண்டாடுவது சிறப்பாகக் கருதத்தக்க ஒன்றாகும்.

இந்த 11 கோயில்களில் ஏழுகோயில்கள் திருநாங்கூரிலேயே இன்று அமைந்துள்ளன. இவ்வேழு கோயில்களையும் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்துள்ளார். வைணவத்தில் இவ்வூருக்கு எவ்வளவு சிறப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது எண்ணிப் பார்க்கத் தக்கதொன்றாகும்

தலபுராணம்

தலபுராணத்தில் இவ்வூர் பராசவனம் என்று அழைக்கப்படுகிறது. பராசவனத்திலுள்ள மதங்காசிரமத்தில் தவம் செய்த மதங்கமுனிவரின் வேண்டுகோளின்படி திருமால் பன்னிரு மூர்த்திகளாக எழுந்தருளி, பன்னிரு தலங்களில் சிவபிரானை வழிபட்டுள்ளார். சுவேதாரண்யம்

எனப்படும் திருவெண்காட்டில் ஈசானிய பீடமாகிய மூல லிங்கத்தை வாசுதேவர் வழிபட்டார் என்றும் அதன் பிரதி லிங்கங்களே பன்னிரு சிவலிங்கங்கள் என்றும் அப்புராணம் குறிப்பிடுகின்றது.

நங்கை நாலாயிரவர்

தில்லை மூவாயிரவர் என்று வழங்குவது போல நங்கை நாலாயிரவர் என்ற வழக்கும் உண்டு. திருநாங்கூரில் 4000 அந்தணர்கள் வாழ்ந்ததாகச் செவிவழிச் செய்தி கூறப்படுகிறது. இவ்வூரில் இன்றும் ஒரு விநாயகர் கோயில் 'நாலாயிரத்தொருவர் விநாயகர் கோயில்' என்ற பெயரில் விளங்குகிறது. சோழர்காலத்தில் சதுர்வேதி மங்கலமாக, பிரம்மதேயமாக, பிராமணர்களது ஊராக நாங்கூர் விளங்கியமை முன்னர் குறிப்பிடப்பட்டது. திருமங்கை ஆழ்வார் பாசுரங்களில் அந்தணர்கள் சிறந்து விளங்கும் ஊராக நாங்கூரைப் பாடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

சேந்தனார்

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய சேந்தனாரும் இவ்வூரைச் சார்ந்தவர். இவர் நாங்கூர் சேந்தன் என்று அழைக்கப்பட்டுள்ளார். இவ்வூர் நாலாயிரத்தொருவர் விநாயகர் கோயிலில் சேந்தனார் சிற்பம் காணப்படுவதும் இதற்குச் சான்றாக உள்ளது

அடிக்குறிப்புகள்

1. தமிழ் லெக்சிகன், தொகுதி-4 சென்னைப் பல்கலைக்-கழக வெளியீடு, 1982
2. Political geography of The Chola Country — Y. Subbarayalu, State Dept. of Archaeology Govt. of Tamil Nadu 1973
3. 'சில சுவையான பெயர் மாற்றங்கள்' — கட்டுரை பொ இராசேந்திரன் தொல்லியல் ஆய்வுத் தொகுதி தெர். தெ. நு. ப. ப. கழகம் 1985

வைணவக் கோயில்கள்

கோயில் என்ற சொல் அரசனது இருப்பிடமாகிய அரண்மனையைக் குறிக்கும் சொல்லாகத் தொடக்கத்தில் இருந்து வந்தது. அப்போது கோயில்களைக் குறிக்க கோட்டம் என்ற சொல் பெரும்பாலும் வழக்கிலிருந்தது. அச்சொல் தொல்காப்பியத்திலேயே இடம்பெற்றுள்ளது. சங்ககாலத்திலேயே (கி. பி 2 ஆம் நூற்றாண்டு) தமிழகத்தில் கோயில்கள் பல இருந்தன. அவை மரத்தாலும், செங்கற்களாலுமே அமைக்கப்பட்டதால் விரைவில் அழிந்துபோயின.

தமிழகத்தில் பல்லவர் காலம் முதல் (கி.பி 6-9 ஆம் நூற்றாண்டு) கருங்கற்களைக் கொண்டு கோயில் கட்டும் முறை வழக்கத்தில் வந்தது. ஆதலால் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர், நாயக்கர் காலம்வரையில் உள்ள கோயில்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. பல்லவர் காலத்தில் மலைகளைக்குடைந்து குகைக்கோயில்களும், கற்கோயில்களும் அமைக்கப்பட்டன. பின்னர் கட்டுமானக் கோயில்களும் அவர்களால் கட்டப்பட்டன. நாங்கூரில் பல்லவர் காலத்தில் கோயில்கள் இருந்தமைக்கு நாயன்மார், ஆழ்வார் பாடல்கள் நல்ல எடுத்துக்காட்டாகும். சோழர், பாண்டியர், நாயக்கர் காலத்தில் நாங்கூரில் கோயில்கள் இருந்தமைக்கு இன்று கிடைக்கும் கல்வெட்டுகளும், சிற்பங்களும் சான்றுகளாகும்.

நாங்கூர் வைணவ கோயில்கள்

திருநாங்கூரில் ஏழு வைணவக் கோயில்கள் உள்ளன. ஏழு கோயில்களும் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற கோயில்களாகும். இக்கோயில்கள் (1) நாராயணப் பெருமாள் கோயில் (2) புருஷோத்தமன்

கோயில் (3) வைகுந்தநாதர் கோயில் (4) செம்பொன் அரங்கர் கோயில் (5) குடமாடும் கூத்தர் கோயில் (6) பள்ளி கொண்ட பெருமாள் கோயில் (7) வரதராஜப் பெருமாள் கோயில் ஆகியவை. மேலும் இவ்வூரில் (1) மதங்கீசுவரர் (2) நம்புவாரக்கன்பர் (3) நாலாயிரத்தொருவர் விநாயகர் (4) சுரம் தீர்த்த விநாயகர் (5) வாதாபி கணபதி ஆகிய சைவக்கோயில்களும் கிராம தெய்வங்களான செல்லியம்மன், மாரியம்மன், அய்யனார் போன்ற தெய்வங்களுக்குத் தனித் தனிக் கோயில்களும் உள்ளன.

திருநாங்கூர் 11 திவ்யதேசங்கள்

திருநாங்கூரில் 1. நாராயணப் பெருமாள் கோயில் 2. புருஷோத்தமப் பெருமாள், 3. வைகுந்தநாதர் 4. செம்பொன் அரங்கர், 5. பள்ளி கொண்ட ரெங்கநாதர் 6. குடமாடுங்கூத்தர் 7. திருமணிக்கூடம் வரதராஜப் பெருமாள் போன்ற ஏழுதலங்களும், 8. கீழச்சாலை மாதவப் பெருமாள், 9 அன்னங்கோயில் சீனிவாசப் பெருமாள், 10. காவளம்பாடி கண்ணன், 11. பார்த்தன்பள்ளி பார்த்தசாரதிப் பெருமாள் ஆகிய நான்கு தலங்களும் சேர்த்து "திருநாங்கூர் 11 திவ்யதேசங்கள்" என்று குறிப்பிடப்படுகின்றது. இவை 'திருநாங்கூர் திருப்பதிகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட ஏழு தலங்களும் நாங்கூரில் உள்ளன. ஏழு தலங்களையும் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். 11 தலங்களின் இருப்பிடம், திருமங்கையாழ்வார் பாடல்,

புராணவரலாறு, கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை செப்புத்திருமேனிகள், கல்வெட்டுகள், பூசை மற்றும் திருவிழாக்கள் பற்றியும் இனி காணலாம். திருநாங்கூரில் 11 தலங்களின் தெய்வங்களும் ஒன்று சேர்ந்து நடைபெறும் விழாவிற்கு ''திருநாங்கூர் 11 கருடசேவை உற்சவம்' என்று பெயர் வழங்குகிறது- இவ்வுற்சவம் தை அமாவாசைக்கு மறுதினம் திருநாங்கூரில் நடைபெறும். அதனைப் பற்றியும் இங்கு காணலாம்.

நாராயணப் பெருமாள் கோயில்

இக்கோயில் இவ்வூரின் மேற்குத் திசையில் வெள்ளாளத் தெருவில் அமைந்துள்ளது. இக்கோயிலில் 11 ஆழ்வார் கருடசேவை உற்சவம் நடைபெறுகிறது. திருமங்கையாழ்வார்,

''நந்தா விளக்கே அளத்தற் கரியாய்
நரநாரணனே கருமாமுகில்போல்
எந்தாய் எமக்கே அருளாய் என நின்று
இமையோர் பரவு மிடம் எத்திசையும்
கந்தார அம்தேன் இசைபாட மாடே
களிவண்டு மிழற்ற நிழல் துதைந்து
மந்தார நின்று மணமல்கு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே'' 1

என்று இக்கோயிலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்,

கோயிலமைப்பு

இக்கோயில், கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், சோபானமண்டபம் முதலிய அமைப்புகள் கொண்டு கட்டப் பட்டுள்ளது. கருவறையின் எதிர்ப்புறம் கருடாழ்வார் சந்நிதியும் அடுத்து பலிபீடமும் காணப்படுகின்றன. திருச்சுற்று, திருச்சுற்றுமதில் சோபானமண்டபத்தின் தென்புறம் மடப்பள்ளி ஆகியவையும் உள்ளன கருவறையின் தென்மேற்கு மூலையில் தாயார் சந்நிதியும், சோபான மண்டபத்தின் வடக்குப்புறத்தில் திருமங்கையாழ்வார் சந்நிதியும் காணப்படுகின்றன.

கருடாழ்வார் சந்நிதியின் இடதுபுறத்தில் தெற்கு வடக்காகவும், கிழக்கு மேற்காகவும் தொடர்ந்து 13 அறைகள் (பிரிவுகள்) கொண்டு கட்டப் ட்டுள்ள ஒரு மண்டபம் காணப்படுகிறது. நாங்கூர் கருடசேர்வை உற்சவத்தின் போது 11 திருமால் திருமேனிகளும் திருமங்கையாழ்வார், மணவாளமாமுனிகள் ஆகிய திருமேனிகளுமாக 13 உற்சவ மூர்த்திகளும் இவ்விடத்தில் வந்து ஆராதனை செய்யப்பட்டு வீதியுலா நடைபெறும். இம்மண்டபத்தை 28 கருங்கல் தூண்கள் தாங்கிநிற்கின்றன. இம்மண்டபம் பிற்காலத்ததாகும்.

கருடாழ்வார் சந்நிதியின் வலதுபுறத்தில் வடக்கு நோக்கி பரசாலன் மண்டபம் உள்ளது இம்மண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். கோயிலின் எதிர்ப் புறத்தில் இந்திர புஷ்கரணிக்குளம் உள்ளது.

கட்டட அமைப்பு

பிரணவ விமான அமைப்பான இக்கோயில் கிழக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. நாராயணப்பெருமாள் சந்நிதியின் உண்ணாழியிலிருந்து அர்த்தமண்டபம் வரை நீளம் 19.70 மீட்டர். அகலம் 14.75 மீட்டர். அர்த்தமண்டபத்தை 12கருங்கல்தூண்கள் தாங்கிநிற்கின்றன. இதன் உள் அளவு நீளம் 11-15 மீ. அகலம் 9.50 மீ. மகாமண்டபத்தின் வெளி அளவு நீளம் 12.25 மீட்டர். அகலம் 11 95 மீட்டர் ஆகும். இம்மண்டபத்தை 14 கருங்கல்தூண்கள் தாங்கி நிற்கின்றன, இம்மண்டபத்தின் நீளம் 8.60 மீட்டர், அகலம் 11.95 மீட்டர். இம்மண்டபம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.

தாயார் சந்நிதி

இக்கோயில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் புண்டரீகவல்லித் தாயார் சந்நிதி உள்ளது. இச்சந்நிதி கருவறை, இடைக்கட்டு, அர்த்தமண்டபம் கொண்டு கட்டப் பட்டுள்ளது. கருவறை உபானம், அதிட்டானம், சுவர் பிரஸ்தரம், கிரீவம், சிகரம் ஸ்தூபி ஆகிய அமைப்புகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. உபானம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் வெளி அளவு 3.90 மீட்டர். கருவறை சதுர வடிவமானது. அர்த்தமண்டபத்தின் வெளி அளவு நீளம் 7.60. மீட்டர் அகலம் 5 20 மீட்டர்.

சிற்பங்கள்

கருவறையில் பத்ரி நாராயணப் பெருமாள் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். முன்னிரு கரங்கள் அபய வரத முத்திரைகளிலும், பின்னிருகரங்கள் சக்கரம் சங்கு பற்றியும்

உள்ளன. பெருமாளின் இருபுறங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்கள் கி.பி.9-10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச் சோழர் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

துவாரபாலகர் சிற்பங்கள்

கருவறைக்குச் செல்லும் வாயிலில் அர்த்தமண்டபத்தின் சுவரின் வலது, இடது புறங்களில் இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. வலதுபுறத்திலுள்ள துவாரபாலகர் நின்ற நிலையில் உள்ளார். இவரது முன் வலது கரம் சூசி முத்திரையிலும் (சுட்டிக்காட்டும் கை) இடது கரம் கதை மீது வைத்தும் காணப்படுகின்றன. பின்னிருகரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. தலையில் கிரீட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில்-மாலையும், வயிற்றில் உதரபந்தமும், தோள்வளையும்' கேயூரமும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. இச்சிற்பம் கி. பி 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச்சோழர் கலைப்படைப் பாகும். இடதுபுறத்துவாரபாலகர் நின்ற நிலையில் முன் வலதுகரம் கதைமீது வைத்தும், இடது கரம் சூசிமுத்திரை காட்டியும் உள்ளார். பின்னிரு கரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. தலையில் கிரீடமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில மாலையும், வயிற்றில் உதரபந்தமும், தோள்வளையும், கேயூரமும், கைகளில் காப்பும், கால்களில் கழலும், பாதசரமும் அணிசெய்கின்றன. இச்சிற்பம் கி. பி, 9 10 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த சோழர் கலைப்படைப் பாகும்.

அர்த்தமண்டபச் சிற்பங்கள்

அர்த்தமண்டபத்தில் திருமங்கையாழ்வார், நந்தாவிளக்குப்பெருமாள், அலத்துக்கரியா, நம்மாழ்வார் மணவாள மாமுனிகள், திருக்கோட்டியூர் நம்பிகள் ஆகியோரின் சிற்பங்கள் உள்ளன.

திருமங்கையாழ்வார்

திருமங்கையாழ்வார் நின்ற கோலத்தில் இரு கரங்களையும் குவித்து அஞ்சலித்த நிலையில் காணப்படுகின்றார். கீழ்நோக்கி சரிந்த காதுகளும், கழுத்தில் துளசி மாலையும் உள்ளன. இச்சிற்பத்தின் உயரம் 85 செ மீ. அகலம் 25 செ.மீ. காலம் கிபி 16-17 ஆம் நூற்றாண்டாகும்.

நந்தாவிளக்குப்பெருமாள்

இச்சிற்பம் பின்னிரு கரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. முன்னிரு கரங்கள் அபய, ஊரு முத்திரைகளில் உள்ளன இச்சிற்பத்தின் உயரம் 60 செ.மீ. அகலம் 20 செ.மீ இச்சிற்பம் கி.பி. 16—17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கலைப்படைப்பாகும்.

அலத்துக்கரியா

இச்சிற்பம் வலது காலைக் கீழே தொங்கவிட்டு, இடது காலை மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. முன் வலது கரம் அபய முத்திரையிலும், முன் இடது கரம் கதையைப் பற்றியும் உள்ளது. பின்னிரு கரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. தலையில கிரீட மகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும், மார்பில் முப்புரிநூலும், வயிற்றில் -

உதரபந்தமும், இடுப்பிலிருந்து கால்வரை வரி, வரியான அலைகளையொத்த ஆடையும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணி செய்கின்றன, இச்சிற்பத்தின் உயரம் 40 செ மீ அகலம் 20செ மீ. இச்சிற்பத்தின் காலம் கி.பி 16-17 ஆம் நூற்றாண்டாகும்.

நம்மாழ்வார்

அமர்ந்த நிலையில் இரு கரங்களையும் குவித்து அஞ்சலித்த நிலையில் காணப்படுகின்றார். வழித்த தலை-யும், நீண்ட காதுகளும் காணப்படுகின்றன. கழுத்தில் துளசிமாலையும், வலதுதோளில் விசிறிக்கொடியும் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உயரம் 55செ.மீ. அகலம் 25.செமீ. இச்சிற்பம் கி பி 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் காலக் கலைப்படைப்பாகும்.

மணவாள மாமுனிகள்

இரண்டு கால்களையும் மடக்கி வைத்து தியான நிலையில் இச்சிற்பம் காணப்படுகிறது. இரு கரங்களையும் குவித்து அஞ்சலித்த நிலையில் காணப்படுகின்றார். வழித்த தலையும் நீண்ட காதுகளும், கழுத்தில் துளசிமாலையும் காணப்படுகிறது இச்சிற்பத்தின் உயரம் 30 செ.மீ. அகலம் 20 செ.மீ. காலம் கி பி 16-17 ஆம் நூற்றாண்டாகும்.

திருக்கோட்டியூர் நம்பிகள்

செவ்வக வடிவ பத்ரபீடத்தின் மீது இரண்டு கால்களையும்மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் இச்சிற்பம் காணப்படுகிறது. வலது கரம் சின்முத்திரையிலும், இடது கரம் சுவடியைப் பற்றியுமுள்ளன வழித்த தலையும் மார்பில்

பூட்பிரிநூலும், வயிற்றில் உதரபந்தமும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 50 செ மீ. அகலம் 20 செ மீ. காலம் கி.பி, 16-17 ஆம் நூற்றாண்டாகும்.

சேனை முதலியார்

திருவுண்ணாழி செல்லும் வழியில் வடக்குப் புறத்தில், தெற்குத்திசை நோக்கி அமர்ந்த நிலையில் இச்சிற்பம் காணப்படுகிறது. பின்னிருகரங்கள சக்கரம், சங்கு பற்றியுள்ளன, முன் வலதுகரம் அபயமுத்திரையிலும் முன் இடது கரம் கதையையும் பற்றியுள்ளது. தலையில் கிரீட மகுடமும் காதுகளில் மகரகுண்டலங்களும், கண்டசரம், முப்பிரிநூல், உதரபந்தம், ஒட்டியாணம், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 85செ.மீ. அகலம் 40 செ.மீ. காலம் கி.பி, 16 17 ஆம் நூற்றாண்டாகும்.

அர்த்தமண்டபத்தின் வலதுபுறத்திலுள்ள ஒரு தூணில் வடக்கு நோக்கி அஞ்சலித்த நிலையில் கருடன் சிற்பமும் அதன் நேர் இடதுபுறத்தில் உள்ள தூணில் அஞ்சலித்த நிலையில் அனுமன் சிற்பமும் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் கி.பி 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கலைபபாணி ஆகும்.

செப்புத்திருமேனிகள்

நாராயணப் பெருமான், ஸ்ரீதேவி, பூதேவி செப்புத் திருமேனிகள் கருவறையில் உள்ளன. நம்மாழ்வார்-உயரம் 45 செ. மீ. அகலம் 20 செ. மீ. திருமங்கையாழ்வார்-உயரம் 70 செ. மீ. அகலம் 20 செ. மீ. திருக்கோட்டி நம்பி உயரம்

45 செ. மீ. அகலம் 15 செ. மீ. மணவாள மாமுனிகள் -உயரம் 40 செ. மீ. அகலம் 15 செ. மீ. உடையவர்-உயரம் 40 செ. மீ. அகலம் 15 செ, மீ. இச்செப்புத்திருமேனிகள் இக்கோயில் அர்த்தமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன புண்டரீகவல்லி தாயார் செப்புத்திருமேனி கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் காலக் கலைப்-படைப்பாகக் கருதலாம்.

மரச்சிற்பங்கள்

இக்கோயிலில் கருடன், யானை, குதிரை, ஆதிசேஷன், அனுமன், யாளி. பிரபை, பல்லக்கு போன்ற மரவாகனச் சிற்பங்கள் உள்ளன.

கல்வெட்டுகள்

இக்கோயில் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை (Annual Report On Indian Epigraphy) 1951—52பி 153, 154, 155, எண்களில் வெளிவந்துள்ளன இரண்டு கல்வெட்டுகள் பரகேசரி கல்வெட்டுகளாகும். இவ்விரண்டு கல்வெட்டுகளும் பரகேசரி என்ற பட்டத்தை வைத்துக் கொண்ட முதலாம் பராந்தகச் சோழனைக்-குறிப்பதாகும். மற்றொரு கல்வெட்டு தெலுங்கு எழுத்தில் உள்ளது. கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்.

பராந்தகன் கல்வெட்டுகள்

சோழமன்னர்கள் இராஜகேசரி, பரகேசரி என்ற பட்டங்களைத் தங்கள் பெயர்களுடன் சேர்த்து வைத்துக்-கொள்வார்கள். பல கல்வெட்டுகளில் இப்பட்டங்கள்

காணப்பட்டாலும் மன்னர்களின் பெயர்கள் வருவது குறைவே. மதிரை கொண்ட பரகேசரி, மதிரையும் ஈழமும் கொண்ட பரகேசரி என்ற தொடருன் வந்தால் அக்கல்வெட்டு முதலாம்பராந்தகச்சோழனின் கல்வெட்டாகும் இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் பரகேசரி வர்மன் என்று வருவதால் பராந்தக சோழனின் கல்வெட்டுகளாகக் கருதலாம். ஆதித்தசோழன் கி. பி. 907-இல் இறந்தவுடன் அவன் புதல்வனாகிய முதற் பராந்தகசோழன் தஞ்சை மாநகரில் சோழநாட்டிற்கு அரசனாக முடிசூட்டப்பெற்றான். இவனது ஆட்சியாண்டு கி. பி. 907 முதல் 953 வரை ஆகும். பராந்தகச் சோழனின் கல்வெட்டொன்று நாராயணப் பெருமாள் கோயிலின் அர்த்தமண்டபத்தில் உள்ளது. இக்கல்வெட்டு இவனது இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். (ARE 1951-52B, 154) இக்கல்வெட்டில் இக்கோயில் திருமணிமாடக்கோயில் என்று குறிக்கப்படுகிறது. திருமங்கையாழ்வார் இக்கோயிலை மணிமாடக் கோயில் என்று தனது பாடலில் குறிப்பிடுகின்றார். திருமணிமாடக் கோயில் பெருமாளுக்கு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு 40 காசுகளுக்கு சோமன் தத்தனிடமிருந்து நிலம் விலையாகப்பெற்று, இக்கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டச் செய்தி இக்கல்வெட்டால் தெரிய வருகின்றது. பராந்தகச்சோழனின் மற்றொரு கல்வெட்டில் (ARE 1951-52B, 155) தெரிவிக்கின்றது. திருமணிமாடக்கோயில் நிவந்தங்களுக்கும், அர்த்தசாமபூசைக்கும் 40 காசுகளுக்கு சோமன் தத்தனிடமிருந்து நிலம் விலையாகப்பெற்று, இந்நிலம் இக்கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

அர்த்தஜாமபூஜை

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் அர்த்தஜாமபூஜை என்பது சாயரட்சை வேளை பூஜை முடிந்து மூன்றே முக்கால் நாழிகையில் நடக்கும் இரண்டாங்கால பூஜையை அடுத்து மூன்றே முக்கால் நாழிகையில் நடக்கும் பூஜையாகும். இப்பூஜை இருவகைப்படும். ஒன்று போகாங்கம் மற்றது லயாங்கம். போகாங்கப்பூஜை உலக உற்பத்திமுறையை அறிவிப்பதாகும். அது திருவனந்தலி-லிருந்து உச்சிக்காலம் வரை உலகவளர்ச்சி முறையைக் காட்டும் நடையாகும். லயாங்கப்பூசை ஒன்றாதலை நடைமுறையாகக் கொண்டது. அதில் திருவந்திக்-காப்பிலிருந்து விரிந்த நிலையிலிருந்து ஒடுங்கிக் கொண்டு வந்து அர்த்தசாமத்தில் சிவத்தோடு சக்தி சேர்த்து-வைக்கும் வழிபாடாகும். இப்பூசையின் போது மணியோசை, தாளம், கற்பூரஆரத்தி முதலியன இடம்பெறும் [2]

நாயக்கர் கல்வெட்டு

தெலுங்கு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு கி பி 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் காலத்து கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் காடு-வெட்டியாரப்பா என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது (ARE 1951-52 B 153).

திருவிழாக்கள்

இக்கோயிலில் சித்திரைத்திங்களில் (ஏப்ரல்-மே) பத்து நாட்களுக்கு பிரம்மோற்சவம் நடைபெறும். ஆவணித் திங்களில் (ஆகஸ்ட்-செப்டம்பர்) பரிதோட்சவம் ஐந்து

காலபூசை நடைபெறும். தைத்திங்களில் (ஜனவரி) ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து திருமங்கையாழ்வார் மங்களாசாசன வைபவ விழா நடைபெறுகின்றது. இக்கோயிலுக்கு 25.38 ஏக்கர் மொத்த நிலம் உள்ளது. அதனில் 17.30 ஏக்கர் புன்செய் நிலம். இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் பராமரிப்பில் செயல்பட்டு வருகிறது.

புருஷோத்தமன் கோயில்

இக்கோயில் சீர்காழி செல்லும் சாலையில் இடதுபுறத்தில் அமைந்துள்ளது. கருவறையில் புருடோத்தமன் என்ற பெயருடன் திருமால் காணப்படுகின்றார். தமிழ்நாட்டில் திருமாலுக்குப் புருடோத்தமன் என்ற பெயருடன் கோயில் விளங்கும் இடம் திருநாங்கூர் ஒன்றே.[3] தாயார் புருடோத்தமநாயகி. வியாக்கிரபாத முனிவரின் குழந்தை உபமன்யு அழுதபோது பாற்கடலினின்று அக்குழந்தைக்குப் பாலமுது ஊட்டியவள். புருடோத்தமன் கோயிலுக்கு வடக்கே திருப்பாற்கடல் என்ற பெரிய குளம் ஒன்று உள்ளது. சீர்காழி வட்டத்திலேயே இது பெரிய குளமாகும். குமேதஸ் என்பவன் புருடோத்தமரை வழிபட்டு வித்தையும், ஞானமும் பெற்றான் என்றும், புருடோத்தமர் மேதாப்பிரதரென்றும், வித்யாபிரதர் என்றும் பராசவனப்புராணம் புகழ்கிறது.

திருமங்கையாழ்வார் பாடலில்

கோங்கமா அரும்புகள் மங்கையரின் கொங்கைகள் போலும். குமுதங்கள் செவ்விதழ்கள் போலும், பதுமங்கள் முகங்கள் போலும் விளங்கி நாங்கூர்ச் சோலை பெண்ணாகக் காட்சித் தருகின்றது என்று திருமங்கையாழ்வார் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

“கொங்கை கோங்கவை காட்ட
வாய் குமுதங்கள் காட்ட மாபதுமங்கள்
மங்கைமார் முகங்கள் காட்டிடும்
நாங்கூர் வண்புருடோத்தமமே”[4]

திருமங்கையாழ்வார் புருடோத்தமனை இராமனாகக் கொண்டு பாடிய பாடல் பின்வருமாறு,

“கம்பமா கடலடைந்து இலங்கைக்கு
மன்கதிர் முடியவை பத்தும்
அம்பினால் அறுத்துஅரசு அவன் தம்பிக்கு
அளித்தவன் உறைகோயில்
செம்பலா நிறை செண்பகம் மாதவி
சூதகம் வாழைகள் சூழ்
வம்புலாங் கமுகு ஓங்கிய
நாங்கூர் வண்புருடோத்தமமே”[5]

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்

சாய்ந்த திருவரங்கம் தண்வேங்கடம் குடந்தை
ஏய்ந்த திருமாலிருஞ் சோலை-பூந்துவரை
வண்புரு டோத்தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புரு டோத்தமன் தன் ஊர்

என்று பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் தனது நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதிப் பாடலில் திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, துவாரகை ஆகிய திருப்பதிகளுக்கு இணையான திருப்பதியாக நாங்கூர் புருடோத்தமன் கோயிலைக் குறித்துள்ளார்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, இடைக்கட்டு, அர்த்த மண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுமதில் ஆகியனது கொண்டு கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

அர்த்தமண்டபத்தின் இடதுபுறத்தில் சேனைமுதலியார் சந்நிதியும், திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் புருடோத்தமநாயகி சந்நிதியும், திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் சக்கரவர்த்தித் திருமகன் சந்நிதியும் உள்ளன. இதற்கு முன்புறம் கருடாழ்வார் சந்நிதியும், கருடாழ்வார் சந்நிதிக்கு உட்புறத்தில் மணவாள மாமுனிகள் மண்டபமும் காணப்படுகின்றன. சோபான மண்டபத்தில் கிழக்கு, வடக்கு நோக்கி இரண்டு அனுமன் சந்நிதிகள் உள்ளன.

கருவறை உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய அமைப்புகளுடன் விளங்குகிறது. கருவறையின் வெளிஅளவு கிழக்கு மேற்காக 5-15 மீட்டரும் தென்வடலாக 5-55 மீட்டரும் ஆக அமைந்துள்ளது.

அதிட்டானத்தில் ஜகதி, கண்டம், முப்பட்டைக்குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம், வேதிகை போன்ற அமைப்புகள் உள்ளன. சுவர்ப்பகுதியில் அரைத்தூண்கள் காணப்படுகின்றன. இந்த அரைத்தூண்கள் கால், கலசம், பலகை, பத்மம் போன்ற அமைப்புகளுடன் வடிக்கப்பட்டுள்ளன. தேவகோட்ட மாடங்களில் இருபுறங்களிலும் அரைத்தூண்கள் காணப்படுகின்றன. மேல்பகுதி சாலை வடிவில் அமைந்துள்ளது.

விமானத்தின் கழுத்துப் பகுதியில் தென்புறத்தில் நரசிங்கமூர்த்தி உருவமும், மேற்குப் புறத்தில் திருமால் உருவமும், வடக்குப்புறத்தில் ரெங்கநாதர் உருவமும் சுதை உருவங்களாக வடிக்கப் பெற்றுள்ளன. சிகரத்தில் மேற்குத் திசையில் திருமாலுக்கு மேல்புறத்தில் நர்த்தனக்கிருஷ்ணன் உருவமும், ரெங்கநாதர் உருவத்திற்கு மேல்புற மாடத்தில் இரண்டு மாடுகளுடன் வேணுகோபாலன உருவமும் சுதையினால் அமைக்கப்பெற்றுள்ளன.

அர்த்தமண்டபத்தின் வெளி அளவு நீளம் 8.55 மீட்டர். அர்த்தமண்டபத்தை 4 கருங்கல்தூண்கள் தாங்கிநிற்கின்றன. 16 கருங்கல்தூண்கள் மகாமண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. இம்மண்டபத்தின் வெளி அளவு நீளம் 12.15 மீட்டர்.

சிற்பங்கள்

கருவறையில் புருடோத்தம்மன் அருகில் ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்கள் உள்ளன. ஆண்டாள் சிற்பமும் கருவறையில் உள்ளது இச்சிற்பங்கள் கி பி 16-17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். அர்த்தமண்டபத்தின் இடதுபுறத்தில் ஆண்டாள் நின்ற நிலையில் இடது கரம் கீழே தொங்கும் கரமாகவும், வலது கரம் தாமரை மலர் பற்றியுமுள்ளது. இச்சிற்பம் கி பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். ஆண்டாள் வாழ்ந்த காலம் கி பி.8-9ஆம் நூற்றாண்டாகும் மகாமண்டபத்தில் சேனைமுதலியார், உடையவர், நம்மாழ்வார் சிற்பங்கள் உள்ளன. இவை கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கலைப்பாணியாகும்.

புருடோத்தம நாயகி சந்நிதி

இச்சந்நிதி கருவறையின் தென்மேற்கு மூலையில் கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இச்சந்நிதியின் அர்த்தமண்டபத்தை 10 கருங்கல் தூண்கள் தாங்கி நிற்கின்றன. அர்த்தமண்டபத்தின் நீளம் 9.25 மீ அகலம் 8-65 மீட்டர். புருடோத்தம நாயகி அமர்ந்த கோலத்தில் முன்னிருகரங்கள் அபய, வரத முத்திரைகளிலும் பின்னிருகரங்களில் மலர்ந்த தாமரை மலர்களைப் பற்றியுமுள்ளார். இச்சிற்பத்தின் காலம் கி.பி.16-17 ஆம் நூற்றாண்டாகும்.

சக்கரவர்த்தித் திருமகன் சந்நிதி

திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் இச்சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் இராமர், இலக்குவன, சீதை ஆகிய சிற்பங்கள் உள்ளன.

இராமர் சதுரவடிவான பத்ர பீடத்தின்மீது நின்ற நிலையில் வலதுகரத்தில் அம்புபற்றியும், இடதுகரத்தில் வில்லினைப்பற்றியும் உள்ளார். வலதுபுறத்தில் சீதை நின்ற கோலத்தில் வலதுகரம் தொங்கும் கர்மாகவும் இடதுகரம் தாமரைமலர் பற்றியும் காணப்படுகிறாள். இலக்குவன் நின்ற கோலத்தில் இடதுகரம் வில்லினைப்பற்றியும், வலதுகரம் அம்பு பற்றியும் உள்ளார். இச்சந்நிதியின் இடதுபுறத்தில் மேற்கு நோக்கி அனுமன்சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இச்சிற்பங்கள் கி. பி 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

இங்கு புருடோத்தமன், புருடோத்தமநாயகி, மணவாள மாமுனிகள், சேனைமுதலியார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர், இராமன், இலக்குவன், சீதை ஆகிய செப்புத்திருமேனிகள் உள்ளன. இவற்றின் காலம் கி.பி 18 ஆம் நூற்றாண்டாகும். சந்திரபிரபை, குதிரை, யானை, அரவம், யாளி, அனுமன், கருடன், அனைம் போன்ற வாகனங்கள் மரச்சிற்பங்களாக உள்ளன 9—7—1989 அன்று இக்கோயிலுக்கு மகாகுப்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

வைகுந்தப்பெருமாள் கோயில்

இக்கோயில் நாங்கூர் வடக்கு வீதியில அமைந்துள்ளது ஹிம்சகன் என்னும் வேடன் இங்குள்ள திருக்குள நீரைப் பருகித் தம் தீச்செயலொழிந்து அறம்புரிந்தான. ஆதலின்

இங்கு கோயில் கொண்டுள்ள வைகுண்டநாதர் தர்மப்ரதர் ஆவார் என்று பராசவனப்புராணம் குறிப்பிடுகின்றது வைகுந்தப் பெருமாளுக்கு பரமபதநாதர், தாமரைக்கண் நெடியபிரான் என்ற பெயர்களும் உள்ளன.

திருமங்கையாழ்வார்பாடலில்

திருமங்கையாழ்வார் இக்கோயிலைப்பற்றி பெரிய திருமொழியில் (3-8-1) பாடியிருக்கின்றார். அப்பாடல்,

"சலங்கொண்ட இரணியன் தகல்மார்வம் கீண்டு
தடங்கடலைக் கடைந்தமுதங் கொண்டுகந்த காளை
நலங்கொண்ட கருமுகில்போல் திருமேனியம்மான்
நாடோறும் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்
சலங்கொண்டு மலர்சொரியும் மல்லிகைஒண் செருத்தி
சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலி னூடே
வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே"

என்பதாகும்.

நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் தனது நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் இக்கோயில் வைகுந்தநாதரைக் கீழ் கண்டவாறு பாடியுள்ளார்.

"வணங்கேன் பிறதெய்வம் மாலடியரல் அல்லாக்
குணங்கெடர் தங்களுடன் கூடேன்—இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவேன் ஈதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு"

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, இடைக்கட்டு, திருவுண்ணாழி அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்று சந்நிதி, திருச்சுற்றுமதில் ஆகியவற்றுடன் கிழக்குநோக்கி அமைந்துள்ளது இக்கோயில் விமானம் ஆநந்தவார்த்-தன விமானமாகும். கோயிலுக்கு எதிரே காணப்படுவது உதங்க தீர்த்தம். இதற்கு லெட்சுமிபுஷ்கரணி என்ற பெயரும் உண்டு. தனிச்சந்நிதியிலுள்ள தாயாருக்கு வைகுந்தவல்லி என்று பெயர்.

உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் போன்ற அமைப்புகளுடன் கருவறை விளங்குகிறது. சிகரம் சாலை வடிவில் அமைந்துள்ளது. விமானத்தின் கிரீவப்பகுதியில் தென்புறத்தில் நரசிம்மர் உருவமும், மேற்குப்புறத்தில் ரெங்கநாதர் உருவமும், வடக்குப்புறத்தில் வைகுந்தநாதர் உருவமும் சுதையில் வடிக்கப்பட்டுள்ளன. கருவறையின் வெளிஅளவு நீளம் 5.10 மீட்டர். அகலம் 5.45 மீட்டர் ஆகும். கருவறையைச் சுற்றியுள்ள திருவுண்ணாழியை 10 கருங்கல் தூண்கள் தாங்கிநிற்கின்றன. இத்தூண்கள் எவ்வித வேலைப்பாடு-மின்றி எளிமையாக வடிக்கப்பட்டுள்ளன.

அர்த்தமண்டபத்தின் வெளி அளவு அகலம் 12.10 மீட்டர் ஆகும். இக்கோயில் மகாமண்டபத்தை 8 கருங்கல் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் மிக எளிமை-யாக வடிக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் உள் அளவு நீளம் 11.30 மீட்டர். அகலம் 10 மீட்டர்.

கருவறைச் சிற்பங்கள்

கருவறையில் வைகுந்தநாதர் தாமரைப் பீடத்தின் மீது வலதுகாலை மடக்கி குத்திட்டு வைத்து இடதுகாலைக் கீழே தொங்கவிட்டு அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். வலதுகரத்தை வலதுகால் வழியாகக் கீழே தொங்க விட்டும், இடதுகரம் அரவத்தின் மேல் வைத்தும் காணப்படுகிறார். பின்னிருகரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. தலைக்குப் பின்புறம் ஐந்து தலைகள் கொண்ட ஆதிசேஷன் படம் எடுத்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. தலையில் கிரீட மகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும், தோளில் கேயூரமும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணி செய்கின்றன.

வைகுந்தரின் வலதுபுறத்தில் ஸ்ரீதேவி வலது காலைக் கீழே தொங்கவிட்டு இடது காலை மடித்து வைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். வலதுகரம அபயமுத்திரையிலும், இடது கரம் தாமரை மலர் பற்றியுமுள்ளது. தலையில கரண்ட மகுடமும் காதுகளில் மகர குணடலங்களும், கைகளில் காப்பும், காணப்படுகின்றன. மார்புக்கச்சை கட்டப் பட்டுள்ளது. வைகுந்தரின் இடதுபுறத்தில் இச்சிற்பம் இடது காலைக் கீழே தொங்கவிட்டு, வலது காலை மடித்து வைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகிறது வலது கரம் தாமரைமலர் பற்றியும், இடது கரம் வரத முத்திரையிலும் காணப்படுகிறது. தலையில் கரண்டமகுடமும், கழுத்தில் மூன்று வகை மாலைகளும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன மார்புக்கச்சை கட்டப்பட வில்லை. வைகுந்தப்பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி. சிற்பங்கள் கி. பி 16-17 ஆம் நூற்றாண்டைச். சார்ந்த நாயக்கர் கலைப்படைப்புகளாகும்,

கருவறையில் பூதேவி அருகில் ஆண்டாள் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள் வலதுகரம் தாமரைமலர் பற்றியும், இடதுகரம் வரதமுத்திரையிலும் உள்ளன.

மகா மண்டபச்சிற்பங்கள்

மகாமண்டபத்தின் இடதுபுறத்தில் தெற்குத்திசை நோக்கி நம்மாழ்வார், சக்கரத்தாழ்வார் சிற்பங்கள் உள்ளன. நம்மாழ்வார் இரண்டுகால்களையும் மடக்கிவைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இரண்டு கரங்களும் குவித்து அஞ்சலித்த நிலையில் காட்டப்பட்டுள்ளன. தலையில் கொண்டையும், கழுத்தில் துளசிமாலையும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 40 செ.மீ அகலம் 20 செ,மீ இச்சிற்பம் கி பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கலையாகும்.

செப்புத் திருமேனிகள்

வைகுந்தநாதர் ஸ்ரீதேவி, பூதேவி, நவநீதக்கிருஷ்ணன், ஆண்டாள், சக்கரத்தாழ்வார் ஆகிய செப்புத்திருமேனிகள் இக்கோயில் கருவறையில் உள்ளன. நம்மாழ்வார் கற்சிற்பத்தின் அருகில் நம்மாழ்வார் செப்புத் திருமேனி உள்ளது. இததிருமேனி கி.பி 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

செம்பொன் அரங்கர் கோயில்

இக்கோயில் இவ்வூர் கீழவீதியில் உள்ளது. இக்கோயிலில் 3 நாட்கள் தங்கி நித்யபுஷ்பகரணியில் குளித்து முறைப்படி 32,000 முறை தியானம் செய்தவர்களுக்கு சகலஐஸ்வரியங்களும் கிடைக்கும். இது புதையல் காட்டும்

பொன் அரங்கர் கோயில் என்றும், அல்லிமாமலராள் தாயார் அல்லல் தீர்த்த இடம் என்றும், இவ்வூர் மக்களால் இக்கோயில் கருதப்படுகிறது.[6]

இராமர் இராவண சம்காரத்தால் ஏற்பட்ட பிரம்ம-ஹத்திதோஷ நிவர்த்திக்காக இங்கு யாகம் செய்து 1000 பாரம் எடையுள்ள தங்கப்பசு செய்து அதனுள் 5 நாட்கள் கர்ப்பவாசம் செய்து அப்பசுவைத்தானம் செய்து பின்னர் இத்தலத்தைப் பொன்னாற் செய்து வழிபட்டார் என்பது புராணம்[7]. காஞ்சியைச் சேர்ந்த முகுந்தன் என்னும் அந்தணச் சிறுவன் இங்கு வந்து தன் வறுமை தீர நாராயண மந்திரத்தை 33,000 முறை ஜபம் செய்து குரங்குபுத்தூர் என்னுமிடத்தில் திருடர்கள் மறைத்து வைத்திருந்த பொருளைப் பேரருளாளன் துணையால் பெற்றான் என்று பராசவனப்புராணம் கூறுகிறது.

திருமங்கையாழ்வார் பாடலில்

"நளங்கனிவண்ணா! கண்ணனே! என்றன்
  கார்முகிலே! என நினைந்திட்டு
உளங்கனிந் திருக்கு மடியவர் தங்கள்
  உள்ளத்து ளூறிய தேனே!
தெளிந்த நான் மறையோர் நாங்கைதன் னடுவுள்,
  செம்பொன்செய் கோயிலினுள்ளே,
வளங்கொள்பே ரின்பம் மன்னிநின்றனை!
  வணங்கிநான் வாழ்ந் தொழிந்தேனே"[8]

இப்படித் திருமங்கையாழ்வார் செம்பொன்னரங்கரை இராம-னாகவும், கண்ணனாகவும் கொண்டு பாடி இருக்கின்றார். முன்னவர். ந. சுப்புரெட்டியார் அவர்கள் 'சோழநாட்டுத்

திருப்பதிகள்' என்ற நூலில் இக்கோயில் நாங்கூர் 11 திவ்ய தேசங்களின் மையமான கோயில் என்ற சிறப்பையும் எடுத்துக் கூறி இருக்கின்றார்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, திருவுண்ணாழி, அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுச் சந்நிதிகள், திருச்சுற்று மதில் ஆகிய அமைப்புகள் கொண்டு விளக்குகின்றது. கருவறை உபானம், அதிட்டானம், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய அமைப்புகளுடன் காணப்படுகிறது. கிரீவப்பகுதியில் தெற்குப்புறத்தில் தெற்குத்திசை நோக்கி நரசிங்கப்பெருமாள் உருவமும்' மேற்குப் புறத்தில் ரெங்கநாதர் உருவமும், வடக்குப் புறத்தில் வைகுந்தநாதர் உருவமும், சுதை உருவங்களாக வடிக்கப் பெற்றுள்ளன. கருவறையின் வெளி அளவு நீளம் 4 85 மீட்டர், அகலம் 5.30 மீட்டர் கொண்டது. திருவுண்ணாழி முதல் கருவறை, அர்த்த மண்டபம் வரை வெளி அளவு நீளம் 14.80 மீட்டர் (தெற்கு) அகலம் 15.80 மீட்டர் ஆகும். அர்த்தமண்டபத்தின் உள் அளவு நீளம் 3.80 மீட்டர் அகலம் 2.40 மீட்டர் ஆகும்.

மகாமண்டபத்தை 10 கருங்கல்தூண்கள் தாங்கி நிற்கின்றன இத்தூண்கள் எவ்வித வேலைப்பாடின்றி எளிமையாக வடிக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் உள் அளவு நீளம் 9-30 மீட்டர் அகலம் 9-60 மீட்டர் ஆகும். வெளி அளவு நீளம் 10-80 மீட்டர். அகலம் 11 90 மீ. ஆகும் மகாமண்டபத்தின் வலதுபுறத்திலுள்ள ஐந்தாவது தூணில் கி பி 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டொன்று உள்ளது.

அல்லிமாமலராள்

இச்சந்நிதி திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு காணப்படுகிறது கருவறை, உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆகிய அமைப்புகளுடன் விளங்குகிறது. கருவறை வெளி அளவு 4.40 மீட்டர் சதுரமாகும். அர்த்தமண்டபத்தின் நீளம் 4.40 மீட்டர். அகலம் 3,80 மீட்டர் ஆகும். அல்லிமாமலராள் சிற்பம் அமர்ந்த நிலையில் முன்னிரு கரங்கள் அபய, வரத முத்திரைகளிலும், பின்னிரு கரங்கள் தாமரை மலர்களைப் பற்றியுமுள்ளன. இச்சிற்பம் கி பி. 16-17 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த கலைப்படைப் பாகும்.

சிற்பங்கள்

இக்கோயில் கருவறையில் பேரருளாளன் நின்றநிலையில் நான்கு கரங்கள் கொணடு காணப்படுகின்றார். முன் வலது கரம் அபய முத்திரையிலும், இடதுகரம் கதைமீது வைத்தும் காணப்படுகிறது. பின்னிரு கரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. இச்சிற்பத்தின் அருகில் வலதுபுறத்தில் ஸ்ரீதேவி நின்றகோலத்தில் வலது கரம் தொங்கும் கரமாகவும், இடதுகரம் தாமரைமலர் பற்றியும் காட்சி தருகிறார். பெருமாளின் இடதுபுறத்தில் பூதேவி நின்ற கோலத்தில் வலதுகரம் தாமரைமலரைப் பற்றியும், இடதுகரம் தொங்கும் கரமாகவும் காட்சி தருகிறார் இச்சிற்பங்கள் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கலைப்படைப்பாகும்.

மகாமண்டபத்தில் வடக்குப்புறத்தில் தெற்குநோக்கி நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் சிற்பங்கள் காணப்படுகின்றன.

நம்மாழ்வார் சிற்பம் செவ்வகவடிவ பீடத்தில் வலது காலையும், இடதுகாலையும் மடித்துத் தியான நிலையில் அமர்ந்து காணப்படுகிறது. வலதுகரம் அபயமுத்திரையிலும். இடதுகரம் இடதுதொடைமீது வைத்தும் காணப்படுகின்றன இச்சிற்பத்தின் உயரம் 45 செ.மீ. அகலம் 20 செ.மீ. காலம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டாகும்.

திருமங்கையாழ்வார் சிற்பம் பீடத்தின்மீது நின்றநிலையில் இருகரங்களையும் குவித்து அஞ்சலித்த நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உயரம் 40 செ.மீ ஆகும். காலம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டாகும்.

இக்கோயிலில் செம்பொன்னரங்கர், ஸ்ரீதேவி, பூதேவி, ரெங்கநாதர், ரெங்கநாயகி, அழகியசிங்கர், (ஆச்சாரியார்) செப்புத்திருமேனிகள் உள்ளன. இத்திருமேனிகள் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். திருநாங்கூர் கருடசேர்வை உற்சவத்தின்போது செம்பொன்னரங்கர் மரத்தாலான கருடவாகனத்தில் வீதியுலாவாக கொண்டு வரப்படுவார். அதற்கென இங்கு மரத்தாலான கருடவாசனம் ஒன்றும் உள்ளது.

கல்வெட்டு

மகாமண்டபத்தில் ஒரு தூணில் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க்கல்வெட்டொன்று உள்ளது. இக்கல்வெட்டின் தொடக்கம் காணப்படவில்லை, கடைசி வரிகளான சாட்சிகளின் பெயர்கள் மட்டுமே காணப்படுகின்றன. இக்கோயிலில் திருப்பணி செய்தபோது தொடக்கக் கல்வெட்டு சிதைந்திருக்கலாம்.

பள்ளிகொண்ட பெருமாள் கோயில்
(திருத்தெற்றியம்பலம்)

இக்கோயில் நாங்கூர் கீழவீதியிலிருந்து மேற்கே செல்லும் சாலையில் ½ கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதனைத் திருத்தெற்றியம்பலம் என்றும் அழைப்பர்.

திருமங்கையாழ்வார் பாடலில்

திருமங்கையாழ்வார் பள்ளி கொண்ட பெருமாளை பெரிய திருமொழி, நான்காம் பத்து, நான்காம் பதிகத்தில் பாடியுள்ளார்.

''மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும்
 மற்றவர்தம் காதலிமார் குழையும் தந்தை
காலதளையும் உடன்கழல வந்து தோன்றி
 கதநாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர்
நூற்றிதழ் கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்
 திளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்
சேற்றளையில் வெண்முத்தம் சிந்து நாங்கூர்த்
 திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே''

பள்ளிகொண்ட பெருமானைத் திருமங்கையாழ்வார் கிருஷ்ணனாகவும், இராமனாகவும், வாமனனாகவும், வராகமாகவும் காட்டுகின்றார். கண்ணனாகப் பார்க்கின்ற போது அவரது சிறு வயது லீலைகளைப் பாடுகின்றார். திருவாய்ப்பாடியிலுள்ள மாளிகைகளில் ஏறி மாதர் தம் கச்சினையும், பட்டினையும் கிழித்து தித்தமும் தீமை செய்பவன் கண்ணன் என்று கூறுகின்றார்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், யாக மண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கருவறையின் எதிர்ப்புறத்தில் கருடாழ்வார்சந்நிதியும், பலிபீடமும் உள்ளன. திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் செங்கமலவல்லித் தாயார் சந்நிதி உள்ளது. கருவறை உபானம் அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆகிய அமைப்புகள் கொண்டு கட்டப்பட்டுள்ளது. சருதிய விமானம் என்று இதற்குப்பெயர். சாலை வடிவில் அமைந்துள்ளது. அர்த்தமண்டபத்தின் உள்அளவு நீளம் 2-0 மீட்டர் அகலம்4 40 மீட்டர் ஆகும்.

பள்ளிகொண்டபெருமாள்

ரக்தாட்சரி, செங்கண்மால் ஆகிய பெயர்களும் பள்ளிகொண்டபெருமாளுக்கு உண்டு. இவர் சுதையால் வடிக்கப்பட்டுள்ளார். படம் எடுத்து இருக்கும் ஐந்து தலைகள் கொண்ட ஆதிசேஷன்மேல் தெற்குப்புறத்தில் தலைவைத்து பள்ளிகொண்டு காணப்படுகின்றார். தலையும், வலதுகரமும் மரக்கால்மேல் வைத்துக்கொண்டு, இடது கரத்தை இடது இடுப்பின்மீது வைத்து கீழே தொங்கவிட்ட நிலையில் காணப்படுகின்றார். பள்ளிகொண்டபெருமாளின் தலைப்பக்கம் ஸ்ரீதேவியும், கால்பக்கம் பூதேவியும் அமர்ந்துள்ளனர். இவ்வுருவங்களும் சுதையினால் வடிக்கப்பட்டவை.

செங்கமலவல்லித் தாயார்

இவரது சந்நிதி திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது. இது கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு

கட்டப்பட்டுள்ளது. கருவறை உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆகிய அமைப்புகள் கொண்டு காணப்படுகிறது. பிரஸ்தரம் வரை கருங்கல்லாலும் பிறகு செங்கல்சுதையாலும் கட்டப்பட்டுள்ளது. விமானத்தின் கழுத்துப்பகுதியில் நான்குபுறங்களிலும். செங்கமலவல்லித்தாயார் காணப்படுகிறார். அவரது ஒருபுறம் கையில் மாலையை பற்றிக் கொண்டு நின்ற நிலையிலும் மற்றொரு புறம் வெண்சாமரம் வீசும் நிலையிலும் பணிப்பெண்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் சுதையால் ஆனவை. இவ்விமானம் இரண்டு தளங்கள் கொண்டது.

மகாமண்டபத்தின் உள்அளவு 7-10 மீட்டர், அகலம் 5-50 மீட்டர் ஆகும். மகாமண்டபத்தில் வடக்குப்புறத்தில், தெற்குநோக்கி 12 ஆழ்வார்களது சிற்பங்கள் காணப்படுகின்றன. அவர்கள் சக்கரத்தாழ்வார், சேனை முதலியார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பான்ஆழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவி ஆழ்வார், அனுமன் ஆகியோராவர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் சிற்பங்கள் நின்றநிலையில் அஞ்சலித்த கரங்களுடன் உள்ளன திருப்பான்ஆழ்வார் வலது தோளில் பரசு காணப்படுகிறது. திருமங்கையாழ்வார் கத்தி, கேடயம் ஆகியவற்றைக் கரங்களில் கொண்டு மன்னர் கோலத்தில் விளங்குகின்றார். இச்சிற்பங்கள் 50 முதல் 70 செ மீ வரை உயரமுடையவை. கி பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை

கருடாழ்வார்

கருடாழ்வார் தனிச்சந்நிதியில் கருவறையை நோக்கி காணப்படுகிறார். இருகரங்களையும் குவித்து அஞ்சலித்த நிலையில் சதுரவடிவமான பீடத்தின்மீது நின்றநிலையில் காணப்படுகின்றார். தலையில் கரண்டமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 90 செ.மீ. அகலம் 45 செ.மீ. கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த நாயக்கர் காலக் கலைப்பாணியாகும்.

செப்புத் திருமேனிகள்

இக்கோயில் கருவறையில் லெட்சுமி நாராயணன், ஸ்ரீதேவி, பூதேவி, சக்கரத்தாழ்வார், சந்தானகோபால கிருஷ்ணன் ஆகிய செப்புத்திருமேனிகள் உள்ளன. லெட்சுமி நாராயணன் திருமேனி சதுரவடிவான பீடத்தின் மீது நின்றநிலையில் காணப்படுகிறது. பின்னிருகரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. முன்வலதுகரம் அபயமுத்திரையிலும் இடதுகரம் கதையைப் பற்றியிருக்கும் தோற்றத்திலும் உள்ளன. கதை காட்டப்படவில்லை தலையில் கிரீடமகுடமும், காதுகளில் மகரகுண்டலங்களும், மார்பில் முப்புரிநூலும், வயிற்றில் உதரபந்தமும், கைகளில் காப்பும், கேயூரமும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன.

லெட்சுமிநாராயணனின் வலதுபுறத்தில் சதுரவடிவான தாமரைபீடத்தின்மீது நின்றநிலையில் ஸ்ரீதேவி காணப்படுகிறார். வலதுகரம் தொங்கும் கரமாகவும், இடதுகரம் தாமரை மொட்டைப் பற்றியுமுள்ளன. தலையில் கரண்டமகுடமும் காதுகளில் பத்ரகுண்டலங்களும், கைகளில் காப்பும்

மார்பில் மார்புக் கச்சையும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன. லெட்சுமிநாராயணனின் இடதுபுறத்தில் சதுர வடிவான பீடத்தின்மீது நின்றநிலையில் ஸ்ரீதேவி திருமேனி காணப்படுகிறது. வலதுகரம் தாமரைமலர் பற்றியும் இடது கரம் தொங்கும் கரமாகவும் காணப்படுகிறது. மார்பில் கச்சை காணப்படவில்லை. இச்செப்புத்திருமேனிகள் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலத்தவை ஆகும்.

செங்கமலவல்லி திருமேனி கருவறையில் வைக்கப்பட்டுள்ளது. அமர்ந்தநிலையில் முன்னிருக்கரங்கள் அபய, வரத முத்திரைகளிலும் பின்னிருகரங்கள் தாமரைமலர்களை பற்றியுமுள்ளன. இத்திருமேனி 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் காலத்தது ஆகும்.

குடமாடுங்கூத்தர் கோயில்

(திருஅரிமேய விண்ணகரம்)

இக்கோயில் கீழவீதியிலிருக்கும் மதங்கீசுவரர் கோயிலுக்கு மேற்கே ¼ கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது,

திருமங்கையாழ்வார்பாடலில்

திவ்யதேசங்களுள் விண்ணகரங்கள் மிகச்சிலவே. அவற்றில் நாங்கூரில் மட்டும் இரண்டு விண்ணகரங்கள் இருப்பது சிறப்பாகும் அரி உறையும் கோயிலாதலின் அரிமேய விண்ணகரம் என்றும் அழைப்பர். திருமங்கை ஆழ்வார் இக்கோயிலை

" . — ...மாமறையோர் மலர்கள் தூவி
அஞ்சலித் தங்கரி சரணென் றிறைஞ்சு மணிநாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே" 9

என்றும்,

"கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்தகாளை
காமருசீர் முகில்வண்ணன் காலிகள் முன்காப்பான்
குன்றதனால் மழை தடுத்துக் குடமாடுங் கூத்தன்
குலவுமாடங் கொடிமதில்கள் மாளிகை கோபுரங்கள்
துன்றுமணி மண்டபங்கள் சாலைகள் தூமறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடு மிகப்பயிலுஞ்சோலை
அன்றலர்வாய் மதுவுண்டங் களிமுரலு நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே" 10

என்றும் சிறப்பாகப் பாடுகின்றார்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்குநோக்கி அமைந்துள்ளது. கருவறையின் எதிர்ப்புறம் கருடாழ்வார் மண்டபமும், பலிபீடமும் காணப்படுகின்றன. கோயிலின் வெளியே வடக்குத்திசையில் அமிர்தட புஷ்கரணி குளம் உள்ளது. திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் அமிர்தவல்லி தாயார் சந்நிதியும், திருச்சுற்றின் வடமேற்குமூலையில் ஆண்டாள் சந்நிதியும், மகாமண்டபத்தில் வடக்குப்புறத்தில் தெற்குநோக்கி இராமர் சந்நிதியும் உள்ளன. மூன்று நிலைக்கோபுரமும் கோடித்தீர்த்தம் என்ற குளமும் உள்ளன.

கருவறைஉபானம், அதிட்டானம், சுவர், கூரை, கழுத்து சிகரம், கலசம் ஆகிய அமைப்புகளுடன் விளங்குகிறது. அதிட்டானப் பகுதியிலுள்ள குமுதம் விருத்தகுமுதமாகவும் முப்பட்டைக் குமுதமாகவும் காணப்படுகிறது. கண்டம்,

பட்டிகை ஆகிய அங்கங்களும் உள்ளன. சுவர்ப் பகுதியில் இருமருங்கிலும் அரைத்தூண்கள் உள்ள தேவகோட்டங்கள் காணப்படுகின்றன அத்தூண்களில் திருமாலின் பல்வேறு உருவங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. பிரஸ்தரப் பகுதியில் யாளிவரி அழகுற வடிக்கப்பட்டுள்ளது. இக் கருவறையின் கட்டட அமைப்பைக்கொண்டு கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச்சோழர் கலைப் படைப்பு என்று சொல்லலாம். கிரீவப் பகுதியில் மேற்குபுறத்தில் அரங்கநாதர் உருவமும், தெற்குப்புறத்தில் நரசிம்மர் உருவமும், வடபுறத்தில் பள்ளிகொண்டபெருமாள் உருவமும், சுதை உருவங்களாக வடிக்கப்பட்டுள்ளன இக் கோயில் விமானம் இரண்டு தளங்கள் கொண்டது. அர்த்த மண்டபத்தை 8 கருங்கல்தூண்கள் தாங்கி நிற்கின்றன. அர்த்தமண்டபத்தின் நீளம் 8 30 மீட்டர். அகலம் 8.10 மீட்டர் இம்மண்டபம் கி பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கலைப்படைப்பாகும். மகாமண்டபத்தை 12 செங்கல்தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மண்டபத்தின் நீளம் 9.10 மீட்டர். அகலம் 1 .50 மிட்டர் ஆகும்.

சிற்பங்கள்

கருவறையில் குடமாடுங்கூத்தர் வலது காலை கீழே தொங்கவிட்டு, இடது காலை மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். கீழ்ப்புறத்தில் குடம் காணப்படுகிறது. முன் வலது கரம் அபயமுத்திரையில் உள்ளது. இடதுகரம் கதையை பற்றியுள்ளது. பின்னிருக் கரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. தலையில் கிரீட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன.

திருவெள்ளறை போன்ற ஊர்களில் திருமால் குடக்கூத்தாடும் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் நடனமாடும் திருமாலின் தோள் மீது குடமிருப்பதைக் காணலாம்.[11]

குடமாடுங்கூத்தரின் வலதுபுறத்தில் ஸ்ரீதேவி அமர்ந்த நிலையில் வலதுகரம் தொங்கும் கரமாகவும், இடதுகரம் தாமரைமலர் பற்றியும் காணப்படுகிறாள். இடதுபுறத்தில் ஸ்ரீதேவி அமர்ந்தநிலையில் வலதுகரம் தாமரைமலரைப் பற்றியும் இடதுகரம் தொங்கும் கரமாகவும் காட்சித்தருகிறாள். குடமாடுங்கூத்தர், ஸ்ரீதேவி, பூதேவி, உருவங்கள் சுதையால் ஆனவை. ஆண்டுக்கு ஒரு முறை இவ்வுருவங்களுக்கு தைல அபிஷேகம் நடைபெறும்.

அமிர்தவல்லித் தாயார்

இச்சந்நிதி திருச்சுற்றில் தென்கிழக்கு மூலையில் உள்ளது. கருவறை, அர்த்தமண்டபம் மகாமண்டபம் ஆகியவற்றுடன் கிழக்கு நோக்கி உள்ளது, அமிர்தவல்லி தாயார் செவ்வகவடிவமான பீடத்தின்மீது இருகால்களையும் மடித்து வைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். முன்னிருக்கரங்கள் அபய, வரதமுத்திரைகளிலும், பின்னிருக்கரங்கள் தாமரைமலர்களை பற்றியுமுள்ளன. தலையில் கரண்டமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன. மார்பில் கச்சை எதுவுமில்லை.

இக்கோயில் திருச்சுற்றின் வடமேற்குமூலையில் ஆண்டாள் சந்நிதி உள்ளது. இதன் கருவறை, உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் கொண்டு காணப்படுகிறது.

மகாமண்டபத்தில் வடக்குப்புறத்தில் தெற்குநோக்கி இராமர் சந்நிதி அமைந்துள்ளது. இச்சந்நிதி கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் கொண்டு காணப்படுகிறது. கருவறையில் இராமன், இலக்குவன், சீதை ஆகிய சிற்பங்கள் உள்ளன இவை கி. பி 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

அர்த்தமண்டபத்தின் மேற்குப்புறத்திலுள்ள சுவரில் ஆண்டாள் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் வலதுகரம் தாமரை மொட்டு பற்றியும், இடதுகரம் தொங்கும் கரமாக கொண்டுள்ளது. ஆண்டாள் சிற்பம் திருவாட்சியுடன் வடிக்கப்பட்டுள்ளது. திருவாட்சியின் இருபுறங்களிலும் அன்னப்பறவைகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தின் வடக்குபுறச்சுவரில் தெற்குநோக்கி சக்கரத்தாழ்வார், கருடாழ்வார், அனுமன் மற்றும் பிற ஆழ்வார்கள் தனிச் சிற்பங்களாகக் காணப்படுகிறனர். இச்சிற்பங்கள் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலச் சிற்பங்களாகும்.

செப்புத்திருமேனிகள்

இக்கோயிலில் சதுர்புஜ கோபாலன், அமிர்தவல்லித்-தாயார், ருக்மணி, சத்யபாமா, சந்தானக்கிருஷ்ணன் ஆகிய செப்புத்திருமேனிகள் உள்ளன. இச்செப்புத்திருமேனிகள் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச்சார்ந்தவை.

மரச்சிற்பங்கள்

இக்கோயிலில் கீழச்சாலை மாதவப்பெருமாள் கோயில், பள்ளிகொண்டபெருமாள்கோயில், வரதராஜப்பெருமாள்

கோயில், வைகுந்தநாதர்கோயில், காவளம்பாடி இராஜகோபாலசாமி கோயில் முதலிய கோயிலுக்குரிய அமர்ந்தநிலையிலுள்ள கருடாழ்வார் மரவாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வரதராஜப்பெருமாள் கோயில்

(திருமணிக்கூடம்)

இக்கோயில் நாங்கூரைச் சேர்ந்த திருமணிக்கூடம் என்ற பகுதியில் உள்ளது. நாங்கூரிலிருந்து மங்கைமடம் செல்லும் சாலையில் தெற்கில் இக்கோயில் அமைந்துள்ளது. இங்குள்ள பெருமாள் இந்திரனுக்கு அருள்புரிந்தவர் என்றும் கர்நாடகமன்னன் வல்லபன் குழந்தையின் உடற்குறையைத் தீர்த்தவர் என்றும் புராணம் கூறுகிறது.

திருமங்கையாழ்வார்

திருமங்கையாழ்வார் இக்கோயில் இறைவனை

'குன்றமும் வானும் மன்னும் குளிர்புனல் திங்களோடும்
நின்றவெஞ் சுடருமல்லா நிலைகளும் ஆய எந்தை'[12]

என்றும்,

''பாவமும் அறமும் வீடும்
இன்பமும் துன்பந்தானும்
கோவமும் அருளும் அல்லாக்
குணங்களும் ஆய எந்தை[13]

என்றும்,

தாங்கருஞ் சினத்து வன்தாள்
தடக்கைமா மருப்பு வாங்கி

பூங்கருந் தொசித்துப் புள்வாய்
பிளந்தெரு தடர்ந்த எந்தை
மாங்கனி நுகர்ந்த மந்தி
வந்துவண் டிரிய வாழைத்
தீங்கனி நுகரும் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே"14

என்றும் பாடிச்சிறப்பித்துள்ளார்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையின் எதிர்ப்புறத்தில் கருடாழ்வார், சந்நிதியும் பலிபீடமும் உள்ளன விமானத்திற்கு இந்திர விமானம் என்றுபெயர். தீர்த்தத்தின் பெயர் இந்திர புஷ்கரணி என்பதாகும். இங்குள்ள திருமாலை மணிகூடநாயகர் என்றும், தாயாரை திருமாமகள் என்றும் அழைப்பர்.

கருவறை

உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய அமைப்புகளுடன் கருவறை விளங்குகிறது. உபானம் மட்டும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகள் செங்கற்கள், சுதை கொண்டு கட்டப்பட்டுள்ளன. விமானத்தின் கிரீவப்பகுதியில் தெற்குப்புறத்தில் அமர்ந்த நிலையில் நரசிம்மமூர்த்தியும், மேற்குபுறத்தில் ரெங்கநாதர் உருவமும், வடக்குபுறத்தில் பள்ளிகொண்ட பெருமாள் உருவமும் சுதை உருவங்களாக வடிக்கப்பட்டுள்ளன. கிரீவப்பகுதியின் நான்குமூலைகளிலும் அமர்ந்த-

நிலையில் நான்கு கருடாழ்வார் சுதை உருவங்கள் காணப்படுகின்றன. விமானத்தின் கிரீவப்பகுதியின் கிழக்குதிசையில் சுதையாலான வராகமூர்த்தி உருவம் உள்ளது.

அர்த்தமண்டபத்தின் உள்அளவு நீளம் 3.10 மீட்டர் அகலம் 3 20 மீட்டர் ஆகும். மகாமண்டபத்தை 8 கருங்கல் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் எவ்வித வேலைப்பாடுமின்றி எளிமையாக வடிக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் உள்அளவு நீளம் 9 70 மீ. அகலம் 5.55 மீ. ஆகும்.

சிற்பங்கள்

கருவறையில் வரதராஜப்பெருமாள் தாமரை பீடத்தின் மீது நின்ற கோலத்தில் பின்னிருக்கரங்களில் சக்கரம் சங்கு பற்றியும், முன்னிருக்கரங்களில் அபய, ஊருமுத்திரை காட்டியும் காணப்படுகின்றார். தலையில் கிரீடமகுடமும் காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் மாலையும், மார்பி முப்புரிநூலும், தோள்வளையும், கேயூரமும் கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணி செய்கின்றன.

வரதராஜப்பெருமாளின் வலதுபுறத்தில் ஸ்ரீதேவி சதுர வடிவான தாமரைபீடத்தின் மீது நின்ற நிலையில், இடது கரம் தாமரைமலர் பற்றியும், வலது கரம் தொங்கும் கரமாகவும் காணப்படுகிறாள். தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும் கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும், அனிசெய்கின்றன. மார்பில் கச்சை உள்ளது.

பெருமாளின் இடதுபுறத்தில் பூதேவி சிற்பம் காணப்படுகிறது. வலதுகரம் தாமரைமொட்டுப் பற்றியும், இடது கரம் தொங்கும்கரமாகவும் காணப்படுகிறது. தலையில்

கரண்டமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுன்றன. வரத ராஜப்பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்களின் காலம் 16-17ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அர்த்தமண்டபத்தின் வடபுறத்தில் தென்திசை நோக்கி நம்மாழ்வார் சிற்பம் அமர்ந்தநிலையில் காணப்படுகிறது. வலதுகரம் அபயமுத்திரையிலும், இடது கரம் இடது தொடை மீது வைத்தும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 30செ. மீ. அகலம் 15செ மீ. கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

பிற ஊர் வைணவக் கோயில்கள்

இதுவரை நாங்கூரில் உள்ள ஏழு வைணவக் கோயில்களைப் பற்றிப் பார்த்தோம். 11 திவ்யதேசங்களில் இவ்வேழு கோயில்கள் தவிர பிற நான்கு கோயில்கள் நாங்கூரை அடுத்துள்ள கீழைச்சாலை, அண்ணன் பெருமாள் கோயில், காவளம்பாடி, பார்த்தன்பள்ளி ஆகிய ஊர்களில் உள்ளன. அவற்றை இங்கு காண்போம்.

மாதவப்பெருமாள் கோயில்
(திருத்தேவனார் தொகை)

திருநாங்கூரிலிருந்து வடக்கே 2கி. மீட்டர் தொலைவில் உள்ள கீழைச்சாலையில் இக்கோயில் அமைந்துள்ளது. அண்ணன்பெருமாள் கோயிலிலிருந்து 1 கி. மீ. தொலைவில் உள்ளது இக்கோயில் திருநாங்கூர் 11 திவ்யதேசங்களில் ஒன்றாகும் இவ்வூரில் தேவர்கள் யாகம் செய்ததாகவும் யாக சாலையின் மேற்புறம் மேலச்சாலை என்றும், கீழ்புறம் கீழச்சாலை என்றும் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இவ்வூருக்கு மேற்கே மேலச்சாலை என்ற ஊர் உள்ளது. தேவர்களின் பிரார்த்தனைக்கேற்ப, பெருமாள் இங்கு கல்யாணத்திருக்கோலம் காட்டி அருளினார். பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய மகாலெட்சுமியை இத்தலத்தில் மணம்புரிந்தார் என்று புராணச்செய்திகள் கூறுகின்றன.

திருமங்கையாழ்வார்பாடலில்

திருமங்கையாழ்வார் இக்கோயில் இறைவனை

"இந்திரனு மிமையவரும் முனிவர்களும் எழிலமைந்த
சந்தமலர்ச் சதுமுகனும கதிரவனும் சந்திரனும்
எந்தை எமக்கருளென நின்றருளுமிடம் எழில் நாங்கை
சுந்தர நற்பொழில்புடை சூழ் திருத்தேவனார்தொகையே"

என்று தனது பாசுரத்தில் பாடியுள்ளார்

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, இடைக்கட்டு அர்த்தமண்டபம், திருச்சுற்று மதில் கொண்டு மேற்குநோக்கி காணப்படுகிறது. திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் தெய்வநாயகித் தாயார் சந்நிதி உள்ளது. கருவறை உபானம், அதிட்டா-னம், சுவர் பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய அமைப்புகளுடன் விளங்குகிறது. அதிட்டானத்திலுள்ள குமுதப்பகுதி விருத்த குமுதமாகவும், முப்பட்டைக் குமுதமாகவும் மாறி மாறி வடிக்கப்பட்டுள்ளது. கண்டம், பட்டிகை, கண்டம், பட்டிகை ஆகிய அமைப்புகளும் அதிட்டானப்பகுதியில் காணப்படுகின்றன. சுவர்ப்பகுதியில் தேவகோட்டங்களும், அரைத்தூண்களும் காணப்படுகின்றன. அரைத்தூண்

கள் கால், கலசம், போதிகை ஆகிய அங்கங்கள் கொண்டு விளங்குகின்றன. விமானத்தின் கூரைப்பகுதியில் யாளி உருவங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன விமானத்தின் கிரீவபகுதியில் சுதையாலான பல தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன, வடக்குப்புறத்தில் இராமர், இலக்குவன், சீதை உருவங்களும், மேற்குப்புறத்தில் பள்ளிகொண்ட பெருமாள் உருவமும், கிழக்குப்புறத்தில் வராகமூர்த்தி உருவமும், மேல்புறத்தில் ரெங்கநாதர் உருவமும், தெற்கில் நரசிம்மமூர்த்தியும், இதன்மேல்புறத்தில் வேணுகோபாலன் பாமா, ருக்மணி ஆகிய உருவங்களும் உள்ளன. இவை சுதை உருவங்களாக வடிக்கப்பட்டவைகளாகும் இக்கோயில் விமானம் இரண்டு தள விமானமாகும். உபானம் முதல் பிரஸ்தரப் பகுதிவரை கருங்கற்களால் கட்டபபட்டுள்ளது. அர்த்தமண்டபத்தின் உள் அளவு நீளம் 8.80 மீ. அகலம் 8.70 மீ. ஆகும்.

தெய்வநாயகி சந்நிதி

இச்சந்நிதி திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் உள்ளது இச்சந்நிதி கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் கொண்டு கட்டப்பட்டுள்ளது கருவறை, உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம், ஆகிய அமைப்புகளுடன் காணப்படுகிறது. உபானம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. விமானத்தின் கழுத்துப்பகுதியில் கருவறையிலுள்ள தெய்வ நாயகி உருவங்கள் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளிலும் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன.

சிற்பங்கள்

கருவறையில் தெய்வநாயகி சிற்பம் இரண்டு கால்களையும் மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது முன்னிருகரங்கள் அபய, வரத முத்திரைகளிலும், பின்னிருகரங்கள் தாமரைமலர்கள் பற்றியுமுள்ளன. தலையில் கரண்டமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும். கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும், காணப்படுகின்றன, மார்புக்கச்சை காட்டப்படவில்லை.

கருவறையில் மாதவப்பெருமாள், பீடத்தின்மீது நின்ற திருக்கோலத்தில் காணப்படுகின்றார். முன்னிருகரங்கள் அபய. ஊரு முத்திரைகளிலும் பின்னிருகரங்கள் சக்கரம், சங்கும் பற்றியுமுள்ளன. தலையில் கிரீடமகுடமும் காதுகளில் மகரகுண்டலங்களும் கழுத்தில் மாலையும், கேயூரமும், கைகளில் காப்பும். பாதங்களில் பாதசரமும் அணிந்து இச்சிற்பம் காணப்படுகிறது. மாதவப் பெருமாளின் லவதுபுறத்தில் ஸ்ரீதேவி சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் நின்ற நிலையில் வலதுகரம் கீழேதொங்கும் நிலையில் தொங்கும் கரமாகவும், (டோலஹஸதம்) இடதுகரம் தாமரைமலர் பற்றியுமுள்ளது தலையில் கரண்டமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. மார்புக்கச்சை அணிந்துள்ளார். மாதவப்பெருமாளின் இடதுபுறத்தில் பூதேவி சிற்பம் நின்ற நிலையில் காணப்படுகிறது. வலதுகரம் தாமரை மொட்டு பற்றியும், இடதுகரம் தொங்கும் கரமாகவும் காணப்படுகிறது. மாதவப்பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்கள் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கலைப்படைப்புகளாகும்.

அர்த்தமண்டபத்தின் வடக்குப்புறத்தில் நம்மாழ்வார், உடையவர் சிற்பங்கள் உள்ளன. இவைகள் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

செப்புத் திருமேனிகள்

மாதவப்பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி, மாதவநாயகி தியாகபேரர், தீர்த்தபேரர், சந்தானகிருஷ்ணன் ஆகிய செப்புத்திருமேனிகள் இக்கோயிலில் உள்ளன.

அண்ணன் பெருமாள் கோயில்
(திருவெள்ளக்குளம்)

அண்ணன்பெருமாள் கோயில் என்ற இவ்வூர் சீர்காழியிலிருந்து தெற்கே 6 கி. மீ. தொலைவில் உள்ளது. சீர்காழியிலிருந்து பொறையார், காரைக்கால், நாகப்பட்டினம் செல்லும் பேருந்தில் இவ்வூருக்குச் செல்லலாம். திருநாங்கூர் 11 திவ்யதேசங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

இக்கோயில் இறைவன் பெயர் சீனிவாசன். தாயார் பெயர் அலர்மேல்மங்கை என்பதாகும். இறைவனுக்கு அண்ணன்பெருமாள் என்னும் மற்றொரு பெயரும் உண்டு. ஆதலால் இவ்வூருக்கு அண்ணன்பெருமாள் என்னும் பெயர் ஏற்பட்டது. இத்திருக்கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்குளம் ஸ்வேதபுஷ்கரணி என்று வழங்கப்படுகிறது. இவ்வூரில்தான் திருமங்கையாழ்வார் துணைவியார் குமுதவல்லிநாச்சியார் பிறந்தார். இத்தலம் பிரார்த்தனைத்தலம். புரட்டாசித் திங்களில் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது.

திருமங்கையாழ்வார் பாசுரங்கள்

திருமங்கையாழ்வார் இக்கோயில் இறைவனை பத்து பாசுரங்களில் பாடி இப்பெருமாளை ''திருவெள்ளக் குளத்து அண்ணா'' என்று அழைத்து தன் இடர்களைக் களையுமாறும், வல்வினைகளைத் தீர்க்கும்படியும் வேண்டுகிறார்.

1) கண்ணார் கடல்போல் திருமேனிகரியாய்
நண்ணார் முனைவென்றி கொள்வார் மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள் சூழ் திருவெள்ளக்குளத்துள்
அண்ணா, அடியேனிடரைக் களையாயே

2) கொந்தார் துளவமலர் கொண்டறிவானே
நந்தாத பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
செந்தாமரை நீர்த் திருவெள்ளக்குளத்துள்
எந்தாய், அடியேனிடரைக் களையாயே

3) குன்றால் குளிர்மாரி தடுத்து கந்தானே
நன்றாய பெரும்புகழ்வேதியர் நாங்கூர்
சென்றார் வணங்கும் திருவெள்ளக்குளத்துள்
நின்றாய், நெடியாயடியேனிடர் நீக்கே

4) கானார் கரி கொம் பொசித்த களிறே!
நானாவகை நல்லவர் மன்னிய நாங்கூர்
தேனார் பொழில் சூழ் திருவெள்ளக்குளத்துள்
ஆனாய் அடியேனுக் கருள்புரியாயே

5) வேடார் திருவேங்கடம் மேயவிளக்கே!
நாடார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்
சேடார் பொழில் சூழ் திருவெள்ளக்குளத்தாய்
பாடா வருவேன் வினையாயின பாற்றே

6) கல்லால் கடலை அணைக்கட்டி உகந்தாய்
நல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்
செல்வா திருவெள்ளக் குளத்துறைவானே
எல்லா விடரும் கெடுமாறருளாயே

7) கோலால் நிரைமேய்த்த எங்கோவலர் கோவே
நாலாகிய வேதியர் மன்னிய நாங்கூர்
சேலார் வயல் சூழ் திருவெள்ளக்குளத்துள்
மாலே, என் வல்வினை தீர்த்தருளாயே

8) வாராக மதாகி இம்மண்ணை இடந்தாய்
நாராயணனே நல்லவேதியர் நாங்கூர்
சீரார் பொழில் சூழ் திருவெள்ளக்குளத்துள்
ஆராவமுதே அடியேற் கருளாயே

9) பூவார் திருமாமகள் புல்கிய மார்பா
நாவார் புகழ் வேதியர் மன்னியநாங்கூர்
தேவா திரு வெள்ளக்குளத்துள் உறைவானே
ஆவா வடியானிவ னென்றருளாயே

10) நல்லன்புடை வேதியர் மன்னிய நாங்கூர்
செல்வன் திருவெள்ளக் குளத்துறைவானை
கல்லின் மலிதோள் கலியன் சொன்னமாலை
வல்லரென வல்லவர் வானவர் தாமே

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு அமைந்துள்ளது, கருவறையின் வலதுபுறத்தில் அலர்மேல்மங்கை தாயார் சந்நிதியும், குமுத-வல்லி நாச்சியார்சந்நிதியும் காணப்படுகின்றன. வடக்குத் திருச்சுற்றில் வாகனமண்டபமும், கல்யாணமண்டபமும்,

யாகசாலையும் உள்ளன. சந்நிதியிலுள்ள கொடிமரம், பெரிய திருவடி ஆகியவற்றை வணங்கி உள்ளே சென்றால் சோபானமண்டபம் உள்ளது.

சிற்பங்கள்

கருவறையில் சீனிவாசப்பெருமாள், நாச்சியாருடன் கிழக்குநோக்கிக் காணப்படுகின்றார். சீனிவாசப்பெருமாளை அண்ணன்பெருமாள் என்றும், திருப்பதி திருவேங்கட-முடையானுக்கு அண்ணன் என்றும் கூறுகின்றனர். இச் சிற்பம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கலைப்படைப்பாகும்.

சோபானமண்டபச்சுவரில் நர்த்தனவிநாயகர்சிற்பம் ஒன்று உள்ளது. ஒரு குடமுழுக்கின்போது கடம் உள்ளே செல்லாத நிலையில் ஒருவர்மேல் ஆவேசம் வந்து, இப் பிள்ளையார் இருந்த இடத்தைக்குறிப்பிட்டு, அவரைக்-கோயிலில் கொண்டு வைத்தால்தான் கடம்புறப்படும் என்று சொல்ல, அவ்வாறே மேலச்சாலையிலிருந்து கோயிலுக்கு எழுந்தருளியிருக்கின்றார் இப்பிள்ளையார்.[15] மகாமண்டபத்தில் சேனைமுதல்வர், நம்மாழ்வார், மணவாளமாமுனிகள் ஆகிய சிற்பங்கள் உள்ளன. இவை கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த நாயக்கர் கலைப்படைப்புகளாகும்.

திருவிழாக்கள்

சித்திரை-1 : தமிழ் வருடப்பிறப்பு விஷுபுண்ய காலம் காலை திரு மஞ்சனம்.

வைகாசி : பெருமாள் வசந்த உற்சவம். திருமஞ்சனம், ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் வசந்த உற்சவம் ஆரம்பம். அன்று 81 கலச திருமஞ்சனம், பிற தினங்கள் திருமஞ்சனம் புறப்பாடு

ஆடி : தக்ஷிணாயன புண்ணியகாலம். திருமஞ்சனம். தாயார். திருமஞ்சனம் ஜ்யேஷ்டாபிஷேக திருமஞ்சனம் கடைசிவெள்ளி காலை திருமஞ்சனம் மாலை திருக்கல்யாணம் இரண்டாம் புறப்பாடு, முத்துப்பல்லாக்கு

ஆவணி : ஸ்ரீ பாஞ்சராத்ர ஸ்ரீ ஜெயந்தி, உறியடி, பெருமாள் கிருஷ்ணன் வீதி புறப்பாடு, விநாயகர்சதுர்த்தி, திருமஞ்சனம்.

புரட்டாசி : பிரம்மோற்சவம், துவஜாரோஹனம் கருடசேவை, திருக்கல்யாணம், திருத்தேர், தெப்பம்.

ஐப்பசி : தீபாவளி திருமஞ்சனம், மணவாள மாமுனிகள் சாற்றுமுறை.

கார்த்திகை : ஸ்ரீ வைஷ்ணவ மகாசபையினரால் அகண்ட பஜனை நடைபெறும். சுவதார உற்சவம், உதய கருடசேவை, ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம், புறப்பாடு.

மார்கழி : வைகுண்ட ஏகாதசி

தை : தனுபாரிவேட்டை, மட்டை அடி உற்சவம் திருநாங்கூர் 11 கருடசேர்வை உற்சவம், அத்யான உற்சவம் ஆரம்பம், அத்யான உற்சவம் சாற்றுமுறை.

பங்குனி : காரடையான் நோன்பு, தாயார் திரு-மஞ்சனம், பங்குனி உத்திரம், கண்ணாடித் திருப்பள்ளிஅறைத் தாயார், பெருமாள் சேர்த்திசேவை.

திருக்காவளம்பாடி கண்ணன் கோயில்

இவ்வூர் சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 9 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. மங்கை மடத்திலிருந்து வடகிழக்கே 2 கி. மீ தொலைவில் உள்ளது இவ்வூர் இறைவனை ராஜகோபாலசாமி என்றும் வேணுகோபால-னென்றும் கோபாலகிருஷ்ணன் என்றும் அழைப்பர்.

இக்கோயில் விமானம் வேத மோதவிமானம். இங்குள்ள புஷ்கரணிக்கு ஹேமாப்ஜபுஷ்கரணி என்று பெயர். தாயா-ருக்கு மிருகாட்சிமடவரல்மங்கை என்று பெயர். தாயாருக்கு தனிச்சந்நிதி அமைக்கப்படவில்லை.

திருமங்கையாழ்வார் பாடலில்

திருமங்கையாழ்வார் இக்கோயிலைப்பற்றிப் பாடிய பாடல்கள் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி 4ம் பத்து ஆறாம் திருமொழியில் காணப்படுகின்றன. பத்து பாசுரங்கள் பாடியுள்ளார். அவற்றிலொன்று இவ்வூரை நாங்கூரைச் சேர்ந்த காவளம்பாடி என்றே குறிப்பிடுகிறது.

'ஏவிளங் கன்னிக்காகி
இமையவர் கோனைச் செற்று
காவளம் கடிதி றுத்துக்
கற்பகம் கொண்டு போந்தாய்

பூவளம் பொழில்கள் சூழ்ந்த
புரந்தரன் செய்த நங்கைக்
காவளம் பாடிமேய
கண்ணனே! களைகணீயே''[18]

இக்கோயில்பற்றி பத்மபுராணத்தில் 90 ஸ்லோகங்கள் உள்ளன. இப்புராணம் வடமொழியில் எழுதப்பட்ட நூலாகும்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, இடைக்கட்டு, அர்த்தமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்குநோக்கிக் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் எதிர்ப்புறம் கருடாழ்வார் சந்நிதியும், பலிபீடமும் காணப்படுகின்றன. கருவறையில் இராஜகோபாலன் நின்ற நிலையில் காணப்படுகிறார். வலது கரம் சாட்டை பற்றியுள்ளது. இடதுகரம் பசுவின்மேல் கைவைத்த நிலையில் காணப்படுகிறது. இராஜகோபாலனின் அருகில் பாமா, ருக்மணி சிற்பங்கள் உள்ளன.

இக்கோயில் விமானம் ஏகதளவிமானமாகும். விமானத்தின் தெற்குத்திசையில் யோகநரசிம்மமூர்த்தியும், வடக்குத் திசையில் வைகுந்தநாதரும், மேற்குத்திசையில் திருமாலும், கிழக்குத்திசையில் வராகமூர்த்தியும் சுதை உருவங்களாக வடிக்கப்பட்டுள்ளனர்.

வேணுகோபாலன், ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டுச் செப்புத்திருமேனிகள் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் டி.ஆர். இராமாநுஜாச்சாரியார், பி. எஸ் இராமாநுஜாச்சாரியார், இராகவாச்சாரியார் குடும்பத்தினர் பராமரிப்பில் இருந்து வருகின்றது.

பார்த்தன் பள்ளி பார்த்தசாரதி கோயில்

இக்கோயில் திருவெண்காட்டிலிருந்து தென்மேற்கே 4 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது இக்கோயில் மேற்குத் திசைநோக்கிக் கட்டப்பட்டுள்ளது. இத்தலம் திருநாங்கூர் 11 திவ்யதேசங்களில் ஒன்றாகும்.

பார்த்தசாரதி பெயர்க் காரணம்

''யத்ர, யோகீஸ்வர
கிருஷ்ணு, யத்ர பார்த்தோ தனுர்தர :
நகாம்சே, விஜயம் கிருஷ்ணு
நச ராஜ்யம், சு காநிச''

பாரதப்போரில் லட்சோபலட்சம் பேர்களைக் கொன்று குவித்து இந்த-ராஜ்யமும், சுகமும் எனக்கு எதற்கு என்று அர்ச்சுனன் சொல்லும்போது காண்டீபம் கீழே நழுவிற்று அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையாக இந்தத் தலத்திற்கு வரும்போது தாகம் ஏற்பட்டது. இந்தத் தலத்தில் அகத்தியர், பாரத்வாஜர், கௌதமர் மூன்று முனிவர்களும் தவம் செய்துகொண்டு இருந்தார்கள். அர்ச்சுனன் அகத்தியரிடம், காவேரி உண்டுபண்ணினீரே! தீர்த்தம் கொடுங்கள் என்று கேட்க, அகத்தியர் கமண்டலத்திலும நீர் இல்லாமல் போய்விட்டது. அகத்தியர் அர்ச்சுனனிடம, எம்பெருமானை நினை என்று சொல்ல, அர்ச்சுனன் கிருஷ்னனை நினைக்க, கிருஷ்ணன் இத்தலத்தில் அர்ச்சுனன் முன்தோன்றி தன் கையிலிருந்த கத்தியைக் கொடுத்து, பூமியில் ஒரு கோடு கிழி என்று அர்ச்சுனனிடம் சொல்ல, அதன்படி அர்ச்சுனன் செய்ய பூமியிலிருந்து நீர் ஏற்பட்டது. அர்ச்சுனனுக்கு தாகம் தீர்ந்தவுடன் கிருஷ்ணா!

யுத்தம் செய்தோமே அங்கு போகலாமா என்று கேட்க கிருஷ்ணன், உன் இதயத்திலிருந்து யுத்தம் செய்பவன் நானே நானே! நீ, நீயே! நான் பார்த்தசாரதி என்ற பெயரில் பார்த்தன் என்ற அர்ச்சுனன், சாரதி என்ற கிருஷ்ணன் இருவரும் ஒன்றே என்று அர்ச்சுனனுக்கும், மூன்று முனிவர்களுக்கும் உபதேசம் செய்தார். இதனால் இவ்வூர் பார்த்தன்பள்ளி ஆயிற்று என்று தல புராண வரலாறு கூறுகிறது.

திருமங்கையாழ்வார் பாடலில்

"கவளயானைக் கொம்பொசித்த
 கண்ணனென்றும் காமருசீர்க்
குவளைமேக மன்னமேனி
 கொண்டகோன் என் ஆனை என்றும்
தவளமாட நீடுநாங்கைத்
 தாமரையாள் கேள்வனென்றும்
பவளவாயாள் என்மடந்தை
 பார்த்தன்பள்ளி பாடுவாளே"

என்றும்

"அரக்கராவி மாளவன்று
 ஆழ் கடல் சூழ் இலங்கை செற்ற
குரக்கரச னென்றும்
 கோலவில்லி என்றும் மாமதியை
நெருக்குமாட நீடுநாங்கை
 நின்மலன் என்றென்றோதிப்
பரக்கழிந்தாள் என்மடந்தை
 பார்த்தன்பள்ளி பாடுவாளே"

என்றும் திருமங்கையாழ்வார் பார்த்தசாரதியிடம் காதல் கொண்டு நாயக நாயகியாக உருவகித்து மங்களாசாசனம் செய்தருளிய பாசுரங்கள் மனதை நெகிழவைப்பன.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம் திருச்சுற்று, திருச்சுற்றுமதில் ஆகிய அமைப்புகளுடன் அமைந்துள்ளது. இக்கோயில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் செங்கமலவல்லித் தாயார் சந்நிதியும், திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் அனுமான் சந்நிதியும், தென்கிழக்கில் மடப்பள்ளியும், அர்த்தமண்டபத்தின் தென்புறத்தில் அர்ச்சுனன் சந்நிதியும் காணப்படுகின்றன. கோபுரத்தின் எதிர்ப்புறம் கருடாழ்வார் சந்நிதி உளளது. இக்கோயில் கோபுரம் மூன்று தளங்கள் கொண்டது. கோபுரத்தில் எவ்வித உருவங்களும் இல்லை. மகாமண்டபத்தில் வலதுபுறத்தில் 10 கருங்கல் தூண்களும், இடதுபுறத்தில் 4 கருங்கல்தூண்களும் காணப்படுகின்றன. வலதுபுறத்திலுள்ள மூன்றாவது தூண் ஒன்றில் யானை சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது.

கருவறையில் பார்த்தசாரதிப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காணப்படுகின்றார். முன்னிருகரங்கள் அபய, ஊரு முத்திரைகளிலும் பின்னிருகரங்கள் சக்கரம், சங்கும் பற்றியுமுள்ளன. பெருமாளின் இருபுறங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்கள் நின்றகோலத்தில் காணப்படுகின்றன.

செங்கமலவல்லித்தாயார் சந்நிதி

இச்சந்நிதி திருச்சுற்றில் தென்மேற்குமூலையில் உள்ளது. இச்சந்நிதி கருவறை, அர்த்தமண்டபம்,

மகாமண்டபம் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இச்சந்நிதி விமானத்தின் கிரீவப்பகுதிக்குமேல்புறத்தில் நான்கு புறங்களிலும் நான்கு கருடாழ்வார் உருவங்கள் அமர்ந்தநிலையில் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள் சுதையாலானவை. இச்சந்நிதி விமானத்தில் அகத்தியர், பாரத்வாஜர், கௌதமர் ஆகிய முனிவர்கள் உருவங்கள் சுதையில் காணப்படுகின்றன.

இச்சந்நிதியின் கருவறையில் உள்ள செங்கமலவல்லிச் சிற்பம் கருவறையில் நான்குகரங்கள் கொண்டுள்ளது. முன்னிருகரங்கள் அபய, வரதமுத்திரைகளிலும், பின்னிருகரங்கள் தாமரைமலர்களைப் பற்றியுமுள்ளன. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும் அணி செய்கின்றன. இச்சிற்பம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அர்ச்சுனன் கோயில்

அர்ச்சுனன் சிற்பம் திருச்சுற்றில் அர்த்தமண்டபத்தின் தென் திசையில் அமைந்திருக்கும் அர்ச்சுனன் சந்நிதியி உள்ளது. அர்ச்சுனன் செவ்வகவடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறான். இரண்டுகரங்களும் அஞ்சலித்த நிலையில் காட்டப்பட்டுள்ளன. மீசை தாடி உள்ளது. அர்ச்சுனனின் இடது பக்கத்தில் கத்தி உள்ளது. கழுத்தில் துளசி மாலையும் கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும், இடை முதல் பாதம் வரை ஆடையும் அணி செய்கின்றன. இச்சிற்பம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் படைப்பாகும். அர்ச்சுனன் சிற்பத்திற்கு அருகில் கிருஷ்ணன் ரதத்தை ஓட்டுவது போன்று அமைக்கப்பட்ட சிற்பம் காணப்படுகிறது கழுத்தில் கண்டசரமும், பதக்கமும், கைகளில் காப்பும் கிருஷ்ணன் சிற்பத்தை அணி

செய்கின்றன. அருகில் நான்கு கரங்களுடன் பார்த்தசாரதி பெருமாள் வடக்குநோக்கி காணப்படுகிறார். இச்சிற்பங்கள் நாயக்கர் காலத்தவை.

இக்கோயில் கருவறையில் பார்த்தசாரதிப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி, செங்கமலவல்லித் தாயார், தீர்த்தபேரர், யாகபேரர், சைனபேரர், ஆகிய செப்புத்திருமேனிகள் உள்ளன. இவை கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் படைப்புகளாகும். இக் கருவறையில் இராமர், ஸ்ரீதேவி பூதேவி செப்புத்திருமேனிகள் உள்ளன. முன்பு கோலவில்லி இராமருக்கு இக்கோயிலுள்ளேயே தனிச் சந்நிதி இருந்ததென்றும் பிறகு ஔவையார் குளத்தருகே தனிக்கோயில் கட்டப்பட்டதென்றும் கூறுவர்.

விழாக்கள்

தை அமாவாசையில் திருமங்கையாழ்வார் இங்கு எழுந்தருளி, மங்களாசாசன உற்சவம் நடைபெறும். தைப் பூசத்தன்று பெருமாள் நான்கு வீதிகளிலும் புறப்பட்டு, பெருமாள் குளத்தில் தீர்த்தவாரி வைபவம் நடைபெறும். ஆடி அமாவாசையன்று பெருமாளைப் பூம்புகார்க் கடற்கரைக்கு எடுத்துச் சென்று கடலில் சங்குமுகஸ்னான வைபவம் நடைபெறும் புரட்டாசித் திங்களில் பெருமாள் குதிரை வாகனத்தில் நான்கு வீதிகள் வழியாக வீதியுலாவாக வந்து அம்புபோடும் வைபவம் நடைபெறும். இவ்விழாக்களுக்கென்று இக்கோயிலில் யானை, கருடன், குதிரை, சூரியபிரபை, ஆதசேஷன் ஆகிய மரவாகனங்கள் உள்ளன.

திருவல்லிக்கேணி, பார்த்தன்பள்ளி ஆகிய தெய்வசிற்பங்களிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை பின் வருமாறு சொல்வர். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் இருகரங்கள் கொண்டுள்ளார், பார்த்தன்பள்ளி பார்த்தசாரதி பெருமாள் நான்குகரங்கள் கொண்டுள்ளார். திருவல்லிக்கேணி பெருமாளுக்கு அழகிய மீசை உண்டு. பார்த்தன்பள்ளி பெருமாளுக்கு மீசை இல்லை. வைணவத்தில் பார்த்தசாரதிப் பெருமாளுக்கு இவ்விரு இரண்டு இடங்களில் கோயில்கள் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கோயில் நிர்வாகம் ஆங்கிலேயர் காலத்தில் அனந்த அய்யங்கார் என்பவரிடமிருந்தது. தற்போது வி.சேஷாத்திரி பட்டாச்சாரியார் நிர்வாகத்தில் உள்ளது.[17]

அடிக்குறிப்புகள்

1 பெரியதிருமொழி 3-8-1
2 'நாயக்கர் காலத்தில் வழிபாட்டு நெறி முறைகள்' கோ. முத்துச்சாமி அகில இந்திய சைவ சித்தாந்த ஆய்வுக்கழகக் கருத்தரங்கு 1993
3 சீர்காழிக் கோயில்கள் - த. அகரமுதல்வன் 1984
4 பெரிய திருமொழி 4-2-5
5 பெரிய திருமொழி 4-2-1
6 செய்தியளித்தவர் இக்கோயில் பட்டர் திரு. எஸ். லெட்சுமண பட்டாச்சார் அவர்கள்
7 ஸ்ரீ பத்மபுராணம், உத்ரபாகம், அத்தியாயம் 10, ஹேமரங்க ஸ்தல வைபவம்
8 பெரிய திருமொழி 4-3-9
9 பெரிய திருமொழி 3-10-9

10 பெரிய திருமொழி 3-10-8
11 படங்கள் பார்க்க திருவெள்ளறை - வெ. வேதாசலம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
12 பெரிய திருமொழி 4-5-6
13 பெரிய திருமொழி 4-5-9
14 பெரிய திருமொழி 4-5-4
15 சீர்காழிக் கோயில்கள் - த. அகரமுதல்வன், பக்கம் 139
16 பெரிய திருமொழி 4-6-8
17 இச்செய்தி அளித்தவர் இக்கோயில் பட்டராவார்.

சைவக்கோயில்கள்

இதுவரை நாங்கூர் மற்றும் நாங்கூருடன் தொடர்புடைய வைணவக்கோயில்களைப்பற்றிப் பார்த்தோம். இனி நாங்கூரில் உள்ள சைவக்கோயில்கள், விநாயகர் கோயில்கள் மற்றும் கிராம தெய்வக்கோயில்களைப் பற்றிப்பார்ப்போம்.

மதங்கீசுவரர் கோயில்

இக்கோயில் நாங்கூர்க் கீழவீதியில் உள்ளது. மதங்க மகரிஷியின் மகன் மாதங்கர். மாதங்கருக்கு பிரம்மவித்தை என்ற பெயரில் அஞ்சனாட்சியே மகளாகத் தோன்றி திருவெண்காட்டிலுள்ள சுவேதாரண்யேசுவரரை மணந்தாள் என்று பராசவனப்புராணம் கூறுகிறது.

பராசவனத்திலுள்ள மதங்காசிரமத்தில் தவம் செய்த மதங்கமுனிவரின் வேண்டுகோளின்படி திருமால் பன்னிரு மூர்த்திகளாகி, பராசவனத்தில் வெவ்வேறு இடங்களில் எழுந்தருளினார். சுவேதாரண்யத்திலுள்ள (திருவெண்காடு) ஈசானிய பீடமாகிய மூலலிங்கத்தை வாசுதேவன் வழிபட்டு வந்தார். இப்பகுதியிலுள்ள ஏனைய பன்னிரு சிவபீடங்களைத் திருமாலின் பன்னிருமூர்த்திகளும் நிறுவி வழிபட்டு வந்தனர். அதன் விவரம் பின்வருமாறு :

சிவன் (பீடம்)	வழிபட்டதிருமால்
1) மதங்கேசுவரர் (தத்புருஷபீடம்)	நாராயணமூர்த்தி
2) ஆரண்யேசுவரர் (அகோரபீடம்)	பார்த்தசாரதிப்பெருமாள்
3) யோகநாதர் (வாமதேவபீடம்)	அண்ணன் பெருமாள்
4) சொர்ணபுரீசுவரர் (சத்யோஜாதபீடம்)	செம்பொன்னரங்கர்
5) ஜுரஹரேசுவரர் (சோமபீடம்)	குடமாடுங்கூத்தர்
6) நாகநாதர் (சர்வபீடம்)	பள்ளிகொண்டபெருமாள்
7) நம்புவார்க்கன்பர் (மகாதேவபீடம்)	புருஷோத்தமர்
8) கைலாசநாதர் (பீமபீடம்)	வைகுந்தப்பெருமாள்
9) சுந்தரேசுவரர் (பவபீடம்)	திருமேனி அழகர்
10) ஐராவதேசுவரர் (பிரானபீடம்)	மாதவப்பெருமாள்
11) கலிக்காமேசுவரர் (ருத்ரபீடம்)	நரசிம்மமூர்த்தி
12) நயனார்ப்பனேசுரர் (பாசுபதபீடம்)	நயனிபுரம்லெட்சுமி நாராயணர்

இச்செய்தி பராசவனப்புராணத்தில் காணப்படுகிறது; பராசவனப்புராணம் வடமொழியில் சாம்பசிவ சாஸ்திரிகளால் எழுதப்பட்டு 1922ல் இராஜகோபாலசாமி அவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது

கோயில் அமைப்பு

மதங்கீஸ்வரர்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுச்சந்நிதிகள் மதில் ஆகியவற்றுடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது கருவறையின் கிழக்குப் புறத்தில் இடதுபக்கத்தில் மாதங்கீசுவரி சந்நிதியும், இடைக்கட்டுப்பகுதியின் வடதிசையில் சண்டிகேசுவரர் சந்நிதியும் உள்ளன. திருச்சுற்றின் வடக்குப்புறத்தில் தெற்குதிசைநோக்கி காளிசந்நிதியும் அடுத்து மதங்கமுனி சந்நிதியும், உள்ளன. தென்மேற்குமூலையில் விநாயகர் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியை அடுத்து முருகன், வள்ளி, தெய்வானை சந்நிதியும், வடமேற்குமூலையில் மகாலெட்சுமி, ஸ்ரீதேவி, பூதேவி சந்நிதியும் காணப்படுகின்றன.

நந்திமண்டபத்தில் இரண்டு நந்திசிற்பங்கள் உள்ளன. இருநந்திகளில் ஒன்று மதங்கீசுவரரை நோக்கியும், மற்றொன்று திருவெண்காட்டையும் நோக்கியும் உள்ளன.

கருவறை சதுரவடிவானது. அதிட்டானம் (பீடம்) சுவர் (கால்) பிரஸ்தரம் (கூரை அல்லது தோள்) கிரீவம் (கழுத்து) சிகரம் (தலை) ஸ்தூபி (முடி) ஆகிய பெரும்பகுதிகளைக்கொண்டு கம்பீரமாக காட்சிஅளிக்கிறது. ஒவ்வொருபகுதியும் பல நுணுக்கமான அங்கங்களைக் கொண்டு காட்சி அளிக்கின்றன. இவ்விமானம் ஏகதள-விமானமாகும்.

அதிட்டானம் ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம், வேதிகை ஆகியபகுதிகளைக்கொண்டு விளங்குகிறது. குமுதப்படை விருத்த குமுதமாக காணப்படுகிறது பட்டிகையில் பூதகணம் ஒன்று சிற்பமாக வடிக்கப்-

பட்டுள்ளது. அதிட்டானத்தின் மேலுள்ள சுவர்ப்பகுதி அரைத்தூண்களையும், தேவகோட்ட மாடங்களையும் கொண்டு விளங்குகிறது. கருவறை புறச்சுவர் சுற்றிலும் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் தேவகோட்டமாடங்கள் காணப்படுகின்றன. இம்மாடங்களில் முறையே வியாக்கியானதெட்சிணாமூர்த்தி, அடிமுடிகாணா அண்ணல், பிரம்மன் ஆகிய தெய்வஉருவங்கள் காட்சியளிக்கின்றன.

தேவகோட்டங்களின் இருமருங்கிலும் இரு அரைத்தூண்கள் காணப்படுகின்றன இவற்றின் மேல் பகுதிகள் சதுரவடிவில் உள்ளன, இத்தூண்கள் ஒவ்வொன்றிலும் கால் முதல் போதிகை வரை பல உறுப்புக்களைக்கொண்டு அழகுடன் திகழ்கின்றன. சுவரின் மேல் உள்ள பிரஸ்தரம் எனும் கூரைப்பகுதியில் உள்ள கபோதம் நாசிக்கூடுகள் நிறைந்து காணப்படுகிறது. வரிசையாக யாளிவரியும் வடிக்கப்பட்டுள்ளது. சிகரம் வட்டவடிவில் வேசரசிகரமாக அமைந்துள்ளது. அர்த்தமண்டபத்தின் உபானப்பகுதி கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. ஏனையப்பகுதிகள் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன.

சிற்பங்கள்

கருவறை புறச்சுவரின் தெற்கு தேவகோட்டத்தில் வியாக்கியான தட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. ஞான தட்சிணாமூர்த்தி, யோக தெட்சிணாமூர்த்தி வியாக்கியான தட்சிணாமூர்த்தி என்று மூன்று வகைகள் தட்சிணாமூர்த்தி வழிபாட்டில் உண்டு. இங்கு சனகாதி முனிவர்களுக்குத் தத்துவம் உரைக்கும் நிலையில் உள்ள வியாக்யான

தட்சிணாமூர்த்தி உருவம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இவர் வலது காலைத் கீழே தொங்கவிட்டு, முயலகன் மீது வைத்து (முயலகனை மிதித்தல்-தீயசக்தியை அழிப்பதாகப்-பொருள்) இடது காலை, வலது கல்மேல் வைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். முன்வலதுகரம் அபயமுத்திரையிலும், முன்இடதுகரம் சுவடியை பற்றியுமுள்ளன. பின்னிருகரங்கள் அக்கமாலை, அக்னியைப் பற்றியுள்ளன. தலையில் ஜடாபாரம் அலங்கரிக்கின்றது. வலது காதில் மகரகுண்டலமும், இடது காதில்பத்ர குண்டலமும், கழுத்தில் இரண்டு மாலைகளும், வயிற்றில் உதரபந்தமும், இடது தோளிலிருந்து, வலதுபுறமாக கீழே சரிந்து விழும் முப்புரிநூலும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணி செய்கின்றன நெற்றியைச் சுற்றிலும் நெற்றிப்பட்டம் காணப்படுகிறது இங்கு கைலைமலையின் கீழ் தத்துவம் கற்கும் சனகாதிமுனிவர் இருவர் காட்டப்-பட்டுள்ளனர். இவரது திருவடியின் கீழ் உள்ள முயலகன் மண்டியிட்டநிலையில் முகத்தைத் திருப்பிநோக்கும் பாவனையில் காட்டப்பட்டுள்ளான். முயலகனின் மேல் பகுதியில் நந்தி சிற்பம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தை கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலச்சோழர் கலைப்படைப்பாகக் கருதலாம்.

அடிமுடிகாணா அண்ணலின் (லிங்கோத்பவமூர்த்தி) சிற்பம் மேற்குத் தேவகோட்டத்தில் காணப்படுகிறது. அனல்பிழம்பாகத் தோன்றும் இலிங்கத்தின் நடுவே சிவ-பெருமான் நான்கு கரங்களுடன் நின்றகோலத்தில் காணப்-படுகின்றார் மேலிருகரங்கள் மழு, மான் பற்றியுள்ளன. கீழ்வலதுகரம் அபய, முத்திரைக்காட்டி அருள்பாலிக்கிறது. இடதுகரம் தொடைமீது ஊரு முத்திரையில் காணப்-படுகிறது. சிவனது தலையை ஜடாபாரம் அலங்கரிக்கிறது.

காதுகளில் மகரக் குழைகளும், கழுத்தில் கண்டசாரமும் மணியாரமும், சரப்பளியும், மார்பில் புரிநூலும், வயிற்றில் உதரபந்தமும், கைகளில் காப்பும் அணிசெய்கின்றன.

பொதுவாக இச்சிற்பத்தில் மேற்புறத்தில் பிரம்மன் அன்னம் உருவத்திலும், கீழ்புறத்தில் திருமால் பன்றிமுகம் மனித உடம்பு கொண்ட உருவமும் காணப்படும். இச்சிற்பத்தில் இவ்வுருவங்கள் காணப்படவில்லை. இச்சிற்பத்தின் உயரம் 1 மீட்டர். இது கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச் சோழர் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

கருவறையின் வடதிசை மாடத்தை நான்முகன் சிற்பம் அலங்கரிக்கின்றது. நான்கு முகங்களும், நான்கு கரங்களும், கொண்டு தாமரைபீடத்தில வலதுகாலைக் கீழே தொங்க விட்டு, இடது காலை மடித்து வைத்து அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றார். முன் வலதுகரம் அபய முத்திரையிலும், முன் இடதுகரம் இடது தொடைமீது வைத்தும் காணப்படுகின்றன. நான்முகனின் தலைகளை ஜடாபாரங்கள் அலங்கரிக்கின்றன, காதுகளில் உத்திராட்ச குண்டலங்களும் கழுத்தில் பூப்பதக்கமும், சரப்பளியும், மார்பில் புரிநூலும், புஜங்களில் கேயூரமும் அணிசெய்கின்றன இடையிலிருந்து முழங்கால் வரை வரிவரியான அலைகளையொத்த ஆடைக்கட்டும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும், இச்சிற்பத்தை அலங்கரிக்கின்றன இச்சிற்பத்தின் உயரம 90 செ.மீ. இச்சிற்பம் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலச் சோழர் காலத்தது ஆகும்.

தமிழ்நாட்டின் சைவக்கோயில்களில் சண்டிகேசுவரர் திருவுருவம் கருவறையை அடுத்துவடபுறம் தனிக்கோயி-

லாக இடம்பெறும். இதன்வாயில் கருவறையை நோக்கிய-வாறு இருக்கும். சைவ ஆகம முறைப்படி அமையும் சைவ-வழிபாட்டில் விநாயகருக்கு அளிக்கும் முக்கியத்துவம் சண்டேசுவரர்க்கும் உண்டு. சிவபூசை முடிவில் சண்டிகேசுவரரை வழிபடுதல் வழக்கம். அவரை வழிபடா-மல் இருந்தால் சிவபூசை நிறைவுபெறாது என்பர். சிவ பூசையின் பலனை சண்டிகேசுவரர் பூசையே நிரப்பும். சிவஆலய வழிபாட்டுப் பலனை அளிப்பவர் இவரே. சிவ தியானத்தில் ஈடுபட்டு மெய்மறந்து இருப்பவரை கைதட்டி வணங்கும் மரபு உண்டு.

இங்குள்ள சண்டிகேசுவரர் வலதுகாலைக் கீழே தொங்கவிட்டு, இடதுகாலை மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். வலதுகரம் பரசு பற்றியுள்ளது. தலையில் ஜடாபாரமும், காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் மாலையும், மார்பில் புரிநூலும், இடையில் கச்சையும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அலங்கரிக்கின்றன. இச்சிற்பத்தின் உயரம் 60 செ.மீ. காலம் கி. பி. 18ஆம் நூற்றாண்டாகும்.

மதங்கரிஷி

திருச்சுற்றில் இடைப்பகுதியின் எதிர்புறத்தில் தெற்குத் திசையில் வடக்கு நோக்கியுள்ள சந்நிதியில் மதங்கரிஷி சிற்பம் காணப்படுகிறது. இதுவே மதங்கா கிராமத்து மதங்க ரிஷியின் சிற்பம் என்பர். இரண்டு கால்களையும் மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் யோகத்தில் உள்ளார். இரண்டு கரங்களும் மார்பில் மடக்கி வைத்துள்ள நிலையில் இச்

சிற்பம் காட்டப்பட்டுள்ளது. காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் மாலையும், இடது தோளிலிருந்து வலது புறமாக கீழே சரிந்துவிழும் புரிநூலும் அணிசெய்கின்றன. உருண்டுதிரண்ட சற்று பருத்த உருவம், கட்டையான கால்கள் கொண்டு ச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இது சிவகணமாக இருக்கலாம். இச்சிற்பத்தின் உயரம் 65 செ.மீ. கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த முற்காலச்சோழர் சிற்பமாகும்.

மதங்கீசுவரி சந்நிதி

இச்சந்நிதி மதங்கீசுவரர்கோயிலின் முன்பக்கம் இடது புறத்தில் தெற்குநோக்கிக் காணப்படுகிறது, மதங்க முனிவருக்கு அம்பிகையின் அம்சமான யோகமாயை மதங்கீசுவரி என்னும் பெயரில் மகளாகத்தோன்றி, மதங்கீசுவரரை மணந்தாள். அவளுக்கு அஞ்சனாட்சி, சுகஹஸ்தை (கையில் கிளியுடையவள்) மகாசியாமை எனப் பலபெயர்கள் உள்ளன.

மதங்கீசுவரி சந்நிதி கருவறை, இடைக்கட்டு, அர்த்த மண்டபம் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவை அனைத்தும். செங்கற்களால் கட்டப்பட்டவை. மதங்கீசுவரி சிற்பம் சதுர வடிவமான பீடத்தின்மீது நின்றநிலையில் காணப்படுகிறது. நான்கு கரங்களில் முன்னிருகரங்கள் அபய, வரத முத்திரைகளில் காணப்படுகின்றன. பின் வலதுகரம் அக்கமாலையும், பின் இடதுகரம் தாமரை மலரைப் பற்றியும் உள்ளன. தலையில் கரண்டமகுடமும், காதுகளில் மகரகுண்டலங்களும், இடுப்பிலிருந்து பாதம்வரை வரிவரியான அலைகளையொத்த ஆடையும் அணிசெய்கின்றன. கழுத்தில் தாலிச்சரமும், மூன்று மாலைகள் அணிந்தும் கைகளில்

காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிந்தும் இச்சிற்பம் காணப்படுகிறது. மார்பில் கச்சை காணப்படவில்லை. இச்சிற்பத்தின் உயரம் 1.20 மீட்டர். கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலைப்படைப்பாகும்.

விநாயகர் கோயில்

விநாயகர் சந்நிதி கருவறையின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. கருவறை, அதிட்டானம், சுவர், பிரஸ்தரம் கிரீவம், சிகரம், கலசம் ஆகிய அமைப்புகள் கொண்டு காணப்படுகிறது. இச்சந்நிதி முழுதும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது, இச் சந்நிதியில் சுவேத விநாயகர் சிற்பம் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. நான்கு கரங்களில் முன்னிருகரங்கள் ஒடிந்த கொம்பும், மோதகமும் பற்றியுள்ளன, பின்னிருகரங்கள் அங்குசம், பாசம் பற்றியுள்ளன. தலையில் கரண்ட மகுடமும், வயிற்றில் உதரபந்தமும், மார்பில் முப்புரிநூலும் காணப்படுகின்றன. துதிக்கை வலம்புரியாக உள்ளது. இச்சிற்பத்தின் உயரம் பீடத்துடன் 80 செ.மீ. இச்சிற்பத்தை கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச்சோழர் கலைப்படைப்பாகக் கருதலாம். அண்மையில் பிரபவ வருடம் தைமாதம் 21ந் தேதி இச்சந்நிதிக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது

சுப்பிரமணியர் கோயில்

இது திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. கருவறை, இடைக்கட்டு, அர்த்தமண்டபம் ஆகிய அமைப்புகள் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்டு சிமெண்ட் பூசப்பட்டு விளங்குகிறது. சுப்பிரமணியர் கருவறை

யில் நின்றநிலையில் பின்னிருகரங்களில் சக்திவஜ்ரம் பற்றி யும்முன்னிருகரங்களில் அபய வரத முத்திரை காட்டியும் விளங்குகிறார். தலையில் கரண்டமகுடமும், வலதுகாதில் மகரகுண்டலமும், இடதுகாதில் பத்ரகுண்டலமும், கழுத்தில் பதக்கத்துடன் இரண்டு மாலைகளும் அணிசெய்கின்றன. கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன. மார்பில் சன்னவீரம் உள்ளது. பின்புறம் மயில் காட்டப்பட்டுள்ளது.

முருகனின் வலதுபுறத்தில் வள்ளிசிற்பம் நின்றநிலையில் காணப்படுகிறது. வலதுகரம் தொங்கும் கரமாகவும் இடது கரம் தாமரைமலரைப்பற்றியுமுள்ளது. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் மாலையும், இடுப்பில் ஒட்டியாணமும் இடையிலிருந்து பாதம் வரை ஆடையும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் காணப்படுகின்றன. மார்பில் கச்சை காணப்படுகிறது. முருகனின் இடதுபுறத்தில் நின்றகோலத்தில் தெய்வானை காணப்படுகிறாள். வலதுகரம் தாமரைமலரைப் பற்றி-யுள்ளது. இடதுகரம் தொங்கும் கரமாகக் காணப்படுகிறது. தலையில் கரண்டமகுடமும், கழுத்தில் மாலையும் காணப்-படுகின்றன. இடுப்பிலிருந்து பாதம் வரை ஆடைஅணிந்து காணப்படுகிறது. மார்பில் கச்சை காட்டப்படவில்லை. கைகளில் காப்பும் பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. இச்சிற்பத்தின் முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய மூன்று சிற்பங்களும் பிற்காலத்தைச்-சார்ந்தவையாகும்.

திருச்சுற்றில் கருவறையின் வடக்குப்புறத்தில் நாராயணி சந்நிதி உள்ளது. மதங்கரிஷி தவத்தில் இருக்கும்

போது நாராயணப்பெருமாள் மோகினி உருவம் எடுத்து மதங்கரிஷியின் தவத்தைக் கலைக்க முயல ரிஷி கோபமடைந்து பெண் உருவில் நாராயணியாக இருக்கும் நாங்கூர் நாராயணப்பெருமாளை தன் எதிரிலேயே இருக்கும்படி சாபமிட்டார் என்று செவிவழிப் புராணச்செய்தி கூறப்படுகிறது. தனிச்சந்நிதியாக இச்சிற்பம் உள்ளது. நாராயணி தாமரை பீடத்தில் நின்ற நிலையில் காணப்படுகிறாள். நான்கு கரங்களில் முன்னிருகரங்கள் அபய, ஊரு முத்திரைகளிலும் பின்னிருகரங்கள் சக்கரம் சங்கும் பற்றியுமுள்ளன தலையில் கிரீடமகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் மாலையும், மார்பில் முப்புரிநூலும், இடுப்பில் ஒட்டியாணமும் கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. நீண்ட சதுரமுகம் கொண்ட புன்முறுவல் பூத்தமுகம், எடுப்பான நாசியும், பார்ப்பவர்க்களைக் கவரும் அழகு கொண்டு மோகினியாக இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச் சோழர் கலைப் படைப்பாகும்.

இக்கோயில் திருச்சுற்றில் மகாமண்டபத்தின் வடக்குப்புறத்தில் நவக்கிரக சந்நிதி உள்ளது. நவக்கிரகங்கள் உயர்ந்த மேடைமீது வைக்கப்பட்டுள்ளன. இவை கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

காளி

திருச்சுற்றில் மகாமண்டபத்தின் தெற்குத்திசையில் வடக்குநோக்கி காளி சந்நிதி உள்ளது. இது செங்கற்களால் கட்டப்பட்டு, சிமெண்ட் பூசப்பட்டுள்ளது.

கருவறையிலுள்ள மகாகாளியம்மன் அத்திமரத்தால் செய்யப்பட்டது. இடுப்புப்பகுதிவரை மட்டும் காணப்படுகிறது. எட்டு கரங்கள் உள்ளன, வலதுகரங்கள் முறையே சக்கரம், கதை, கத்தி, கேடயம் பற்றியுள்ளன. இடது கரங்கள் முறையே சங்கு, பாசம், நாகம், கபாலம் பற்றியுள்ளன. வாயில் இரண்டு நீண்ட கோரைப்பற்கள் உள்ளன. தலையில் சுடர்முடி காணப்படுகிறது. காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் உத்திராட்சமாலையும், காசிமாலையும், இடுப்பில் ஒட்டியாணம், மார்பில் கச்சையும், கைகளில் காப்பும் காணப்படுகின்றன. இடுப்பில் பாவாடை ஆடையாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் பிற்காலத்தில் செய்து வைக்கப்பட்ட மரச்சிற்பமாகும். ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை வைகாசித் திங்கள் புதன்கிழமையன்று காளி வீதியுலாக் காட்சி நடைபெறும். இக்காளியம்மன்கோயிலை இவ்வூரைச்சார்ந்த முதலியார் செங்குந்தர் மரபினர் பராமரித்து வருகின்றனர்.

அர்த்தமண்டபச் சிற்பங்கள்

அர்த்தமண்டபத்தில் உதிரிச் சிற்பங்களாக முருகன், பைரவர், சூரியன் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

முருகன் சிற்பம் நின்ற நிலையில் காணப்படுகிறது. முன்வலதுகரம் உடைந்து உள்ளது. முன் இடதுகரம் ஊரு முத்திரையில் உள்ளது. பின் வலதுகரம் சக்திப்படையையும், பின் இடதுகரம் வஜ்ரமும் பற்றியுள்ளன. முருகனின் பின்புறம் மயில் காட்டப்பட்டுள்ளது

அர்த்தமண்டபத்தின் வடக்குகிழக்குமூலையில் பைரவர் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் சதுரவடிவமான

பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறது. முன்னிரு கரங்கள் சூலமும், கபாலமும் பற்றியுள்ளன. பின்னிரு-கரங்கள் உடுக்கை, பாசம் பற்றியுள்ளன. தலையில் ஜுவாலமகுடமும், வலதுகாதில் மகரகுண்டலமும், இடது காதில் பத்ரகுண்டலமும், மார்பில் முப்புரிநூலும், கழுத்தில் மாலையும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. இடுப்பில் அரவம் காட்டப்பட்டுள்ளது. ஆடை இல்லை. பைரவரின் பின்புறம் நாய் காட்டப் பட்டுள்ளது.

சூரியன் சிற்பம் பைரவர் சிற்பம் அருகில் காணப்படு கிறது சதுரவடிவான பீடத்தின் மீது நின்ற நிலையில் உள்ளது இருகரங்களும் விரிந்த தாமரை மலர்களைப் பற்றி உள்ளன. தலையில் கரண்டமகுடமும், கழுத்தில் மாலையும் மார்பில் முப்புரிநூலும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. இச்சிற்பத்தின் உயரம் 1 மீட்டர். கி பி 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் சிற்பமாகும்.

6—4—73 ஆம் ஆண்டு திருப்பணி தொடக்கவிழாக் கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுகிறது. இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது.

நம்புவார்க்கன்பர் கோயில்

இக்கோயில் மங்கைமடம் செல்லும் சாலையில் அரசு உயர்நிலைப்பள்ளியின் வலதுபுறத்தில் உள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நந்திமண்டபம் பலிபீடம், திருச்சுற்று. திருச்சுற்று மதில் கொண்டு மேற்குத் திசை நோக்கி அமைந்துள்ளது.

இக்கோயில் வடமேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும் தென்மேற்கு மூலையில் முருகன் சந்நிதியும், திருச்சுற்றில் மேற்குப்புறத்தில் தெற்குத்திசை நோக்கி தாயார் சந்நிதியும் (நம்பிப்பிரியாள்) உள்ளன. திருச்சுற்றின் கருவறையின் வடக்குப்புறத்தில் தெற்குத்திசை நோக்கி சண்டிகேசுவரர் சந்நிதியும் காணப்படுகின்றன.

கருவறையில் நம்புவார்க்கன்பர் இலிங்க உருவத்தில் காணப்படுகின்றார். மகாமண்டபத்தின் தெற்குப்புறத்தில் தென்கிழக்கு மூலையில் சுந்தரேசுவரர் இலிங்க வடிவத்திலும் இதன்நேர் எதிர்ப்புறத்தில் கைலாசநாதர் லிங்கவடிவத்திலும் காணப்படுகின்றனர்.

கருவறை, உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம் கிரீவம், சிகரம் போன்ற அமைப்புகள் கொண்டு காணப்படுகிறது. உபானம் முதல் சிகரம் வரை செங்கற்கள் சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டுள்ளது. விமானத்தின் கிரீவப்பகுதியில் கிழக்குத்திசையில் சந்திரசேகரர் உருவமும், தெற்கில் வியாக்யான தட்சிணாமூர்த்தி உருவமும், வடக்கில் பிரம்மன் உருவமும் சுதை உருவங்களாக வடிக்கப்பட்டு உள்ளன.

தேவகோட்டச் சிற்பங்கள்

அர்த்தமண்டபத்தின் வெளிச்சுவரில் வடதுபுறத்தேவ கோட்டத்தில் துர்க்கைசிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் நின்றநிலையில் முன்னிருகரங்கள், அபய, ஊரு முத்திரை களிலும், பின்னிருகரங்கள் சக்கரம், சங்கு பற்றியுமுள்ளன. துர்க்கையின் கால்கள் மகிஷனின் எருமைத்தலையை மிதித்த நிலையில் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 57

செ.மீ. காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டாகும் கருவறையின் வெளிச்சுவரின் வடதேவகோட்டத்தில் இருக்க வேண்டிய பிரம்மன் சிற்பம் காணப்படவில்லை. மேற்குத்தேவகோட்டத்தில் லிங்கோத்பவமூர்த்தி சிற்பம் உள்ளது, இச்சிற்பம் முன்னிருகரங்கள் அபய, ஊரு முத்திரைகளிலும் பின்னிருகரங்கள் மழு, மான், பற்றியுமுள்ளன. மேல்புறத்தில் பிரம்மன் அன்னம் உருவத்திலும், கீழ்புறத்தில் திருமால் வராக உருவத்திலும், வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் உயரம் 70 செ.மீ கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

கருவறையின் தெற்குத் தேவகோட்டத்தில் இச்சிற்பம் உள்ளது. வலதுகாலைக் கீழே தொங்கவிட்டு, முயலகன்மீது வைத்து இடதுகாலைக் குத்திட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. முன்வலதுகரம் அபய முத்திரையிலும், முன் இடதுகரம் சுவடியைப் பற்றியுமுள்ளன. பின்னிருகரங்கள் அனலும், அக்கமாலையும் பற்றியுள்ளன. தலையில் ஜடாபாரம் அலங்கரிக்கின்றது. வலது காதில் மகரகுண்டலமும், இடது காதில் பத்ரகுண்டலமும், கழுத்தில் மாலையும், மார்பில் முப்புரிநூலும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. வியாக்கியான தட்சிணாமூர்த்தி சிற்பத்தின் கீழ்புறத்தில் படம் எடுக்கும் நிலையில் அரவம் ஒன்றும், அருகில் அமர்ந்திருக்கும் நிலையில் இரண்டு மான் உருவங்களும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. மேல்புறத்தில் ஆலமரமும், ஆலமரக்கிளையில் தோல்பை ஒன்று தொங்கும் நிலையிலும், அருகில் அக்கமாலை, வெண்சாமரம் ஆகியவையும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. தட்சிணாமூர்த்தியின் வலதுபுறத்தில் முனிவர் சிற்பம் ஒன்றும், ஒரேகல்லில் வடிக்கப்பட்ட இரண்டு சனகாதி முனிவர் சிற்பங்களும் காணப்படுகின்றன.

ஒரு மீட்டர் உயரமுள்ள இந்த தட்சிணாமூர்த்தி சிற்பம் கி பி 12-13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச்சோழர் கலைப்படைப்பாகும்.

நம்பிப்பிரியாள் சந்நிதி

இச்சந்நிதி கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு கட்டப்பட்டுள்ளது, இச்சந்நிதியில் நம்பிப்பிரியாள் சிற்பம் நின்ற நிலையில் முன்னிருகரங்கள் அபய, ஊரு முத்திரைகளிலும் பின்னிருகரங்கள் அக்கமாலை, தாமரைமலர், பற்றியுமுள்ளன. இச்சிற்பத்தின் உயரம் பீடத்துடன் 95 செ.மீ காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டாகும். இச்சந்நிதியின் அர்த்தமண்டப மேற்குபுறச்சுவரில கிழக்கு நோக்கி கஜலெட்சுமி சிற்பம் காணப்படுகிறது. காலம் கி.பி 18 ஆம் நூற்றாண்டாகும்.

சண்டிகேசுவரர்

சண்டிகேசுவரர் பீடத்தின்மீது வலதுகாலைக் கீழே தொங்கவிட்டு, இடதுகாலை மடித்து அமர்ந்த நிலையில காணப்படுகிறார். வலதுகரத்தில் மழுவைப் பற்றியும் இடது கரம் இடது தொடை மீது வைத்தும் காணப்படுகிறார். கழுத்தில் மாலையும், மார்பில் முப்புரி நூலும், வயிற்றில் உதரபந்தமும், கைகளில காப்பும், கால்களில் தண்டையும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 80 செ.மீ. காலம் கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டாகும்.

சுப்பிரமணியர் கோயில்

திருச்சுற்றில் இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், கொண்டு கட்டப்பட்டுள்ளது. இச்சந்நிதியில் சுப்பிரமணியர்

சதுரவடிவமான பீடத்தில் நின்றநிலையில் பின்னிருகரங்களில் சக்தி, வஜ்ரம் பற்றியும், முன்னிருகரங்களில் அபய, ஊரு முத்திரைகளில் காட்டியும் விளங்குகிறார். காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டாகும். சுப்பிரமணியருக்கு வலதுபுறத்தில் நின்றநிலையில் இடதுகரம் தாமரைமலர் பற்றியும், வலதுகரம் தொங்கும் கரமாகவும் வள்ளி காணப்படுகிறாள். சுப்பிரமணியரின் இடதுபுறத்தில் தெய்வானை சிற்பம் நின்றநிலையில் காணப்படுகிறது. வலதுகரம் தாமரைமலர் பற்றியும், இடதுகரம் தொங்கும் கரமாகவும் காணப்படுகிறது.

பைரவர்

மகாமண்டபத்தில் கிழக்குப்பகுதியில் மேற்குநோக்கி பைரவர் சிற்பம் காணப்படுகிறது. பீடத்தின்மீது நின்றநிலையில் முன்னிருகரங்களில் சூலம், கபாலம் பற்றியும் பின்னிருகரங்களில் உடுக்கை, பாசம் பற்றியும் உள்ளது. தலையில் ஜடாமகுடமும், வலதுகாதில் மகரகுண்டலமும், இடதுகாதில் பத்ரகுண்டலமும் அணிசெய்கின்றன. கழுத்தில் மூன்று மாலைகளும், மார்பில் புரிநூலும், வயிற்றில் உதரபந்தமும், இடதுதோளிலிருந்து கீழ்நோக்கி மணிக்கட்டு வரையில் கபாலங்களால் ஆன மாலையும் இடுப்பில் அரவக்கட்டும், புஜங்களில் கேயூரமும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் கொண்டு இச்சிற்பம் நிர்வாணமாகக் காட்டப்பட்டுள்ளது. பைரவரின் கடைவாயில் நீண்ட கோரைப்பற்கள் உள்ளன. தலையின் சுடர்முடியில் இடதுபுறத்தில் பிறை காட்டப்பட்டுள்ளது. பைரவரின் பின்புறம் நாய் உள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 80 செ. மீ. இதன்காலம் கி. பி. 12-13 ஆம் நூற்றாண்டாகும்.

சூரியன்

பைரவர் சிற்பத்தின் அருகில் சூரியன் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் நின்றநிலையில் கரங்கள் இரண்டும் தாமரைமலர்களைப் பற்றியுள்ளன. தலையின் பின்புறம் ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 75 செ. மீ. காலம் கி பி. 18 ஆம் நூற்றாண்டாகும்.

புராணச்செய்தி

மதங்கரிஷியின் தவத்தைக் கலைக்க நாராயணப்பெருமாள் மோகினியாக (நாராயணி) மாறி, தவத்தைக் கலைக்க முயன்றார். மதங்கரிஷி ஆத்திரமடைந்து நீ எப்போதும் பெண்ணாகக் கடவாய் என்று சாபமிட்டார். மோகினியாக உள்ள நாராயணப்பெருமாள் மதங்கரிஷியிடம் சாபம் நீங்கக்கேட்க, அதற்கு மதங்கரிஷி, நான் சிவனை நினைத்து தவம் செய்கின்றேன், நீயும் சிவனை நினைத்துத் தவம்செய் என்று கூறினார். மோகினி 10 இடங்களில் உள்ள சிவனை வழிபட்டு, கடைசியாக 11 வது தலமாக இக்கோயிலிலுள்ள சிவனை வழிபட்டபோது மோகினி உருவத்திலுள்ள நாங்கூர் நாராயணப்பெருமாள் புருஷோத்தமப்பெருமானாக ஆனார் என்று செவிவழிச்செய்தியாகக் கூறப்படுகிறது.

18—3—1975 இல் இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மரத்தால் ஆன மயில், குதிரை ஆகிய வாகனங்கள் இங்குள்ளன.

உத்திராபதி கோயில்

இக்கோயில் முதலியார் தெரு நடுத்தெருவில் உள்ளது. இக்கோயில் மேற்குத்திசை நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தின் வடக்குப்புறத்தில் பிள்ளையார் சிற்பம் ஒன்று உள்ளது. இக்கோயில் கி. பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இக்கோயில் இறைவனுக்கு சித்திரைத் திங்களில், பரணி நட்சத்திரத்தில். அபிஷேகம், ஆராதனை செய்யப்பட்டு, அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

சிறு தெய்வக் கோயில்கள்

இத்தலைப்பில் நாங்கூரில் உள்ள விநாயகர் கோயில்கள், கிராம தெய்வங்களான அய்யனார், செல்லியம்மன், மாரியம்மன் கோயில்களைப் பற்றிக் காணலாம்.

விநாயகர் கோயில்கள்

பராசவனபுராணம் ஒன்பது விநாயகர் கோயில்களைக் குறிப்பிடுகிறது. அவைகளாவன :

1. சித்தபிலத்திலுள்ள சித்தி, புத்தியுடன் கூடிய யாலமாயிர விநாயகர் 2. நாகநாதர் சந்நிதியிலுள்ள புஷ்டி பீடம் 3. வேதராசபுரம் பரமேச விநாயகர் 4. கௌதமாசிரமம் கற்பாயிர விநாயகர் 5 மதங்காசிரமம் அமிர்தவிநாயகர் 6. நாலாயிரத்தொருவர், 7. மதங்கருக்குப் பக்கத்திலுள்ள மதங்க விநாயகர் 8. மதங்கருக்கு மேற்கேயுள்ள சக்கர-விநாயகர் 9. பிரமாசிரமத்திலுள்ள பிரம்ம விநாயகர். இவற்றில் மூன்று விநாயகர்கள் தனிக்கோயில்கள் கொண்டு இவ்வூரில் விளங்குகின்றனர்.

நாலாயிரத்தொருவர் கோயில்

இக்கோயில் திருநாங்கூரிலிருந்து திருமணிக்கூடம் செல்லும் சாலையின் இடதுபுறத்தில் உள்ளது. இவ்விநாயகருக்கு நாலாயிரத்தொருவர் என்றுபெயர். இராமர் இவ்விடத்தில் நாலாயிரம் முனிவர்களுடன் அசுவமேத யாகத்தைத் தொடங்கியபோது விநாயகரை வழிபடாமையால் முனிவர்கள் மந்திரங்களை மறந்தனர். பின்னர் நாரதர் சொல்லியபடி பிள்ளையாரை வழிபட, நாலாயிரவருடன் பிள்ளையாரும் வந்து அமர்ந்ததால், அவருக்கு நாலாயிரத்தொருவர் என்றுபெயர் வந்தது என்பது புராணம்.

கோயில் அமைப்பு

இக்கோயில் கருவறை, இடைக்கட்டு, அர்த்தமண்டபம் திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு தெற்குத்திசை-நோக்கி அமைந்துள்ளது. கருவறை, உபானம், அதிட்டானம் சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய அமைப்-புகள் கொண்டு கட்டப்பட்டுள்ளது. உபானம் முதல் சிகரம் வரை செங்கற்களால், சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டு உள்ளது. கிரீவப்பகுதியில் மேற்குப்புறத்தில் ஒரு முனிவர் தியானம் செய்யும் நிலையில் காணப்படுகிறார். அருகில் இரண்டு பணியாளர்கள் காணப்படுகின்றனர். இதன் மேல் புறத்தில் விநாயகர் தாமரைபீடத்தில் அமர்ந்த நிலையிலும் வடக்குப்புறத்தில் தியான நிலையில் முனிவரின் உருவமும், இதன் மேல்புறத்தில் பத்மபீடத்தில் அமர்ந்த நிலையில் விநாயகர் உருவமும், கிழக்குப்புறத்தில் ஒருமுனிவர், அரு-கில் இரண்டு பணியாளர் உருவங்களும், இதன் மேல்புறத்தில் அமர்ந்த நிலையில் விநாயகா உருவமும், சுதை உருவங்-களாக வடிக்கபபட்டுள்ளன விமானம் இரண்டு தளங்கள் கொண்டதாகும. அர்த்தமண்டபத்தை 6 கருங்கல் தூண்கள் தாங்கிநிற்கின்றன. இத்தூண்கள் எவ்வித வேலைப் பாடுமின்றி எளிமையாக வடிக்கப்பட்டுள்ளன.

சிற்பங்கள்

கருவறையில் நாலாயிரத்தொருவர் என்ற பெயர் கொண்ட விநாயகர் சிற்பம உள்ளது இச்சிற்பத்தின் காலம் கி, பி. 18 ஆம் நூற்றாண்டாகும் விநாயகர் சுயம்பு மூர்த்தியாவார்.

சங்கநிதி

கருவறையின் வலதுபுற மூலையில் தெற்குத் திசை நோக்கி வாயிற்காப்பாக அமைந்துள்ளது சங்கநிதி சிற்பம். இச்சிற்பம் மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் கலைவனப்புடன் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் பீடத்தின் மீது வலதுகாலைக் குத்திட்டு, இடதுகாலை மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. வலதுகரம் வலது காலில்பட்டு கீழே தொங்கவிட்டு, இடதுகரதத்தை இடது தொடைமீது வைத்துக் காணப்படுகிறது. தலையில் கொண்டையும், காதுகளில் பத்ரகுண்டலங்களும், கழுத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மாலையும் இடது தோளி-லிருந்து வயிற்றின் வலதுபகுதிவரை கீழே விழும் முப்புரிநூ-லும் வயிற்றில் உதாபந்தமும், இதன் மேல்புறத்தில் ஒரு பந்தமும், கேயூரமும், தோள்வளையும், கைகளில் காப்பும், இடது கைவிரல்களில் வளையம் போன்ற அமைப்புடன் மூன்று மோதிரங்களும், பாதங்களில் பாதசரமும் அணிசெய்கின்றன. நீள்சதுரமான முகமும் சற்றுதுருத்திய-கண்களும், சற்று பருத்த வயிறுமாக இச்சிற்பம் வடிக்கப்-பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பக்கங்களில் சங்கிலிருந்து காசுகள் கீழே கொட்டுவது போன்ற அமைப்பு காணப்படுகிறது. சங்கின மேல்புறத்தில் இரண்டு தாமரை மலர்கள் வடிக்கப்பட்டுள்ளன இச்சிற்பத்தின் உயரம் 65 செ. மீ. இச்சிற்பம் கி. பி. 9-10 ஆம் நூற்றாணடைச் சார்ந்த முற்காலச் சோழர் கலைப்படைப்பாகும். இதன்மீது பிற்காலத்தில் சுதை பூசியுள்ளனர்.

பத்மநிதி

கருவறையின் இடதுபுற மூலையில் தெற்குத்திசை நோக்கிப் பத்மநிதி சிற்பம் வாயிற்காப்பாக காணப்படுகிறது.

இச்சிற்பம் செவ்வக வடிவான பீடத்தின்மீது வலதுகாலை மடக்கி, இடதுகாலைக் குத்திட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது தலையில் ஜடாபாரமும் காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மாலையும், மார்பில் மணிகளாலான முப்புரிநூலும், வயிற்றில் உதரபந்தமும், இதன் மேல்புறத்தில் ஒருபந்தமும் கேயூரமும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் வலதுகையில் நான்கு விரல்களில் வட்டவடிவான மோதிரங்களும் அணிசெய்கின்றன. சற்று துருத்தியகண்களும், பட்டையான மூக்கும், கடைவாயில் நீண்ட இரண்டு கோரைப்பற்களும், சற்று பருத்த வயிறுமாக இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் இருபுறங்களிலும் இரண்டு தாமரைமலர்கள் வடிக்கப்பட்டுள்ளன இச்சிற்பத்தின் உயரம் 45 செ மீ. இச்சிற்பம் கி.பி 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச்சோழர் கலைப்படைப்பாகக் கருதலாம். இதன்மேல் சுதை பூசப்பட்டுள்ளது.

சங்கநிதி, பத்மநிதி என்று இரண்டு செல்வங்கள் பண்டைய வழக்கில் பெரிதும் போற்றப்பட்டன. அப்பர் சங்கநிதி, பத்மநிதி இரண்டும் தந்து தரணி முழுதும் தந்தாலும் வேண்டாம்; சிவனடியார் புலையரானாலும் அவர்களுக்குப் பணிசெய்வதையே பெரிதும் வேண்டுகின்றேன் என்று குறிப்பிடுவார். தாராசுரம், தாடிக்கொம்பு போன்று பல ஊர்களில் சங்கநிதி, பத்மநிதி சிற்பங்கள் காணப்படுகின்றன.

சேந்தனார்

அர்த்தமண்டபத்தின் மேற்குப்புறம் கிழக்கு நோக்கி சேந்தனார் சிற்பம் காணப்படுகிறது. சேந்தனார் நின்ற

நிலையில் இருகரங்களையும் கூப்பி அஞ்சலித்த நிலையில் காணப்படுகின்றார். வழிந்த தலையும், கீழே சரிந்து விழும் நீண்ட காதுகளும், கழுத்தில் மாலையும். இடையில் ஒரு துண்டு மட்டும் ஆடையாகவும் அணிந்து, அடியார்க்கு உரிய உருவத்தில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் பீடத்துடன் 55 செ.மீ. இது கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அர்த்தமண்டபத்தின் மேற்குப்புறத்தில் சண்டிகேசுவரர் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உயரம் பீடத்துடன் 75 செ மீ. இச்சிற்பம் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த முற்காலச்சோழர் கலைப்படைப்பாகும்.

இங்குள்ள திருக்குளம் தசாஅசுவமேத தீர்த்தம் எனப்படுகிறது. 15–9–1971-ல் இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது.

சுரம் தீர்த்த விநாயகர் கோயில்

இக்கோயில், இவ்வூர் மேலவீதியில் கருவறை, இடைக்கட்டு, அர்த்த மண்டபம், திருச்சுற்று, திருசுற்றுமதில் கொண்டு கட்டப்பட்டுள்ளது. கருவறையின் எதிர்ப்புறம் நந்திமண்டபமும், இதன் முன்புறம் பலிபீடமும் காணப்படுகின்றன. சிவன் கோயிலுக்குரிய பரிவார தெய்வங்களின் சந்நிதிகளும் உள்ளன.

திருச்சுற்றில் கருவறையின் தெற்குப்புறத்தில் அமிர்தபுரீசுவரர் சந்நிதியும், திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் நவக்கிரகச் சந்நிதியும், தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும், காணப்படுகின்றன. அர்த்தமண்டபத்தில் இடது

புறத்தில் தெற்குதிசைநோக்கி சந்திராச்சி அம்மன் சந்நிதியும், அர்த்தமண்டபத்தின் மேற்குப்புறச் சுவரில் கிழக்கு நோக்கி பாலசுப்பிரமணியர் சந்நிதியும், வடக்குப்புறத்தில் சண்டேசுவரர் சந்நிதியும் காணப்படுகின்றன

கருவறை உபானம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம் கலசம் ஆகிய அமைப்புகள் கொண்டு கட்டப்பட்டுள்ளது. உபானம், முதல் சுவர்ப் பகுதிவரை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. விமானத்தின் கழுத்துப்பகுதியில் மேற்குப்புறத்தில் ரெங்கநாதர் உருவமும், வடக்குப் புறத்தில் பிரம்மன் உருவமும், தெற்குப்புறத்தில் ஆலமர்செல்வன் உருவமும் சுதை உருவங்களாக வடிக்கப்பட்டு உள்ளன. இக்கோயில் விமானம் ஏகதளவிமானமாகும்

சிற்பங்கள்

கருவறையில் விநாயகர் சிற்பம் மூலவர் சிற்பமாகக் காணப்படுகிறது. அர்த்தமண்டபத்தில் முருகன், வள்ளி, தெய்வானை போன்ற சிற்பங்கள் உள்ளன. இவை கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கருவறையின் வெளிச் சுவரில் மேற்கு, வடக்கு, தேவகோட்டங்களில் சிற்பங்கள் காணப்படவில்லை அர்த்தமண்டபத்தின் வெளிச்சுவரில் வடக்கு தேவகோட்டத்தில் துர்க்கைச் சிற்பம் காணப்படுகிறது. துர்க்கை செவ்வகவடிவமான பீடத்தின் மீது மகிஷனின் எருமைத்தலையின் மேல் நின்ற நிலையில் காணப்படுகின்றாள். முன்னிருகரங்கள் அபய, ஊரு முத்திரைகளிலும், பின்னிருகரங்கள் சக்கரம், சங்கும் பற்றியுமுள்ளன. தலையில் கரண்டமகுடமும், கழுத்தில் கபாலமாலையும், மார்பில், கச்சையும், தோள்வளையும், கேயூரமும், கைகளில் காப்பும் பாதங்களில் பாதசரமும், இடையில் கடிபந்தமும் அணிந்து

காணப்படுகிறாள். இடுப்பிலிருந்து பாதம் வரை புடவை அணிந்து காணப்படுகிறது. இச்சிற்பம் பிற்காலத்தில் வடிக்கப்பட்டதாகும். இச்சிற்பத்தின் உயரம் பீடத்துடன் 1 மீட்டர் ஆகும்.

கருவறையின் தெற்குப்புற தேவகோட்டத்தில் ஆலமர்ச்-செல்வன் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் வலதுகாலைக் கீழே தொங்கவிட்டு, முயலகன்மீது வைத்து, இடதுகாலை, வலதுகால் தொடைமீது வைத்துக் காணப்படுகிறது முன் வலதுகரம் சின்முத்திரையிலும், முன் இடதுகரம் ஓலைச்சுவடியும் பற்றியுமுள்ளன. பின்வலதுகரம் அரவத்தையும், பின் இடது கரம் அக்கினியையும் பற்றியுள்ளன தலையில் ஜடா பாரமும் வலது காதில் மகரகுண்டலமும் இடதுகாதில் பத்ர குண்டலமும் அணிசெய்கின்றன. கழுத்தில் பதக்கம்கோர்த்த மாலையும், கைகளில் காப்பும் காணப்படுகின்றன. முயலகனின் வலதுபுறத்தில் மேற்குநோக்கி இரண்டு சனகாதி முனிவர்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளனர். ஆலமர்ச்செல்வரின் தலைக்குமேல் பின்புறம் ஆலமரம் கிளைகளுடன் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் 85 செ. மீ காலம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டாகும்.

கருவறையின் தென்மேற்கு மூலையில் உள்ள விநாயகர் சந்நிதியில் விநாயகர் சிற்பம் உள்ளது. விநாயகர் தாமரை பீடத்தின்மீது வலதுகாலை மடக்கிக் குத்திட்டு வைத்து, இடதுகாலை மடக்கி அமர்ந்தநிலையில் இடம்புரி விநாயகராகக் காணப்படுகிறார். முன்வலதுகரம் ஒடிந்த கொம்பும், முன் இடதுகரம் மோதகமும் பற்றியுள்ளன. பின்னிரு கரங்கள் அங்குசம், பாசம் பற்றியுள்ளன. தலையில் கரண்டமகுடமும், கழுத்தில் மாலையும் மார்பில் புரிநூலும்,

வயிற்றில் உதரபந்தமும் அணிசெய்கின்றன. சிற்பத்தின் உயரம் 80 செ. மீ. இது கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்காலக் கலைப்படைப்பாகும்.

கருவறையின் எதிர்ப்புறத்திலுள்ள நந்தி மண்டபத்தில் உள்ள நந்தி, முன்னிருகால்களையும், பின்னிருகால்களையும் மடக்கிவைத்து மேற்குத்திசையில் பார்த்த வண்ணம் காணப்படுகிறது. கழுத்தில் இரண்டு சலங்கைமாலைகளும், முதுகில் விரிப்பும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் நீளம் 60 செ மீ. உயரம் 40 செ. மீ. இது கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச்சோழர் கலைப்படைப்பாகும்.

வாதாபி கணபதி கோயில்

இக்கோயில் இவ்வூருக்குத் தென்கிழக்கே மணிக்கர்ணம் என்ற ஆற்றின் ஓரத்தில் உள்ளது. இவ்விநாயகர்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் விமானம் ஏகதள விமானமாகும். விமானத்தின் கழுத்துப்பகுதியில் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் விநாயகர் உருவங்கள் சுதையினால் வடிக்கப்பட்டுள்ளன.

கருவறையில் விநாயகர் பத்மபீடத்தில் அமர்ந்த நிலையில், வலது காலை மடக்கிக் குத்திட்டு வைத்து, இடதுகாலை மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். முன்னிருகரங்கள் ஒடிந்தகொம்பும், மோதகமும் பற்றியுள்ளன. பின்னிருகரங்கள் அங்குசம், பாசம் பற்றியுள்ளன. இச்சிற்பத்தின் உயரம் 95 செ.மீ. விநாயகரின் எதிர்ப் புறத்தில் மூசிகச் சிற்பமும், பலிபீடமும் காணப்படுகின்றன. சிற்பத்தின் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டாகும்.

கிராம தெய்வங்கள்

தமிழகத்தில் கிராமதெய்வங்களின் வழிபாடே மிகப் பழமையானது. பண்டைத் தமிழ் மக்கள் தமக்கே உரிய சிறப்பான வகையில் கடவுளர்களை வழிபட்டனர். கிராம தெய்வங்களின் சீற்றத்தலேயே அம்மை, சீதபேதி போன்ற தொத்துநோய்கள் ஏற்படுகின்றன என்ற கருத்தினால அந்நோய்களைத் தடுப்பதற்காகக் கிராம தெய்வங்களுக்குப் பலியிட்டு அவற்றின் சீற்றத்தைக் தணித்து வந்தனர்.

அய்யனார்

"சாத்தன் என்று வழங்கப்படும் அய்யனாரே கிராம தெய்வங்களில் முதலிடம் பெற்றவர். அய்யனாருக்கு ஆரியர், சாஸ்தா, ஹரிஹரபுத்திரர், அய்யப்பன் முதலிய பெயர்களும் வழங்கி வருகின்றன அய்யனாரைத் தவிர ஏனைய கிராம தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களே ஊர்க் காவல் தெய்வமாகிய இவருக்குக் கிராமத்தின் சுற்றுப்புறத்-திலுள்ள தோப்புகளில் கோயில்கள் எடுக்கப் பட்டன இக்கோயில்களின முன்பாகச் சுடுமண்ணால் வடிக்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுப் பெருமிதமாகக் காணப்படும். யானை, குதிரை ஆகியவற்றின் உருவங்களைக் காணலாம். இரவில் அய்யனாரும் அவருடைய பரிவாரங்-களும் இந்த யானை, குதிரைகள் மீது அமர்ந்து கிராமங்-களைத் தீய சக்திகளின் தாக்குதலினின்றும் காத்து வரு-கிறார்கள் என்று பண்டைத்தமிழர் நம்பினர்," என்று திருஎஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது 'சோழர் கலைப்பாணி' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

அய்யனார் கோயில்

இக்கோயில் நாங்கூர் மங்கைமடம் சாலையில் வலதுபுறத்தில் உள்ளது. இக்கோயில் கருவறை, இடைக்கட்டு அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகள் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. கருவறையிலுள்ள அய்யனார் தன் துணைவியர்களான பூரணை புஷ்கலையுடன் கிழக்குநோக்கிக் காணப்படுகின்றார். இச்சிற்பங்களின் காலம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டாகும். இக்கோயிலின் எதிர்ப்புறத்தில் சுதையாலான குதிரை உருவம் காணப்படுகிறது குதிரையின் உயரம் 50 அடியாகும். இக்கோயிலின் வடகிழக்கு மூலையில் திரௌபதி அம்மன் சந்நிதி உள்ளது. இந்த அய்யனார் இவ்வூரின் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறார்.

பெண் தெய்வங்கள்

கிராமப் பெண் தெய்வங்களில் பிடாரி முதலிடம் பெறுகிறாள். சப்தமாதர்களில் ஒருத்தியான இவளே சிற் சில வேறுபாடுகளுடன் காளி, அங்காளம்மன், செல்லியம் மன், மாரியம்மன், திரௌபதி என்று பல பெயர்களுடன் வழங்கப்படுகிறாள் தென்னாட்டுப் பிடாரி என்கிற பட்டாரிக்கு இணையாக வடநாட்டில் துர்க்கை, காளி என்ற பெயர்களை உடைய பெண் தெய்வங்களின் வழிபாடு சிறப்புற்று விளங்கிற்று. துர்க்கை வழிபாடு தமிழகத்தில் கொற்றவை வழிபாடு என்று குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் சப்தமாதர்களுக்குக் கோயில்கள் அமைக்கப் பட்டன என்பதற்கு ஆலம்பாக்கத்திலுள்ள செல்லியம்மன் கோயிலும், திருவக்கரையிலுள்ள வக்கிரகாளிக் கோயிலும், வேள்ச்சேரியில் உள்ள செல்லியம்மன் கோயிலும் இன்றும் தக்க சான்றுகளாக முன்னிற்கின்றன.

செல்லியம்மன் கோயில்

இக்கோயில் திருநாங்கூர் கடைத்தெரு மற்றும் ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆகியவற்றின் பின் பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் கொண்டு வடக்குத்திசைநோக்கி கட்டப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டபத்தின் சுவர்ப்பகுதிவரை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கருவறை, அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் போன்ற அமைப்புகளுடன் விளங்குகிறது. விமானப்பகுதியில் செல்லியம்மன், மற்றும் பணிப்பெண்கள் சுதை உருவங்களாக வடிக்கப்பட்டுள்ளனர்.

கருவறையில் செல்லியம்மன் செவ்வகபீடத்தில் அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். முன்வலதுகரம் சூலம் பற்றியும், முன் இடதுகரம் கபாலம் பற்றியுமுள்ளன. பின்னிருகரங்கள் உடுக்கை, பாசம் பற்றியுள்ளன. தலையில் சுடர் முடியும், காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் மாலையும் காணப்படுகின்றன. கால்களில் காப்பு உள்ளது. மார்புக்கச்சை காணப்படுகிறது, இச்சிற்பம் கி. பி 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். அர்த்தமண்டபத்தில் வலதுபுறத்தில் அய்யனார் சிற்பமும், விநாயகர் சிற்பமும் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

தொண்டிவீரன்

செல்லியம்மன் கோயிலின் எதிர்ப்புறத்தில் மேற்கு நோக்கி செல்லியம்மன் மைந்தனான தொண்டிவீரன் சந்நிதி உள்ளது. இச்சந்நிதி கருவறை மட்டும் கொண்டு கட்டப்பட்

டுள்ளது. கருவறை, அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் போன்ற அமைப்புகளுடன் விளங்குகின்றது. இச்சந்நிதி முழுதும், சுண்ணாம்பு, செங்கற்கள் கொண்டு கட்டப்பட்டுள்ளது இச்சிற்பம் நின்றநிலையில் வலது கரத்தில் கத்தியும் இடது கரத்தில் கதையும் பற்றியுள்ளது. தலையிலுள்ள கொண்டை இடதுபுறமாக காட்டப்பட்டுள்ளது கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும், இடுப்பிலிருந்து பாதம்வரை ஆடையும், கழுத்தில் மாலையும் அணிந்து காணப்படுகிறது. இடுப்பின் இடதுபுறத்தில் செருகியநிலையில் கத்தி காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உயரம் பீடத்திலிருந்து 74 செ. மீ. இது கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இவ்வூர்க் கீழவீதியிலுள்ள மதங்கீசுவரர் கோயிலிலுள்ள காளிகட்டித் திருவிழாவின் போது இங்குள்ள உற்சவ செல்லியம்மன், காளியுடன் வீதியுலாவாகக் கொண்டு வரப்படும். செல்லியம்மன் கோயிலின் மேற்குப்புறத்தில் எல்லைப்பிடாரி காணப்படுகிறது. இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் செல்லியம்மன், மாரியம்மன் செப்புத்திருமேனிகள் உள்ளன. இவை கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். மரத்தால் செய்யப்பட்ட அன்னவாகனம் உள்ளது. இது பிற்காலத்தில் செய்து வைக்கப்பட்டதாகும்.

மாரியம்மன் கோயில்

இக்கோயில் இவ்வூருக்கு கிழக்குப்புறத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் முழுவதும் சுட்ட ஓட்டினால் வேயப்பட்டுள்ளது. இக்கோயிலின் எதிர்ப்புறத்தில் பலிபீடமும் கழு மேடையும் காணப்படுகின்றன. கருவறையில் உள்ள மாரியம்மன் வலதுகாலைக் கீழே தொங்கவிட்டு, இடது

காலைமடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். முன்னிரு கரங்கள் கத்தி, கபாலம் பற்றியுள்ளன. பின்னிருகரங்கள் சூலமும், உடுக்கையும் பற்றியுள்ளன. தலையில் கரண்ட மகுடமும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணி செய்கின்றன. இச்சிற்பத்தின் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டாகும். அர்த்தமண்டபத்தின் வலதுபுறத்தில் விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. மகாமண்டபத்தின் இடது புறத்தில் காத்தவராயன், ஆரியமாலை, கருப்பழகி, தொடித்து சின்னாள், மாரியம்மன், துரோபதையம்மன் ஆகிய மரச்சிற்பங்கள் உள்ளன. இவை பிற்காலத்தைச் சார்ந்தவைகளாகும்.

உலோகத் திருமேனிகள்

கடலடைத்தபெருமாள்

திருப்பாற்கடலுக்கு அருகில் திருநாங்கூரிலிருந்து சீர்காழி செல்லும் சாலையில் இடதுபுறத்தில் செவ்வக வடிவான பீடத்தில் வலது காலைக் கீழே தொங்கவிட்டு இடது காலை மடித்து அமர்ந்த நிலையில் ஒரு திருமால் சிற்பம் காணப்படுகிறது நான்கு கரங்களில் பின்னிருகரங்கள் சக்கரம், சங்கு பற்றியுள்ளன. முன் வலதுகரம் அபய முத்திரையிலும் இடது கரம் இடது தொடைமீது வைத்தும் காணப்படுகிறது. காதுகளில் மகரகுண்டலங்களும், கழுத்தில் மூன்று மாலைகளும், இடது தோளிலிருந்து, வலதுபுறமாக கீழே சரிந்துவிழும் முப்புரிநூலும், வயிற்றில் உதரபந்தமும், கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணி-செய்கின்றன இடுப்பிலிருந்து பாதம் வரை வரிவரியான அலைகளையொத்த ஆடை காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உயரம் 1.40 மீட்டர். இச்சிற்பம் கி. பி 9-10 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த முற்காலச் சோழர் கலைப்படைப்-

பாகக்கருதலாம். இச்சிற்பம் கீழே விழுந்து காணப்படுகிறது. இச்சிற்பத்தை நிமிர்த்தி வைத்தால் மழைபொழியும் என்ற நம்பிக்கை இவ்வூர் மக்களுக்கு இருந்துவருகிறது.

இதே பெருமாள் பூம்புகார்க் கடற்கோள் காலத்தில் நாங்கையைக் காத்துக்கடலடைத்த பிரான் ஆனார் என்பது செவிவழிச் செய்தி. இதனைத் திருநாங்கூர் திருத்தியமைக்கப்பட்டதாக வரலாற்றுச் செய்தி கூறும்.[1]

நவகண்டசிற்பம்

இவ்வூரில் தெற்கு வீதியில் நாராயணப் பெருமாள் கோயிலுக்குச் செல்லும் வழியில் நவகண்டசிற்பம் ஒன்று உள்ளது. தலையை அறுத்துத் துர்க்கைக்குப் பலிகொடுக்கும் வழக்கம் தமிழகத்தில் பலகாலமாக இருந்து வந்திருக்கின்றது. திருவாமூர் கம்பவர்மன் கல்வெட்டொன்று 'படாரிக்கு நவகண்டங்குடுத்து குன்றகத் தலை அறுத்துப் பீடலிகை மேல் வைத்தானுக்கு' என்று கூறுகின்றது.

ஜயங்கொண்டார் தனது கலிங்கத்துப் பரணியில் முதலாம் குலோத்துங்கச் சோழரின் கலிங்கத்து வெற்றியை குறிக்கும்போது, வீரர்கள் தம் தலைகளை வெட்டிப்பலியிடும் நிகழ்ச்சியை,

'அடிக்கழுத்தின் நெடும் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ'[2]

என்று புகழ்ந்து பாடுகின்றார்.

இவ்வூர்ச் சிற்பம் நின்ற நிலையில் வலதுகரம் கத்தியைக் கழுத்துக்குக்குறுக்கேவைத்தும் இடதுகரம் கீழே தொங்கவிட்டு நீண்டவாளைப்பற்றி ஊன்றியும் காணப்படுகிறது. தலையின் இடதுபுறத்தில் கொண்டையும் கழுத்தில் மூன்றுமாலைகளும் உள்ளன. தோள்வளையும், கைகளில் காப்பும், அணி செய்கின்றன. இச்சிற்பத்தின் உயரம் 52 செ.மீ இது கி.பி 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இச்சிற்பத்தை இவ்வூர் மக்கள் சாவான் கல் என்று அழைத்து வழிபடுகின்றனர். சித்திரைத்திங்களில் இச்சிற்பத்திற்கு அபிஷேக, ஆராதனை அன்னதானம் வழங்கப்பட்டு தெருக்கூத்தும் நடைபெறும். எனவே இவ்வூரில் காளிக்கு வேண்டுதல் காரணமாகத் தன் தலையை அறுத்து பலிகொடுத்துள்ள வீரன் ஒருவனுக்கு சிலை எடுத்து, வழிபட்டு உள்ளனர் என்பது தெரியவருகின்றது.

மடங்கள்

ஆனந்தாஸ்ரமம்

இம்மடம் நாலாயிரத் தொருவர் விநாயகர் கோயிலின் எதிர்ப்புறத்தில் உள்ளது. இம்மடத்தில் இருந்தமுனிவர் மக்களுக்கு உபதேசங்கள் கூறி நல்வழி நடத்தி வந்தார். இவர் இறந்தநாள் நட்சத்திரத்தில் இங்கு குருபூசைநடத்தி அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது

இராமாநுஜர்மடம்

இம்மடம் நாராயணப்பெருமாள் கோயிலின் முன்பாக உள்ளது. இம்மடத்தில் திருநாங்கூர் கருடசேவை உற்சவத்தின்போது வைணவ பக்தர்களுக்கு அன்னதானம்

வழங்கப்படுகிறது. இம்மடம் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டில் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

ஆர்யவைஸ்யமடம்

இதன்முழுப்பெயர் நூற்ட்ட இப்பண்ரம் நகர ஆர்ய வைஸ்யகுல ஸ்ரீராமாநுஜ கூடதியாராதனை அபிவிருத்தினி சபா என்பதாகும், இம்மடம் திருநாங்கூர் கடைத்தெருவில் உள்ளது. இம்மடத்தில் திருநாங்கூர் கருடசேவை உற்சவத்தின்போது இரண்டு நாட்களுக்கு வைணவ பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் மரபு திரு. ராசு செட்டியார் அவர்களால் தொடங்கப்பட்டு கடந்த 99 ஆண்டுகளாக இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது என். ஆர். நாகராஜ் செட்டியார் அவர்கள் குமாரர்கள் நா. தயாகரன், நா. வெங்கட்ராமன் ஆகியோர் இப்பணியை நடத்தி வருகின்றனர். இதற்கென்று தனியாக ஒரு ஏக்கர் நிலம் உள்ளது திருநாங்கூர் கெருடசேர்வையின் போது பன்னிரெண்டு திருத்தலங்களில் திருநாங்கூர் குடமாடுகூத்தர் புறப்பாடு இந்த வைணவ சபா மூலமாக நிகழ்த்தப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1) நங்கை நடுநாயகம்' -நெ. பி. ஸ்ரீரங்கன். தினமணி சுடர் 26—6—1977

2) 'ஊத்துக்காடு' நடன. காசிநாதன், கல்வெட்டிதழ்-16 பக்கம்-22,

திருவிழாக்கள்

திருநாங்கூரில் கருடசேர்வை விழா, சூரம்சம்காரத்திரு-விழா தீ மிதிவிழா போன்றவை முக்கிய திருவிழாக்களாகும். தற்போது சூரசம்காரத் திருவிழா நடைபெறுவதில்லை. இவ்விழாக்களைப்பற்றி இங்கு காண்போம்.

மங்களாசாசனத் திருவிழா

திருமங்கையாழ்வாரே பாசுரங்கள் பாடுவது போலத்-திருநாங்கூரில் நடைபெறும். இவ்விழாவில் தமிழகமின்றி மற்ற மாநிலங்களிலிருந்தும் பலர்வந்து கலந்து கொள்கின்-றன . இத்திருவிழா தைத்திங்கள் அமாவசை மறுதினம் நாராயணப் பெருமாள் கோயிலில் நடைபெறுகின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இத்திருவிழாவில் பங்குகொள்கின்-றனர். ஒருநாள் நிகழ்ச்சியில் காலை முதலே வைணவபக்தர்-கள் பழனைப் பாடல்கள் பாடிக்கொண்டு இவ்வூர் வீதிகளில் வருவர். திருநாங்கூரின் கிழக்கேயுள்ள சித்தன்காத் திருப்பிலிருந்து இவ்வூர் மக்கள் சுமார் 100 பேர் கொண்ட சுழுவாக இராமர், இலக்குவன், சீதை, அனுமார் வேடம் தரித்து ஆடியும், பாடியும், கோலாட்டங்கள் நடத்தியும் நாராயணப்பெருமாள் கோயிலை வந்தடைவர். இதுபோல் திருநாங்கூரிலிருந்து தென்மேற்கே 4 கி.மீ. தொலைவிலுள்ள பள்ளகொல்லை என்ற ஊரிலிருந்து மற்றொரு குழு ஒன்று சுமார் 100 பேருடன் நாராயணப் பெருமாள் கோயிலில் இராமர், இலக்குவன், சீதை, அனுமார், மற்றும் யாளிமுகம் கொண்ட முகமூடி கொண்டு அணிந்து ஆடி வருவர். அன்று இரவு திருநாங்கூர் 11 திவ்யதேசத்து திருமால், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனிகள் வீதியுலா புறப்-படுவதற்கு முன்புவரை எல்லாக்குழுக்களும் சேர்ந்து ஆடுவர். இக்காட்சி பார்ப்பதற்கு மிகவும் பரவசமாக இருக்கும்.

முதல்நாள்

திருமங்கையாழ்வார் தை அமாவாசையன்று மாலை 3 மணியளவில் திருநகரியிலிருந்து புறப்பட்டு ஆழ்வார் பிறந்த ஊரான திருக்குறையலூரில் மங்களாசாசனம் செய்து தொடர்ந்து மங்கைமடம், திருக்காவளம்பாடி, திருமணிக்கூடம், திருபார்த்தன்பள்ளி ஆகிய பெருமாள் ஆலயங்களில் எழுந்தருளி மங்களாசாசனம் செய்து பின் இளையமதுகூடம் வழியாக, மேற்கே மணிகரணிகை ஆற்றில் இறங்கி திருநாங்கூருக்குத் தெற்கேயுள்ள மஞ்சள்குழி மண்டபத்தில் பகல் 12 மணிஅளவில் எழுந்தருளுகின்றார். அங்கிருந்தபடியே திருவரங்கம் அழகியமணவாளனையும், திருநறையூர் நம்பியையும் மங்களாசாசனம் செய்வார். திருமங்கையாழ்வார் திருவரங்கத்திலிருந்தும் திருநறையூரிலிருந்தும் வந்திருக்கும் ஆடைகளையும், மாலைகளையும் ஏற்றுக்கொள்வார்.

திருமங்கையாழ்வார் அன்று மாலை 6 மணிக்கு திருநாங்கூரிலுள்ள மணிமாடக்கோயில், (நாராயணப்பெருமான் கோயில்) புருஷோத்தமன்கோயில், வைகுண்டப்பெருமாள்கோயில், செம்பொன்னரங்கர் கோயில், பள்ளிகொண்டபெருமாள்கோயில், குடமாடுங்கூத்தர்கோயில் ஆகிய ஆலயங்களில் மங்களாசாசனம் செய்தருளி அன்று இரவு திருநாங்கூர் மணிமாடக்கோயிலில் எழுந்தருளுகின்றார்.

இரண்டாம்நாள்

தை அமாவாசை அடுத்து இரண்டாம் நாளன்று காலையில் திருநாங்கூரில் 11 ஆலய எம்பெருமான்களும், இவ்வூர் மணிமாடக்கோயிலின் முன் கூடி நிற்க,

அவ்விடத்தில் ஒவ்வொரு திருமாலையும், திருமங்கை-யாழ்வார் மங்களாசாசனம் செய்வார். ஆழ்வாரை மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்வார். பிறகு 11 திருமால், ஆழ்வார், மணவாளமாமுனிகள் ஆகியோர் கோயிலின் உள்ளே சென்று மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள இருக்கையில் அமர்ந்து திருமஞ்சனம் கண்டருளுகின்றனர். அன்று இரவு 11 திருமால்களும் கருடவாகனத்திலும் திருமங்கையாழ்வார் அன்னவாகனத்திலும், மணவாள மாமுனிகளுடன் வீதியுலா புறப்பாடு நடைபெறும். இந்நிகழ்ச்சி முக்கியமான நிகழ்ச்சியாகும். இரவு வீதியுலாவாக வரும் 11 திருமால், திருமங்கையாழ்வார், மணவாளமாமுனிகள் இவ்வூர் மணிமாடக்கோயில் வந்தடைய அதிகாலை 5 மணியாகும். உற்சவர்கள் கோயிலில் வந்தடைந்தவுடன் இவ்வூரில் கூடியிருக்கும் பக்தர்கள் கலைந்து விடுவார்கள்.

மூன்றாம்நாள்

தை அமாவாசை அடுத்து மூன்றாம்நாளன்று மாலையில் திருமங்கையாழ்வார் அண்ணன் கோயில், (திருவெள்ளக்-குளம்) கீழச்சாலை. (திருத்தேவனார் தொகை) திருவாலி போன்ற திருமால் ஆலயங்களில் திருமங்கையாழ்வார் எழுந்தருளி மங்களாசாசனம் செய்தருள்வார். அன்று திருநகரியில் வயலாலிமணவாளன் கருடசேவையும், திரு-மங்கையாழ்வார் மங்களாசாசன உற்சவமும் நடைபெறு-கின்றன.

சிதம்பரத்தைச் சேர்ந்த திருமலை விஞ்சிமூர் சீனிவாசச்-சாரியர் அவர்கள் ஆழ்வார் திருநகரியில் (திருநெல்வேலி மாவட்டம்) பராங்குசருக்கு ஒன்பது கருடசேர்வை நடப்பது

போலவே இங்கு பரசாலருக்குப் பதினோரு கருடசேவை நடத்திப்பார்க்க ஆசைகொண்டு, ஆதிகேசவலுசெட்டியார், நாராயணப்பிள்ளை முதலிய பெரியோர்களின் உதவியுடன் இத்திருவிழாவை நடத்த ஏற்பாடு செய்தார். இப்பதினோரு கருடசேர்வை 1894 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது.

இவ்விழாவிற்கென்று 'திருநாங்கூர் பதினோரு கருட சேர்வை உற்சவகமிட்டி' என்ற குழு அமைக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் இத்திருவிழா மிகச்சிறப்பாக நடை-பெற்று வருகின்றது. இக்குழுவிற்கு டி. கே. நாராயணன் தலைவராகவும், இராமச்சந்திரநாயுடு துணைத் தலைவ-ராகவும், பம்பாய் நகரைச் சேர்ந்த மதன்லால்ராம் நாராயணன் சோமானி துணைத் தலைவராகவும், ரெங்காச் சாரி பொருளாளராகவும், டி. வெங்கட்ரெங்கன்ரெட்டி கருவூலராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

காளிகட்டித் திருவிழா

திருநாங்கூர்க்கீழவீதியில் அமைந்திருக்கும் மதங்கீசுவரர் கோயிலில் தனிச்சன்னிதியாக இருக்கும் காளியம்மனுக்கு 5 வருடத்திற்கு ஒரு முறை காளிகட்டித்திருவிழா நடை-பெறுகின்றது. செல்லியம்மனுக்கு 8 நாள் உற்சவம் முடிந்து 9வது நாள் உற்சவத்தன்று இரவு 8 மணிக்கு சாவான் என்ற சுவாமிக்கு (நவகண்ட சிற்பம்) இருளன்கப்பரை எடுத்து இரவு 8 மணிக்கு முதலியார் தெரு, நடுத்தெருவில் டி. ரெங்கசாமி முதலியார் இடத்திலிருந்து புறப்பட்டு வீதி வழியாக வந்து சாவான் கோயிலில் சென்று செலுத்தி விடுவார்கள்.

10-ஆம் நாள் காலையில் காளி புறப்பாடு செய்து, சாவான்கோயில் வழியாகச் சென்று காளியை சாவானிடம் சேர்த்து படுக்களம் போட்டு எழுப்பி, வெள்ளாளர் தெரு வழியாக வந்து செல்லியம்மன் கோயில் சென்று கடைத்தெரு வழியாக முதலியார் தெரு நான்கு வீதிகளிலும் சுற்றிவந்து மேலவீதி வழியாகக் கோயிலில் சேர்த்து விடுவர்.

காளியைத்தூக்கி வருபவர் மூன்றுநாள் விரதம் இருப்பர். காளி வீதியுலாவின் போது சிலால் காவடி, பூத்தேர், கரகாட்டம் ஆகியவை நடைபெறும். மேலும் கிராம தெய்வங்களான செல்லியம்மன், நொண்டிவீரன், மாரியம்மன், சாவான்சாமி அருள் வந்தவர்களும் ஆடிக்கொண்டே செல்வர்.

சூரசம்காரம்

ஐப்பசித்திங்கள் தீபாவளி முடிந்த 6-ஆம் நாள் 6 நாட்கள் சுப்பிரமணிய சுவாமிக்கு மண்டகப்படி நடைபெற்று, 6 ஆம் நாள் இரவு 8 மணிக்கு சுப்பிரமணிய சுவாமிக்கு அலங்காரம் செய்யப்பட்டு வீதிவழியாகக்-கொண்டு வந்து நாங்கூர் மந்தகரை என்ற இடத்தில் சூரனை ஜோடித்து வைத்து சுப்பிரமணியசுவாமிக்கு விருத்தம்பாடி. சூரன் விருத்தமும் சொல்லி, சுப்பிரமணிய சேவலுக்கு சேவித்து மூன்று தரம் ஓடிவந்து தலையை எடுப்பர். சூரனின் செம்மறி ஆட்டுமுகம், யானைமுகம் சூரன்முகம் ஆகிய சூரனின் மூன்று வகையான முகங்களையும் சம்காரம் செய்து முடித்து சுப்பிரமணியசுவாமி கீழவீதி, மேலவீதி, தெற்குவீதி, வெள்ளார்தெரு, கடைத்தெரு வழியாக உலாவாக வந்து கீழவீதி வழியாக கோயிலைச்

சென்றடையும். இவ்வூர் மதங்கீசுவரர், நம்புவார்க்கன்பர் கோயில்களின் சுப்பிரமணியர், சூரன் (மாத்தால் ஆனது) ஆகியோருக்கும் சேர்த்து இவ்விழா நடைபெறும். தற்பொழுது இவ்விழா நடைபெறவில்லை.

தீமிதித் திருவிழா

இவ்வூருக்கு கிழக்கே மாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் தீமிதித்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. சித்திரைத் திங்கள் முதல் வெள்ளிக்கிழமையன்று மாரியம்மனுக்கு இளங்காப்புக்கட்டி ஐந்து தினங்கள் வைத்திருந்து 6-ஆம் நாளிலிருந்து 10 தினம் உற்சவம் நடைபெறும். 10 நாட்களிலும் மாரியம்மன் நான்கு வீதிகளிலும் வீதியுலா புறப்பாடு நடைபெறும். 10 ஆம் நாளன்று தீமிதித்தல் நடைபெறும். அன்றைய தினம் மாலை ஐந்து மணிக்கு மணிக்கர்ணம் ஆற்றிலிருந்து காவடி, கரகம், சிலாவ்காவடி போன்றவை மாரியம்மன் கோவிலுக்கு வந்தவுடன் தீ மிதித்தல் நிகழ்ச்சி நடைபெறும். தீ மிதி நிகழ்ச்சி முடிந்தவுடன் மாரியம்மன் வீதியுலாவாக நான்கு வீதிகளிலும் கொண்டு வரப்படும். தீ மிதி நிகழ்ச்சிக்கு மறுதினம் மஞ்சள் விளையாட்டுடன் வீதியுலாவாகக் கொண்டு வரப்பட்டுக் கோயிலுக்கு சேர்ப்பிக்கப்படும். இவ்விழாவில் திருநாங்கூர் மக்கள் மட்டுமல்லாது சுற்றுப்புறக் கிராம மக்களும் கலந்து கொள்வர்.

கல்வெட்டுச்செய்திகள்

இவ்வூர்க் கல்வெட்டுகள் மூன்று 1951-52 ஆம் ஆண்டில் இந்திய அரசு கல்வெட்டியல் துறையினரால் படியெடுக்கப்பட்டு ஆங்கிலக் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகளின் வாசகங்களும், ஆங்கிலக்குறிப்புகளும் இங்கு தரப்படுகின்றன. மேலும் கூடுதலாக வீரபாண்டியனின் கல்வெட்டொன்று இந்நூலாசிரியரால் புதிதாகப் படிக்கப்பட்டது. முதல் மூன்றுகல்வெட்டுகளின் செய்திகள் ஏற்கனவே இந்நூலில் 17-19 பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வீரபாண்டியன் கல்வெட்டு

பாண்டியப் பேரரசரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் பெருமாள் வீரபாண்டியத் தேவரின் நான்காவது ஆட்சி ஆண்டில் கோயிலில் திருவிழா நாட்களில் இறைவன் எழுந்தருளுவதற்கு மண்டபம் எடுப்பித்த செய்தி இக்கல்வெட்டு மூலம் நமக்குப் புலனாகிறது. மேலும் ஆண்டு உற்சவத்தின் போது எட்டாம் திருநாளை மிகவும் சிறப்புடன் கொண்டாடுவதற்காக இம்மன்னன் உபயமாக நிலம் அளித்த செய்தியும் சொல்லப்படுகிறது. நிலத்திலிருந்து கிடைக்கும் நெல் மூலமும், தானமளித்த பணத்தின் மூலமும் கோயில் வலங்கை சபையார் செய்ய வேண்டிய நடைமுறைகள் பற்றியும் இக்கல்வெட்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் முடிவில் இந்த தர்மத்தை காக்கின்றவர்கள் சந்திர, சூரியன் உள்ளவரை நீண்டநாள் வாழ வேண்டுமென்றும், இந்த தர்மத்துக்குக் குறை செய்தவர்கள் கங்கைக்கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தில் போகக்கடவார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் வீரபாண்டியன் என்று குறிப்பிடப்படும் மன்னன் எந்த வீரபாண்டியன் என்று குறிக்கப்படவில்லை. பிற்காலப் பாண்டியர்களில் முதலாம் ஜடாவர்மன் வீர-பாண்டியன் (1253-1283) இரண்டாம் ஜடாவர்மன் வீர-பாண்டியன் (1254-1265) மூன்றாம் ஜடாவர்மன் வீரபாண்-டியன் (1297-1342) நான்காம் ஜடாவர்மன் வீரபாண்டியன் (1337-1388) ஆகியோர் இருந்துள்ளனர். எழுத்தமை-தியைக் கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 14 ஆம் நூற்றாண்-டாகச் சொல்லலாம். எனவே மூன்றாவது அல்லது நான்காவது வீரபாண்டியனுடைய காலத்தியக்கல்வெட்டாக இதனைக் கருதலாம்.

கோபுரக்கல்வெட்டு

செம்பொன்னரங்கர் கோயில் நுழைவு வாயிலில் ஒருகல் வெட்டு பதிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கோபுரம் கட்டிய செய்தியைச் சொல்கிறது. நாங்கூர்நாட்டு நாங்-கூரிலுள்ள செம்பொன்னரங்கர் கோயில் நுழைவு வாயில்க் கோபுரத்தை திருநகரி துரோணாசாரியர் மனைவியாகிய கண்ணபுரத்தம்மாள் கட்டிவைத்தார் என்பது இக்கல் வெட்டின் செய்தியாகும். இக்கல்வெட்டை ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதலாம்.

கல்வெட்டு வாசகங்கள்

நாங்கூர் ஸ்ரீ நாராயணப் பெருமாள் கோயில் கருவறை நுழைவாயிலில் உள்ள கல்வெட்டு.

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோப்பரகேசரி (பர்)
3. மற்கி யாண்டு உ
4. ஆவது திரும
5. ணி மாடக்கோயி
6. ல் பெருமாளுக்கு
7. இவ்வூர் கவிசி
8. யன் சோமன் [த]
9. ற்த்தனேன் ச
10. ந்திராதித்தவல் ஒ
11. ரு நொந்தா விள
12. க்கெரிப்பதற்கு
13. குடுத்த காசு நா
14 ற்பது [இக்] காசு
15. குடுத்து இத்
16. தேவருடைய
17. பூ மி குட்டக்கு
18. ளக்குரைச் செ
19. ய்யில் வடக்
20. கடையப் ப
21. த்துச் செய்யு
22. ம் விலையாகக்
23. கொண்டு இ பூ
24. மி இவ் விளக்
25. குக்குப் போக
26. ம் மாக குடுத்
27. தேன் கவிசிய
28. ன் சோமன் த[ற்]
29 தன்னேன்
30. இ தந்மம் .... —
21. — . இறக்குவாந்
22. ... ... — —

நாங்கூர் ஸ்ரீ நாராயணப் பெருமாள் கோயில் கருவறை நுழை வாயிலில் உள்ளகல்வெட்டு.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்
2. பரகேசரி பந்மகி யா
3. ண்டு உ ஆவது கா
4. த்திகை திங்கள் தி
5. ருமணிமாடக்கோ
6. யில் பெருமாளு
7. குக்இவ்வூர் கவிசி
8. யன் சோமன்றத்
9. தனேன் சந்திராதி
10. த்தவல் அர்த்தயா

11. மத் திருவமுதுக்
12. குக் குடுத்த கா
13 சு நாற்பது இக்
14. காசு குடுத்து
15. இத் தேவருடை
16. டய பூமி குட்ட
17. க் குளக்கரை
18. செய்யில் செ
19. தற்கடைய்
20. ய பத்துச்செ
21. ய்யும் விலை
22. யாக கொண்டு
23. இப் பூமி இவ்
24. வத்த யாமத்தி
25. ருவமுதுக்கும்
26. போகமாக கு
27. டுத்தேன் க
28. விசியன் சோ
29. மன்றத்தே
30. னன் இத்தந்மம் ர
31. க்ஷித்தா'ர் ஸ்ரீ வய்
32. குந்த பிராப்தி'ய
33. ய் துவாராகஇத்த
34. ந்மத்துக்கு அநிக்
35. குதஞ் செய்தார்
36. [அவிசி] நரகத்
37. தேய் சந்திராதித்
38. தவற் கிடப்பார்

நாங்கூர் ஸ்ரீ நாராயணப்பெருமாள் கோயில் தெற்குக் கோபுரப் பலகைக்கல்லில் உள்ள கல்வெட்டு

1, ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மர் திரிபுவநச்சக்கர வர்த்திகள் பெருமாள் விரபா
2, ண்டிய தேவற்கு யாண்டு நாலாவது திருநாங்கூர் நாராயணப் (பெருமாள்) கோயில் நாயனுர்
3, சன்னதியில் கீழ் மகாமண்டபம் உடைய ....
4, பெரிய நாட்டு மண்டடமாக......................மண்டபமும்
5, யிந்த நாயனுர்..............................,.........,.............
6, ஸ்வரம் திருப்பணி ....பெரியதிருநாளில் எட்டாந்திருநா

7, ளுக்குள்ள உபையமும் எங்கள் உபையமாகத் தந்த.....

8, வரையர் நடக்கும்படி.........................வேலி கல நெல்லு

9, ...கால்பணமு வலங்கைக்கடுத்த சாதிக்குண்டாந நந்மை

10, த்தீந்மைகளுக்கு பாவாடைச் சமையப்படியும் குடுத்த தீட்டு சந்திராதித்த வலும்

11, இந்த தந்மத்துக்கு அகிதஞ் சொன்னவர்கள் கெங்கைக் கரையில் குரால்

12, பசுவை கொன்ற பாவங் கொள்ளக் கடவார்களாகவும்

செம்பொன்னரங்கர்கோயில் கோபுரக்கல்வெட்டு

1, [ஈ]ஸ்வர ஹூ தை மாதம்

2, ...உ திருநாங்கூர் ஸ்ரீசெ

3, [ம்] பொன்னறங்கநாத

4, ஸ்வாமி கோபுர[த்]தை ந

5, கரியம் ஷெயூர் துறோ

6, நாசாரியா பத்தினி கண்

7, ணபுரத்தம்மாளு

8, பயம்

A.R.E. 1951—52B No153 Jamb of the Narayana, temple—— (Telugu) Mentions Kadivetiyarappa. In late Chareters

A.R.E. 1951—52B No. 154 Jamp of the doorway, ardhamandapa of Narayana perumal temple. Chola Para-Kesarivarman. 2nd year Tamil Registers the gift of land after purchasing it for 40 Kasu by Soman Tattan for the expense of burning a perpetual lamp in the temple of Tirumanimadakkoil.

A.R.E. 1951—52B No 155 Jamb of the doorway, armadhandapa of Narayanaperumal temple. Chola parakesari varman 2nd year Tamil. Registers another endowment, made by the same person, of a piece of land, purchased for 40 Kasu to God Tirumanimadakkoil for the expenses of offering and worship at the ardhajama srveice.

சிறப்புச்செய்திகள்

திருமங்கையாழ்வார்

திருமங்கையாழ்வார் நாகை காயிதேமில்லத் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் திருவாலி அருகிலுள்ள திருக்குறை-யலூர் என்ற ஊரில் அவதரித்தவர். இவருடைய தந்தையார் கள்ளர் மரபைச் சார்ந்த ஆலிநாடன் என்பவராவார் அன்னையார் பெயர் வல்லித்திரு என்பதாகும். இவருக்குப் பல பெயர்கள் உண்டு.

பெயர்கள்

1. ஆலிநாடன்
2. அரட்டமுக்கி
3. மங்கைவேந்தன்
4. கொற்றவேல்
5. பரகாலன்
6. கலியன்
7. கலிகன்றி
8. ஆடல்மாவலவன்
9. கடமாகளியானையான்
10. அருள்மாரி
11. ஆலிமன்
12. நீலாபர்
15. நாலுகவிப்பெருமாள்
14. திருமங்கைமன்னன்
15. சோலைக்கிளி
16. அடையார்சியம் கொக்குமலர்க் குழலியர்வேள்
17. திருவாலிநாடன் வாட்கலியன் குறையலாளி

ஆழ்வார் தந்தையார் சோழ அரசனது படைத்தலைவராக விளங்கினார். தந்தை வயது முதிர்ந்ததும், இவரே சோழ அரசனால் திருவாலி நாட்டிற்குப் படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆதலால் ஆழ்வார் ஆலிநாடன் என்றும், திருமங்கைமன்னன் என்றும் அழைக்கப்பட்டார். இவர் திருமாலிடத்தில் மிகவும்பக்திகொண்டு "வாடினேன் வாடி"

எனத் தொடங்கி அமுதமான பாசுரங்களைச் செய்தார். சீர்காழி வட்டத்திலுள்ள 13 திவ்யதேசங்களையும் மங்களாசாசனம் பாடியுள்ளார், ஆழ்வார்களில் திருமங்கை யாழ்வார் மிக அதிகமான திருப்பதிகளைப் பாடியவர். இவரால் பாடப்பெற்ற பதிகள் 86. இவர் மங்களாசாசனம் செய்ததோடு மட்டுமில்லாமல் திருவரங்கம் முதலான திருக்கோயில்களில் திருப்பணியும் செய்துள்ளார்.

திருமணம்

திருமங்கையாழ்வாரின் துணைவியார் பெயர் குமுதவல்லி என்பதாகும் இவர் திருநாங்கூர் 11 திவ்யதேசத்தைச் சேர்ந்த அண்ணன் பெருமாள்கோயில் என்ற ஊரில் அவதரித்தார். திருமங்கையாழ்வார் குமுதவல்லியை மணக்க விருப்பம் கொள்ள, குமுதவல்லி 1008 வைணவ அடியார்களுக்கு அன்றாடம் அன்னதானம் வழங்கவேண்டுமென்று திருமங்கையாழ்வாருக்கு நிபந்தனை விதித்தார். அதற்கு உடன்பட்டுக் குமுதவல்லியை மணந்த ஆழ்வார் அவ்வாறே அன்றாடம் அன்னதானம் செய்து வந்தார். அன்னதானம் செய்த்தின்மூலம் பொருட்கள் செலவழிந்ததால் சோழஅரசனுக்கு திறைசெலுத்த-முடியாததால் சோழன் நறையூரில் சிறையிட்டான். காஞ்சியில் பேரருளாளன் இவா கனவில் தோன்றி காஞ்சியில் பொன்இருப்பதைக் கூறி அதனை எடுத்துவந்து செலவிடச் சொன்னார். அவ்வாறே வேகவதி ஆற்றங்கரையிலிருந்த பொருளை எடுத்து வந்து திறைசெலுத்தி எஞ்சியதைக் கொண்டு அடியார் பணிசெய்தார். மீண்டும் பொருளற்றுப்-போகவே அன்னம் வழங்கும் பணியை முடிக்கும்

நோக்கத்துடன் வழிப்பறிசெய்து பாகவததர்மம் செய்தார் இவரை ஆட்கொள்ள நினைத்த பெருமாள், பிராட்டியுடன் திருமணக்கோலத்தோடு திருமணங்கொல்லை என்ற இடத்தில் தோன்றினார். வழிமறித்து கொள்ளையிட்டார் கலியன். மணமகன் வடிவத்தில் இருந்த திருமாலின் காலிலிருந்த மிஞ்சியையும் பல்லாற்கடித்து எடுத்து, எல்லா அணிகலன்களையும் மூட்டையாகக் கட்டித் தூக்க முயல முடியாமல் போகவே, மணமகனாய் வந்த வயலாலி மணவாளன், திருமங்கையாழ்வாரை அருகே அழைத்து அவரின் திருச்செவியில் எட்டெழுத்து மந்திரத்தை (ஓம் நமோ நாராயணா) உபதேசித்தருளினார் என்று இவரது வரலாறு கூறுவர்.

திருவரங்கத்தில் நிகழ்ந்த திருப்பணிகளைத் தொகுத்துச் சொல்லும் 'கோயிலொழுகு' என்ற நூல் இவர் ஸ்ரீரங்கம் கோயில் விமானத்தைப் பொன் வேய்ந்த செய்தியைச் சுவையாகச் சொல்கிறது. இவர் பொன் வேய்வதற்கு நாகப் பட்டினம் பௌத்த விகாரத்திலிருந்து தங்கத்தால் ஆன புத்தர் சிலையைத் திருட நினைத்தார். ஆனால் விகாரத்-தினுள் செல்ல வழி தெரியவில்லை. ஒரு வயதான பாட்டியை விசாரித்தபோது அவள் விகாரத்தைக் கட்டிய சிற்பி கடார நாட்டில் உள்ளான் என்று கூற, திருமங்கையாழ்வார் கடாரம் சென்று விகாரத்திற்குள் செல்ல வழி அறிந்து வந்தார் என்றும், பின்னர் புத்தர் சிலையைக் களவாடி உருக்கி அத்தங்கத்தைக் கொண்டு பொன் வேய்ந்தார் என்றும் அந்நூல் கூறுகிறது. நாகப்பட்டனத்தில் பௌத்த விகாரம் கடாரத்தரசனால் கட்டப்பட்டது என்பது வரலாற்றுச் செய்தி.

ஆழ்வார் காலம்

முனைவர். இரா. நாகசாமி அவர்கள் வைகைக் கரையில் கிடைத்த பாண்டிய மன்னனின் கல்வெட்டை ஆய்வு செய்து ஆழ்வார்கள், நாயன்மார்களது காலத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். அதன்படி திருமங்கையாழ்வார் பாண்டியமன்னன் இராஜசிம்மனுக்கும் (கி பி. 768) பல்லவ மன்னன் நந்திவர்மனுக்கும் (கி.பி.846-869) சமகாலத்தவ-ராவர். எனவே இவர் எட்டு ஒன்பதாம் நூற்றாண்டினர் என்று சொல்லலாம்.

நாங்கூர் சேந்தனார்

சேந்தனார் நாங்கூரில் தோன்றியவர். பட்டினத்-தடிகளின் தலைமைக்கணக்கராக இருந்தார் 'செய்ததனைக் கயல்பாய் நாங்கூர்ச்சேந்தனை' என்று பட்டினத்தார் குறிப்பிடுகின்றார். தில்லையில் சென்று சேந்தனார் வாழ்ந்து வருங்காலத்தில் சிவனடியார்க்கு அமுதுபடைத்து வந்தார். சிவபெருமானே ஒருநாள் அடியாராக வந்து சேந்தனார் தந்த களியை உண்டு தன்மேனியில் காட்டிச் சேந்தனாரின் சிவபக்தியை உலகுக்கு உணர்த்தினார். "பழைய அவிலை அன்பாகிய பண்டைப்பறைச் சேந்தன் கொடுக்க அதுவும் திரு அமிர்தாகியதே" என்று நம்பியாண்டார் நம்பியும் "அமுதம் சேந்தனிட உண்டனை" என்று சிவஞான சுவாமிகளும் இந்நிகழ்ச்சியைக் குறித்துள்ளனர்.

ஒரு சமயம் சேந்தனார் தில்லையில் இருந்தபோது திருவாதிரைவிழா வந்தது. தில்லைக்கூத்தன் திருவுலா வந்த தேர் தடைபட்டது. அப்போது சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி, தானே அந்தத்தேர் நிலைக்கு வருமாறு செய்தார்.

சேந்தனார் திருப்பல்லாண்டில் சிவபெருமான் அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருள்; பிறவித்தளை அடியவர்க்கு வழிகாட்டிய பித்தன் விரிந்தும்; இடையீடின்றி நிறைந்தும் விளங்கும் மேன்மையுடையவன்; அடியார்களின் உயிரை ஆட்சிசெய்பவன்; ஆவிக்கு அமுதம் போன்றவன்; உபமன்னியமுனிவர் பிள்ளைப்பருவத்தில் பால் வேண்டிய போது அவருக்காகவே பாற்கடலையே அழைத்து அருள்-புரிந்தவன்; தந்தையின் கால்களையே துணித்த சண்டேசர்க்கு அருள் புரிந்தவன் என்று இறைவனைப்பாடுகிறார். கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகச் சேந்தனாரைச் சொல்வர். இவருக்கு முன்னதாக ஏழாம் நூற்றாண்டில் பெரியாழ்வார் திருமாலுக்குத்திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.

தாய்லாந்து வாணிபத்தொடர்பு

சயாமில் (தாய்லாந்து) தக்குவா-பா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு நாங்கூர்ப் பகுதி-யோடு தொடர்புடையது. இக்கல்வெட்டு மணிக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு வணிகக்குழுவையும், திருமால்கோயிலையும், அவனிநாரணம் என்ற குளத்தையும் குறிக்கிறது. திரு. கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் இக்கல்வெட்டு மூன்றாம் நந்திவர்மன் காலத்தது என்றும், அவன் அவனிநாரணன் என்ற பட்டப்பெயரைப் பூண்டிருந்தான் என்றும், கூறுகின்றார் இக் கல்வெட்டு நாங்கூர் என்ற ஊரையும் குறிக்கிறது. நாங்கூர் காவிரிப்பூம்பட்டினத்தின் அருகாமையில் அமைந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினம்-மணிக்கிராமத்திலிருந்து கீழைநாடுகளுக்குச் சென்ற வணிகக் குழுவினர் நாங்கூரிலிருந்து வீரர்களை உடனழைத்துச் சென்றனர் என்ற செய்தியும் தெரியவருகிறது.

டாக்டர் கே. வி. இராமன், டாக்டர் எ. சுப்பராயலு, டாக்டர் ப. சண்முகம் ஆகியோர் அடங்கிய இந்திய தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர் குழு ஒன்று 1992 டிசம்பர், 1993 சனவரி, ஆகிய மாதங்களில் மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் களஆய்வு நடத்தியது தமிழகத்துடன் கொண்ட பண்டைய தொடர்புகளைக் கூறும் புதிய சான்றுகள் சில இக்கள ஆய்வில் கிடைத்தன தாய்லாந்தில் தாகுவாபா என்ற இடத்தில் கிடைத்த தனிக்கல்லில் 6 வரிகளைக்கொண்ட இக்கல்வெட்டை இக்குழுவினர் படித்துள்ளனர். அக்கல்வெட்டுவரிகளாவன:

1) வர்மந் [கு]
2) [ம] மாந்தரந நங் [கூ] ... ...
3) ... ...தொட்ட குளம் பெ... ... ...
4) ... ... [ர] ணம் மணிக்கிராம ... ...
5) ... ...சேனாமுகத்தார்க்கு
6) ... ... [ய] தார்க்கும் அடைக்கலம்

இக்கல்வெட்டு கி. பி. 8-9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் குளம் குடிநீர் குளம் என்று தெரிகிறது. இதுஒரு சிறிய தீவுக்குள் உள்ளது. இககல்வெட்டுள்ள பலகைக்கல் இப்போது நக் கோன் ஸி தம்மராத் என்ற நகர அருங்காட்சியகத்தில் உள்ளது. (ஆவணம் இதழ்-3 தமிழ்நாடும் தாய்லாந்தும் தொன்மைத் தொடர்புகள் டாக்டர். ப. சண்முகம் பக்கம்-83)

Journel of Oriental Research (Vol. Vi p. 304') என்ற நூலில் இக்கல்வெட்டு,

"நாங்கூருடையான் தொட்டகுளம். பேர்
அவனிநாரணம் மணிக்கிராமத்தார்க்கும்
சேனு முகத்தார்க்கும்... ...பதார்க்கும் அடைக்கலம்"

என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் வெளியிடப்பட்ட வாசகத்திற்கும் அண்மையில் படிக்கப்பட்ட வாசகத்திற்கும் வேறுபாடுகள் சில உள்ளன.

ஆறுகளும், வாய்க்கால்களும்

திருநாங்கூர்க் கிராமத்தில் பாய்ந்து வளமடையச் செய்யும் ஆறுகளும் வாய்க்கால்களும் இவ்வூரில் உள்ள குளங்களும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

மணிகர்ணிகை ஆறு

இவ்வாற்றுக்கு அய்யாவய்யனார், வெட்டாறு என்ற பெயர்களும் உண்டு. இவ்வாறு காவிரி ஆற்றில் பள்ளக்கொல்லை என்ற ஊரில் பிரிந்து கீழையூர், அல்லிவிளாகம் நைனிபுரம் வழியாக திருநாங்கூரை அடைந்து கீழசட்டநாதபுரம், மங்கமடம் திருவெண்காடு, எம்பாவை வழியாகப் பெருந்தோட்டம் ஏரியில் கலந்து விடுகின்றது

நாங்கூர் வாய்க்கால்

இவ்வாய்க்கால் செம்பதினிருப்பு காமனி சாலையில் பிரிந்து திருநாங்கூர் வந்தடைந்து மேல்நாங்கூர் காத்திருப்பு வழியாக காவளம்பாடி கொடிவாய்க்காலில் கலந்து விடுகின்றது. அய்யாவையனார் பிரிவு நாங்கூரான் வாய்க்கால் என்று அழைக்கப்படுகிறது.

மேல வாய்க்கால்

இவ்வாய்க்கால் தொரவழி என்ற இடத்திலிருந்து பிரிந்து ஆவடியாம் பள்ளம், சிக்கலுடையான், தண்ணீர்ப்பந்தலடி, குசவன் குழி, புலிகுத்தி, காடுவெட்டி, சொட்டவட்டி,

ஊச்சநிலம், குறிஞ்சிப் பள்ளம் வழியாகப் பாய்ந்து, தாழை வாய்க்காலில் முடிகின்றது.

கீழ வாய்க்கால்

இவ்வாய்க்கால் இரவேலி, வடம்போக்கி, மண்ணியாங் குட்டை, புளியந்தோப்பு வழியாகப்பாய்ந்து பரிவர்த்தனையில் முடிகின்றது.

குளங்கள்

வியாக்கிரபாத முனிவரின் குழந்தை உபமன்யு அழுத போது, பாற்கடலினின்று அக்குழந்தைக்குப் பாலமுது ஊட்டியவன் புருடோத்தமன். புருடோத்தமன் கோயிலுக்கு வடக்கேயுள்ள பெரிய திருக்குளத்தின் பெயர் திருப்பாற்கடல் சீர்காழி வட்டத்தில் இதுவே மிகப்பெரிய திருக்குளம்,

நாராயணப்பெருமாள் கோயிலுக்கு எதிர்புறம் இந்திர-புஷ்கரணி என்ற குளம் உள்ளது. இதற்குத்திருக்குளம் என்ற பெயருண்டு. குடமாடுங்கூத்தர் கோயிலின் இடது புறத்தில் உள்ள குளம் அமிர்தகட புஷ்கரணி என்று அழைக்கப்படுகிறது. இதற்கு சாத்தான் குட்டை என்ற பெயருமுண்டு. நாலாயிரத்தொருவர் பிள்ளையார் கோயிலின் முன் உள்ள குளத்திற்கு தசாஅசுவமேத தீர்த்தம் என்றும் பெயர். பிள்ளையார்குளம் என்றும் அழைப்பர் வைகுந்தப் பெருமாள் கோயில் முன் உள்ள குளத்திற்கு லட்சுமிபுட்கரணி என்று பெயர். இதை உதங்கதீர்த்தம் என்றும் அழைப்பர் அயகோடி புஷ்கரணி குளம் நாராயணப் பெருமாள் கோயிலுக்குப் பின்புறம் உள்ளது. நாராயணபுரம் நல்லமுத்தான் கண்ணிக்குளம் என்று மற்றொரு குளமும் உள்ளது.

நாங்கூரைச்சுற்றி

இத்தலைப்பில் நாங்கூரைச்சுற்றியுள்ள வரலாற்றுச்சிறப்பிடங்கள் சுருக்கமாகத் தொகுத்துச் சொல்லப்படுகின்றன.

திருவாலி

இவ்வூர் சீர்காழியிலிருந்து கிழக்கே 6 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் இலட்சுமி நரசிம்மர் பெருமான் கோயில் ஒன்று உள்ளது இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்குநோக்கி கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறையின் எதிர்ப்புறத்தில் கருடாழ்வார் சந்நிதி உள்ளது. இக்கோயில் விமானம் ஏகதளவிமானமாகும். கருவறையில் லெட்சுமி நரசிம்மப்பெருமாள் லெட்சுமியை வலதுபாகத்தில் தழுவிக்கொண்டு காணப்படுகின்றார். பெருமாள் லெட்சுமியை ஆலிங்கனம் செய்து கொண்டதால் தான் இத்தலப்பெயர் திருஆலி ஆயிற்று என்று கூறுவர். அர்த்தமண்டபத்தில் பூர்ணமகரிஷி, நம்மாழ்வார், மணவாள மாமுனிகள் சிற்பங்கள் உள்ளன இச்சிற்பங்கள் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தவை. உடையவர், குலசேகரர், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் சிற்பங்களும் உள்ளன. திருவாலி நகராளன், இவ்வூர் மாரியம்மன் ஆகிய செப்புத்திருமேனிகளும் இங்குள்ளன

"தானாய நினையானேல் தன்னினைந்து
நைநவேற்கோர்
மீனாய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவனோ
தேன்வாய வரிவண்டே திருவாலி நகராளும்
ஆனாயற் சென்னுறுநோய் அறியச்
சென்றுரையாயோ"

என்று திருமங்கையாழ்வார் இவ்வூரைப்பாடியுள்ளார் (பெரியதிருமொழி 3-6-11). தைத் திங்களில் திருமங்கை-ஆழ்வார், திருநாங்கூர் கெருடசேர்வை உற்சவம் முடிந்து திருநகரிக்குத்திரும்புகையில்இக்கோயிலுக்கு வந்து மங்களா-சாசனம் செய்தருளுகின்றார்.

பங்குனித்திங்களில் திருநகரி கல்யாணரெங்கநாதர் இக்கோயிலில் செய்துகொள்ளும் வைபவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இக்கோயில் கடைக்கண்விநாயக-நல்லூர் எஸ்டேட் உரிமையாளர்களின் நிர்வாகத்தில் இருந் வருகின்றது.

திருநகரி

இவ்வூர் சீர்காழியிலிருந்து கிழக்கே 7 கி மீ தொலைவில் உள்ளது. சீர்காழி-பெருந்தோட்டம் பேருந்து வசதி உள்ளது. இவ்வூரில் கல்யாணரெங்கநாதசாமி என்ற பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. திருவரங்கத்து அரங்கநாதரே இங்கு திருமங்கையாழ்வாருக்குக் காட்சிகொடுத்து ஆட்-கொள்ள கல்யாணரெங்கநாதராக எழுந்தருளினார் என்று கூறுவர். கல்யாணரெங்கநாதரை குலசேகராழ்வார், திரு-மங்கையாழ்வார் ஆகியோர் பாடியுள்ளனர்,

இத்தலத்திற்கு திருவாலி-திருநகரி, பில்வாரணிய சேத்திரம், லெட்சுமிபுரம், ஆலிங்கனபுரம், ஸ்ரீநகரி போன்ற பெயர்கள் உண்டு. நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூரைக் குறிப்பிடும்போது ஆழ்வார் திருநகரி என்று குறிப்பதுபோல திருமங்கையாழ்வார் ஆண்டபகுதி திருவாலி என்பதால் திருவாலி திருநகரி என்று இவ்வூரை அழைப்பர்.

இவ்வூர்க்கோயிலின் பரப்பளவு 3.4 ஏக்கர் ஆகும். இக்கோயில் திருஉண்ணாழி, அர்த்தமண்டபம், மகாமண்ட-

பம், ஆறு திருச்சுற்றுகள், திருச்சுற்றுமதில்கள் கொண்டு மேற்குநோக்கிக் கட்டப்பட்டுள்ளது. இதனுள் ஏவரிஞ்சிலையான் சந்நிதி, திருமங்கை மன்னன் சந்நிதி, உடையவர் சந்நிதி, அமிர்தவல்லித்தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி ஆகியவை உள்ளன.

இங்குள்ள மூலவருக்கு சுவேதராஜன் என்று பெயர். இப்பெருமான் அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றார். அமர்ந்த கோலத்திலுள்ள இவரை வயலாலி மணவாளன் என்றும் உற்சவரை வயலாலி மைந்தன் என்றும் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகின்றார்.

இரண்டாவது திருச்சுற்றின் வலதுபுறத்தில் உற்சவமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் கண்ணன், பெரியாழ்வார், மதுரகவி ஆழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், ஸ்ரீதேவி நாச்சியார், பரமபதநாதர் பூதேவி நாச்சியார், ஆலிங்கனபுரீசுவரர், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைஆழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பாண் ஆழ்வார், நாதமுனிகள், தொண்டரடிப்பொடியாழ்வார், பிள்ளைலோக ஆச்சாரியார், தேசிய ஆச்சாரியார், போன்ற சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கலைப்பாணியாகும். மூன்றாவது கோபுரத்தின்வலது, இடது புறங்களில் இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. இவை சிறப்பாகக் காட்சி தருபவை, இங்கு உடையவர் மண்டபம், திருவந்திக்காப்பு மண்டபம், உற்சவ மண்டபம், பரகாலமண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன

முதல் கோபுரத்தில் ஏழுமாடங்கள் உள்ளன. இரண்டாவது கோபுரம் நான்கு மாடங்கள் கொண்டது, மூன்ருவது

கோபுரம் இரண்டு மாடங்கள் கொண்டது இவை கி பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

கல்வெட்டுச் செய்திகள்

இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. விருப்பண்ண உடையரின் சகம் 1308 (கி பி 1386) ஆண்டுக் கல்வெட்டொன்று இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட சர்வமான்யப் பட்டியலைத் தெரிவிக்கின்றது. கிருஷ்ணதேவராயரின் சகம் 1439 (கி.பி. 1517) கல்வெட்டொன்று பல சைவ, வைணவக் கோவிலுக்கு வரி தள்ளுபடி செய்யபட்டதைக் குறிக்கின்றது. இக்கோயிலில் தினமும் வேதபாராயணம் செய்வதற்கு நிலங்கள் தானமாக அளித்த செய்தியும், மற்றொரு கல்வெட்டு இங்குள்ள இறைவன் பெயரையும் குறிப்பிடுகின்றன.

திருநகரியில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் 42 குலசேகர ஆழ்வாரும் பாடி இருக்கின்றார். திருமங்கையாழ்வார் பரகாலநாயகியாக இங்குள்ள ஏவரிவெஞ் சிலையானுக்கு வண்டினைத் தூதுவிடும் பாசுரம் பின் வருமாறு.

''தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரிய மதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரிவெஞ் சிலையானுக் கென்னிலைமை யுரையாயே''

(பெரியதிருமொழி 3-6-1) என்றும் மற்றொரு பாசுரத்தில்,

"வந்துன தடியேன் மனம்புகுந்தாய்
புகுந்ததற் பின் வணங்கும் என்
சிந்தனைக்கினியாய் திருவே என்னாருயிரே
அந்தளி ரணியார் அசோகின் இளந்தளிர்கள்
கலந்தவை யெங்கும்
செந்தழல் புரையும் திருவாலியம்மானே"

(பெரியதிருமொழி 3-5-1) எ றும் நாயகி, நாயகபாவத்தில் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார்.

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தனது நூற்றெட்டுத்-திருப்பதி அந்தாதியில் இக்கோயில் பற்றிப் பாடி இருக்கின்றார்.

"கழன்று போம் வாயுவினைக் காட்டாமறீத்த
முயன்று போயாடாமலிய்ந்தே — னென்று
பொருவாலி காலனை பரகாலன் போற்றுந்
திருவாலி யாயனையே சேர்ந்து

இந்து சமயஅறநிலையத்துறையின் கீழ் இக்கோயில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது இக்கோயிலுக்குச் சொந்தமாக 95.90 ஏக்கர் நன்செய்நிலமும், 46.64 ஏககர் புன்செய்நிலமும் உள்ளன. இங்குள்ள திருமங்கையாழ்வார் உற்சவர் திருநாங்கூர் கருடசேவை உற்சவத்தில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறையலூர்

இவ்வூர் சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் திருமங்கையாழ்-வாரின் அவதாரத்தலமாகும். இவ்வூர்ப் பகுதியில் சுற்றியுள்ள மக்கள் இவ்வூரை குரலூர் என்று அழைக்கின்றனர் இங்கு

உக்கிர நரசிம்மருக்கு ஒருகோயில் எடுக்கப்பட்டுள்ளது. உயரமான மேடைமீது இப்பெருமான் கோயில் கட்டப்பட்டுள்ளது. திருச்சுற்றின் தென்கிழக்குமூலையில் மடப்பள்ளியும், இதையடுத்து நாச்சியார் அம்மன்சந்நிதியும் உள்ளன.

கருவறையில் உக்கிரநரசிங்கப்பெருமாள் வலதுகாலைக் கீழ தொங்கவிட்டு, இடதுகாலை மடக்கி அமர்ந்தநிலையில் காணப்படுகிறார். இரணியனைக் கிழித்த வேகம் இவர் முகத்தில் தெரிகின்றது. இச்சிற்பத்தின் அமைப்பு, ஆடை, அணிகலன்கள் முதலியவற்றைக் கொண்டு இச்சிற்பத்தை கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கலைப் படைப்பாகக்கருதலாம். இதன் இருபுறம் ஸ்ரீதேவி பூதேவி சிற்பங்கள் உள்ளன. அர்த்தமண்டபத்தில் அமர்ந்த நிலையில் சேனை முதலியார் சிற்பமும், அமர்ந்த நிலையில் உடையவர் சிற்பமும் காணப்படுகின்றன. நின்ற நிலையில் திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் சிற்பங்கள் உள்ளன. இக்கோயில் விமானம் ஏக தளவிமானமாகும். விமானத்தின் நான்கு புறங்களிலும் சுதையாலான நான்கு கருடாழ்வார் உருவங்கள் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. சுமார் 50 வருடங்களுக்கு முன் இக்கோயிலுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இக்கோயில் அறங்காவலர் திரு நா. கிருஷ்ணமூர்த்தி இக்கோயில் பற்றிய செய்திகள் அளித்து உதவினார்.

மங்கைமடம்

இவ்வூர் சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது, இவ்வூர் கடைத்தெருவிலிருந்து கிழக்கே ½ கி மீ. தூரத்தில் வீரநரசிம்மப்பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயில் முழுதும் தற்போது இடிந்த நிலையில் காணப்படுகிறது. இரண்டாவது திருச்சுற்றின் வடகிழக்கு

மூலையில் நாச்சியார் அம்மன் சந்நிதி உள்ளது இச்சந்நிதி பழுதடைந்த நிலையில் உள்ளது, இக்கோயிலுக்குரிய மூலவர் சிற்பங்கள் வீரநரசிங்கப்பெருமாள், ஸ்ரீதேவி பூதேவி போன்ற சிற்பங்கள் அகற்றப்பட்டு, தற்போது வடகிழக்கு மூலையில் தனி மண்டபம் கட்டப்பட்டு, அம்மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் கருவறைக்குச் செல்லும் நுழைவாயிலின் இடதுபுறத்தில் தலைப்பகுதி, மார்புமட்டுமே உள்ள நரசிங்கப்பெருமாள் ஒன்று உள்ளது. இச்சிற்பம் இக்கோயிலுக்குரிய மிகப்பழமையான சிற்பமாகும். இதுவே இக்கோயில் கருவறைக்குரிய மூலவர் சிற்பமாகக் கருதலாம். இச்சிற்பத்தின் முக அமைப்பு, மற்றும் அணிகலன்களைக் கொண்டு இச்சிற்பம் கி.பி 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலச் சோழர் கலைப்படைப்பெனலாம்.

திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் உள்ள ஒருமண்டபத்தில் திருமங்கையாழ்வார் சிற்பம் காணப்படுகிறது இக்கோயிலைச் சுற்றிலும் நான்கு வீதிகள் இருந்தன, தற்போது மேலவீதி, வடக்கு வீதி மட்டுமே உள்ளன. மற்ற வீதிகள் வயல்களாகி விட்டன. இக்கோயில் கிழக்குநோக்கி அமைந்தது. ஆனால் கோயிலுக்கு மேற்குபுறப் வழியாகத் தான் இன்று செல்லவேண்டும்.

வைணவ அடியார்களுக்கு உணவு அளிக்க இவ்வூரில் மடம் அமைக்கப்பட்டிருந்தது. இம்மடம் திருமங்கையாழ்வார் காலமான கி.பி.8ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆதலால் மடத்தோடு சேர்ந்து இவ்வூர் மங்கை மடம் என்று பெயர் பெற்றது. மங்கை என்பது திருமங்கையாழ்வாரைக் குறிக்கும். இம்மடத்தில் 1008 வைணவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். மங்கை மடத்தில் சீர்காழி செல்லும் சாலையின் இடதுபுறத்தில்

மண்டதட்டிக்குளம் என்றஇடத்திற்குப் பின்புறம் மடம்ஒன்று இருந்தது. இம்மடம் அழிந்து தற்போது செங்கற்கள் குவியலாகக் காணப்படுகின்றன. இம்மடம் அழிந்துவிட்ட-தால் திருமங்கையாழ்வார் காலத்தில் தொடங்கப்பட்ட உணவு வழங்குதல், திருநாங்கூர்கெருடசேர்வை உற்சவத்-தின் போது திருநாங்கூர் இராமாநுஜர் மண்டபத்தில் வழங்கப்படுவது குறிப்படத்தக்க ஒன்றாகும்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளி

இவ்வூர் திருவெண்காட்டிலிருந்து மேற்கே 2 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர் வடக்குத்தெருவில் ஆரண்ய சுந்தரர் என்ற சிவன்கோயில் ஒன்று உள்ளது. இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடல்பெற்றத் தலமாகும்.

திருஞானசம்பந்தர்பாடல்

கீழைத்திருக்காட்டுப்பள்ளியில் ஞானசம்பந்தர் பாடியருளிய பதிகத்தில் ஒருபாடல்,

“திரைகளெல் லாமல ருஞ்சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகளெல் லாமுணர் வெய் தி நல்ல
வுத்தம ராயுயர்ந் தாலுலகில்
அரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே”

இவ்வூரின் இயற்கை அழகை கூறும் மற்றொரு பாடல்,

"செய்யருகே புனல் பாய ஓங்கிச்
செங்கயல் பாயச் சில மலர்த்தேன்
கையருகே கனி வாழை ஈன்று
கானலெல்லாம் கமழ் காட்டுப்பள்ளி"

இங்கு மகாமண்டபத்தின் வலதுபுறத்தில் தெற்கு நோக்கி அகிலாண்டசந்நிதியும், திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் லிங்கவடிவில் முனியீசர், பிரம்மேசர் சந்நிதியும், இதையடுத்து முருகன், வள்ளி, தெய்வானை சந்நிதியும், திருச்சுற்றின் வடகிழக்கே பைரவர், சூரியன், சனிபகவான் சந்நிதியும், திருச்சுற்றில் கருவறையின் வடக்குப்புறத்தில் சண்டிகேசுவரர் சந்நிதியும், திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் நண்டுபூஜித்த விநாயகர் சந்நிதியும் உள்ளன.

அர்த்தமண்டபத்தின் தெற்கு தேவகோட்டத்தில் சங்கு ஊதும் மாகாளர் சிற்பமும், மகாமண்டபத்தின் வெளிப்புறச்சுற்றில் கிழக்குத்திசையில் ஆரண்யமுனிவர் அஞ்சலித்த நிலையில் லிங்கத்தைத் வழிபடும் நிலையில் சிற்பமாக காட்டப்பட்டுள்ளது. சிற்பத்தின் கீழே ஆரண்யமுனிவர் என்ற சோழர்கால கல்வெட்டு உள்ளது. ஆரண்யமுனிவர் இங்கு வழிபட்டு அருள்பெற்றதாகக் கூறுவர்.

நண்டுபூஜித்தவிநாயகர்சிற்பம்

திருச்சுற்றின் தென்மேற்குமூலையில் நண்டு பூசித்த விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. விநாயகர் அமர்ந்த நிலையில் முன்னிருகரங்கள் ஒடிந்தகொம்பும், மோதகமும் பற்றியுள்ளன. பின்னிருகரங்கள் அங்குசம், பாசம் பற்றியுள்ளன. தலையில் கரண்டமகுடமும், மார்பில் முப்புரிநூலும் காணப்படுகின்றன. இடம்புரி விநாயகர்

விநாயகரின் பீடத்தில் நண்டு உருவம் பொறிக்கப்-பட்டுள்ளது. இச்சிற்பம் கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச்-சார்ந்த முற்காலச்சோழர் கலையாகும்.

பூம்புகார்

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து தென்கிழக்கே 8 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் சங்ககால சோழர் காலத்தில் சிறந்த துறைமுகப் பட்டினமாக திகழ்ந்தது. பூம்புகார் என்பது காவிரி ஆறு கடலில்புகும் இடமாகும். ஆதலால் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் பெற்றது. அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்-தொண்டர்புராணம், போன்ற தமிழ்நூல்களும், மிளிந்தபன, அபிதம்மாவதாரம், புத்தவம்சாத்தகதா முதலிய பிராகிருத நூல்களும், தாலமி எழுதிய பூமிநூல், பிளினி எழுதிய நூல் பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய் முதலிய வெளிநாட்டார் எழுதிய நூல்களும், கல்வெட்டுகளும் இந்நகரின் சிறப்பைக் குறிக்கின்றன.

புகழ்வாய்ந்த இத்தொன்மை நகரில் மத்திய தொல் பொருள் ஆய்வுத்துறை அகழாய்வு மேற்கொண்டது. இவ்வகழ்வாய்வில் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கீழையூர் என்றபகுதியில் செங்கற்கட்டடம் கண்டுபிடிக்கப் பட்டது. பல்லவனீச்சுரம் என்ற இடத்தில் புத்தவிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. கல்லிலே செதுக்கப்பட்ட புத்தபாதம் ஒன்றும் கிடைத்துள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் பூம்புகாரில் புத்தசமயம் சிறந்து விளங்கியதாகக் கூறப்படுகிறது. அதை உறுதி செய்யும் வகையில் இவ்வகழ்வாய்வு அமைந்துள்ளது. செப்புக்காசுகள்

கிடைத்துள்ளன. வெள்ளையனிருப்பு என்ற இடத்தில் ரோமானிய செப்புக்காசு ஒன்று கிடைத்துள்ளது. பூம்புகார் ரோமானியர் வாணிகத் தொடர்பு இக்காசு மூலம் உறுதி பெறுகிறது. புலிபொறிக்கப்பட்ட சங்ககால சோழர்காசு இங்கு கிடைத்துள்ளது. இக்காசு கரிகாலன் காலத்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இராசராஜன் காசுகளும் கிடைத்துள்ளன.

1990 ஆம் ஆண்டு மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் பூம்புகார் கடலில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையும், கோவா தேசிய கடலாய்வு நிறுவனமும் இணைந்து கடலாய்வை மேற்கொண்டன. இவ்வாய்வில் பல பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது இவ்வூர் சிற்றூராக காட்சி அளிக்கின்றது.

திருவெண்காடு

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து தென் கிழக்கே 3 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் நாங்கூர் நாட்டு பிரிவில் அடங்கிய ஒரு ஊராகும். இங்கு சுவேதாரண்யே சுவர் கோயில் உள்ளது. இத்தலத்தை ஆதிசிதம்பரம், சுவேதாரணியம் எனவும் அழைப்பர். இறைவனின் பெயர் சுவேதாரணியேசுவரர், இறைவியின் பெயர் பிரமவித்யாநாயகி, இறைவனுக்கு திருவெண்காடு உடையார், திருவெண்காடு பெருமான், திருவெண்காடுதேவா, திருவெண்காடு உடையநாயனார் என்று பல்வேறு பெயர்கள் உள்ளன இக்கோயிலுள்ள காளி கொற்றவை, அகோரமூர்த்தி போன்ற சிற்பங்கள் மிகவும் அழகானவை. மெய்கண்டார் பிறந்தவூர் இதுவே சமயக்குரவர் நால்வரும் வணங்கிய திருக்கோயில் இது. பட்டினத்தாருக்கு இறைவன்

இலிங்கத்தை அளித்த இடம் இக்கோயிலில்மொத்தம் 100 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. சோழர், பாண்டியர், விஜயநகர், மராட்டியர் ஆகிய மன்னர்கள் காலத்தவை இவ்வூரில் மூன்றுமுறை செப்புத்திருமேனிகள் கண்டெடுக்கப்பட்டு தஞ்சைகலைக் கூடத்திலும், சென்னை அருங்காட்சியகத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

மேலையூர்

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து தென்கிழக்கே 5 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இப்பகுதியில் கிடைத்துள்ள தொன்மையான செப்புத்திருமேனிகளில் 'மைத்ரேயர்' உருவம் சிறப்பு உடையதாகும் இத்திருமேனி சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. இத்திருமேனி செம்பால் செய்யப்பட்டு, அதன்மேல் தங்கமுலாம் பூசப்பட்டு விளங்குகிறது. இது புகாரில் வளர்ந்து மறைந்த புத்தசமயத்தின் வளர்ச்சியை காட்டுகிறது. இத்திருமேனி கி. பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் கால கலைப்படைப்பாக விளங்குகிறது.

திருச்சாய்க்காடு

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து தென்கிழக்கே 5 கி. மீ. தொலையில் அமைந்துள்ளது தற்போது இவ்வூர் சாயாவனம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் தொன்மையான திருச்சாயாவனேச்சுரர் என்ற கோயில் உள்ளது. கல்வெட்டுகள் இவ்வூரை இராசாதிராச வளநாட்டு, நாங்கூர்நாட்டு காவிரிப்பூம்பட்டினத்து திருச்சாய்க்காடு என்று குறிக்கின்றன. இவ்வூர் நாங்கூர்நாட்டுப் பிரிவில் அடங்கிய ஓர் ஊராகும். இங்கு சோழர் மற்றும் பாண்டியர் கல்வெட்டுகள் உள்ளன.

திருப்பல்லவனீச்சுரம்

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து தென்கிழக்கே 6 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள கோயில் அழகு வாய்ந்தது, இறைவன் பெயர் பல்லவனீச்சுரர். இறைவி சௌந்தரநாயகி என்பது. இயற்பகைநாயனாரும், பட்டினத்துப் பிள்ளையாரும் அவதாரம் செய்தருளிய இடமாகும், சிலப்பதிகாரச் செம்மல்களான கோவலன் கண்ணகி பிறந்த இடமும் இதுவே என்பர். இவ்வூரின் சிறப்பினை சம்பந்தர் பாடியுள்ளார்.

மேலப்பெரும்பள்ளம்

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து தென்கிழக்கே சென்று தென்மேற்கே 5 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது, திருமால் இத்தலத்திலுள்ள இறைவனை வழிபட்டு சங்கு பெற்ற தலம். இத்தலத்தை அப்பர், சம்பந்தர் ஆகியோர் வந்து தரிசித்துச் சென்றுள்ளனர். இவ்வூரிலிருந்து மொத்தம் ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன இக்-கோயிலில் சில அழகிய செப்புத்திருமேனிகள் உள்ளன.

வைத்தீசுவரன் கோயில்

இவ்வூர் திருநாங்கூரிலிருந்து மேற்கே சென்று, வடமேற்கே 6 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு மற்றொரு பெயர் புள்ளிருக்குவேளூர் என்பதாகும். ஒவ்வொரு திங்கள் கார்த்திகை நட்சத்திரந் தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வழிபட்டு செல்கின்றனர். இறைவன் வைத்தியநாதர். இறைவி தையல்நாயகி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் ஆகியோர் இவ்வூரைப் பாடியுள்ளனர். இக்கோயிலில் எட்டுக்கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் விக்கிரம சோழன் கல்வெட்டே பழமையானதாகும்

சீர்காழி

திருஞானசம்பந்தர் அவதரித்த ஊராகும். பிரமபுரீசுரம் என்னும் சட்டைநாதர் கோயில் உள்ளது. சட்டநாதர் சங்கமமூர்த்தமாவார். இவருக்கு புனுகு சட்டம் சார்த்தி வடை, பாயசம் நிவேதனம் செய்யப்படுகிறது. பைரவரின் எண்வகைத் தத்துவ உருவங்களான சுதந்திரபைரவர், சுயேச்சை பைரவர், லோக பைரவர், கால பைரவர் உக்கிர-பைரவர், பிச்சையா பைரவர், நிர்மாண பைரவர், பீஷ்ண-பைரவர் ஆகியோர் வலம்புரி மண்டபத்தில் யோக ஸ்தானத்தில் உள்ளனர். இத்தலத்தில் இருபத்திரெண்டு தீர்த்தங்கள் உள்ளன, திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், சேக்கிழார், அருணகிரிநாதர் முதலியோர் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

இக்கோயிலில் 47 கல்வெட்டுகள் உள்ளன. அவை வீரராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் ராசேந்திரன் மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், கோனேரின்மை-கொண்டான், கோப்பெருஞ்சிங்கன், விருப்பன்ன உடையார் கிருஷ்ணதேவராயர் போன்ற மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகளாகும்.

வடக்குத்தெருவில் பிடாரிகோயில் உள்ளது. பிடாரி மேலத்தெருவும், வடக்குத்தெருவும் கூடும் இடத்தில்

நாகேசுரமுடையார் கோயில் உள்ளது. இதனை ராகு சேஷத்திரம் என்பர். இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் வழிபட்டால் ராகு சம்மந்தமான தோஷங்கள் விலகும் என்பர். சீர்காழி தென்பாதியில் பல சிறுகோயில்கள் உள்ளன. உதயபானு பாலச்சந்திர விநாயகர்கோயில், நரசிம்மப்பெருமான்கோயில் அங்காளம்மன்கோயில், கயிலாய நாதர் கோயில், கைவிடேல் ஐயப்பன் கோயில் முதலிய கோயில்களும் உள்ளன. சீர்காழிக்கு 1கி.மீ. கிழக்கே உள்ளது செம்மங்குடி. இதனை கேது ஸ்தலமென்பர். சீர்காழி பிடாரி வடக்குவீதிக்கு வடக்கே குமரக்கோயில் உள்ளது. காழி விநாயகர்கோயில், கோமளவல்லி, காளியம்மன்கோயில் தேர் கீழவீதியில் உள்ளன. இரட்டைத்தெருவில் சோளே சுரமுடையார் கோயில் உள்ளது. தெற்கு கோபுரவாயிலில் பிரசித்திபெற்ற ஆபத்து காத்த விநாயகரும், சுப்பிரமணியர் கோயிலும் உள்ளன.

கல்வெட்டில் இவ்வூர் இராஜராஜவளநாட்டுத்-திருக்கழுமலநாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்று காணைப்படுகிறது. கோனேரிதேவ மகாராஜா கல்வெட்டு இவ்வூரை சீர்காழி என்று குறிக்கின்றது.

சீர்காழி சட்டைநாதர்கோயிலில் சித்திரைமாதத்தில் பெருவிழா நடைபெறுகின்றது. பத்துநாட்கள் நடைபெறும் இவ்விழாவில் இரண்டாந்திருவிழா திருஞானசம்மந்தருக்கு ஞானப்பால் அளித்த நிகழ்ச்சி திருமுலைப்பால் உற்சவம் என்றப்பெயரில் சிறப்பாக நடைபெறுகின்றது.

சீர்காழிவட்டத்திலுள்ள ஊர்கள்

1. மாதிரிவேலூர்
2, வடரங்கம்
3. அகரஎலத்தூர்
4. கீழ்மாத்தூர்
5. அத்தியூர்
6. விளந்திட்டசமுத்திரம்
7. குன்னம்
8 & 9. சோதியக்குடி
10. புத்தூர்
11. எருக்கூர்
12. அரசூர்
13. திருமயிலாடி
14. நல்லநாயகபுரம்
15. பனங்குடி
16, கூத்தியம்பேட்டை
17. ஓடவந்தன்குடி
18. பச்சைபெருமாநல்லூர்
19. ஆர்ப்பாக்கம்
20. உமையாள்பதி
21. கடவாசல்
22. வரிசைபத்து
23. ஆலங்காடு
24. மகாராசபுரம்
25. அகரவட்டாரம்
26. மாதானம்
27. ஆலாலசுந்தரம்
28 ஆச்சாள்புரம்
29. முதலைமேடு
30. அளக்குடி
31. மகேந்திரப்பள்ளி
32, காட்டூர்
33. புலியந்துறை
34. ஆரப்பள்ளம்
35, பழையபாளையம்
36. தாண்டநங்குளம்
37. வேட்டங்குடி
38. திருமுல்லைவரசம்
39. ராதாநல்லூர்
40 எடமணல்
41. திருக்கருகாவூர்
42 செம்மங்குடி
43. தில்லைவிடங்கன்
44. திட்டை
45 சட்டநாதபுரம்
46. கைவிளாஞ்சேரி
47. சீர்காழி
48. விளந்திட்டசமுத்திரல்
49. தாடாளன் கோவில்
50. அகனி
51. வள்ளுவக்குடி
52. கொண்டல்
53. மருதங்குடி
54. புங்கனூர்

55. பெருமங்கலம்
56. திருப்புன்கூர்
57. கன்னியாக்குடி
58. கற்கோயில்
59. கதிராமங்கலம்
60. எடக்குடி
61. காரைமேடு
62. காத்திருப்பு
63. செம்பதினிருப்பு
64. ராதாநல்லூர்
65. நாங்கூர்
66. திருவாலி
67. புதுத்துறை
68. திருநகரி
69. நெப்பத்தூர்
70. தென்னாம்பட்டினம்
71. பெருந்தோட்டம்
72. ஆகரபெருந்தோட்டம்
73. கீழசட்டநாதபுரம்
74. திருவெண்காடு
75. மங்கைமடம்
76 மணிக்கிராமம்
77. கீழையூர்
78. மேலையூர்
79. வானகிரி

நாங்கூர் மக்கள்

இவ்வூரில் பல்வேறு இன மக்கள் வசிக்கின்றனர். அதிக எண்ணிக்கையில் படையாட்சி இனத்தவர் உள்ளனர். இவர்களில் வன்னியகுக்குச் சத்திரியர், பாளையப்பட்டு, புலிக்குத்தியார் அடங்குவர். இவர்கள் தவிர ஆதி திராவிடர்கள், முதலியார், (செங்குந்தர், கைக்கோளர் பிரிவினர்) அய்யர், அய்யங்கார், கார்கார்த்தார் பிள்ளை, சோழிய வெள்ளாளர், அம்பலக்காரர், வாணியசெட்டியரர், வைஷ்யசெட்டியார், மண்உடையார், நாயுடு, பத்தர், ஆசாரி, நோக்கர், வைத்தியர், இசைவேளாளர் ஆகிய இனத்தவர்களும் உள்ளனர். மேலும் கிறித்தவர், இஸ்லாமியரும் இவ்வூரில் உள்ளனர்.

திருநாங்கூர் கிராமத்தின் மொத்தமக்கள் தொகை 3838 ஆகும், ஆண்கள் 1985-பேர். பெண்கள் 1853-பேர். இது 1991-92 ஆம் ஆண்டின் மக்கள் தொகையாகும். (இக்குறிப்பு தந்தவர் திரு. எ. சம்பத், தலைமையிடத்து துணைதாசில்தார், சீர்காழி அவர்கள்)

1. திருமணிக்கூடம், 2. நாராயணபுரம் 3. மேல்நாங்கூர் இம்மூன்று கிராமங்களும் நாங்கூர் பஞ்சாயத்தில் இடம் பெறுகின்றன. சீர்காழி, ஊராட்சி ஒன்றியபெருந்தலைவர் பொறுப்பிலும், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலும் திருநாங்கூர் பஞ்சாயத்து இடம்பெறுகின்றது.

திரு வ நாராயணசாமி படையாட்சி திரு த. திருநாவுக்கரசு முதலியார், திரு எஸ். பாலச்சந்திரன் திரு ப. இராமலிங்கம், பி ஏ., ஆகியோர் நாங்கூரின் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்களாவர்.

நெசவு

இவ்வூரில் முதலியார் வகுப்பைச் சார்ந்த மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் கைக்கோளர் என்றப் பிரிவினர் நெசவுத்தொழிலை முக்கியத்தொழிலாக கொண்டுள்ளனர். கைத்தறி நெசவின் மூலம் நெய்யப்பட்டத்துணிகள் மயிலாடுதுறை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்கப்படுகின்றன. இவ்வூரில் பட்டுநெசவுத்தொழிலும் உள்ளது.

விவசாயம்

திருநாங்கூர் கிராமம் 120 வேலி நிலப்பரப்பு கொண்டது. இங்குள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாக கொண்டுள்ளனர். நன்செய் நிலத்தில் முப்போகமும் நெல்பயிரிடப்படுகிறது. ஆறுகள், வாய்க்கால்கள் மட்டுமின்றி மின்சார பம்புசெட்களின்மூலமும் விவசயம் செய்யப்படுகிறது. புன்செய் நிலங்களில் பருத்தி, வாழை, கடலை, எள், சவுக்கு, மரவள்ளிக்கிழங்கு போன்றவை பயிர் செய்யப்படுகின்றன.

திருநாங்கூரில் பிறந்து பல்வேறு துறைகளில் பணிபுரிபவர்கள்

கல்வித்துறை

ஆசிரியர்கள்

1. திரு கா. ஜெயபாலன், B.sc, M A, M.Ed ,
   உயர்நிலைப்பள்ளி, திருநாங்கூர்.
2. திரு கு. வாசுதேவன், பி ஏ ,பி.எட்.,
   தலைமை ஆசிரியர், கோமல்.
3. திரு மூ. நாராயணன்
4. திரு கு. வைத்திலிங்கம், பி.எஸ்ஸி.பி.எட்.'
   சீனிவாசா மேனிலைப்பள்ளி, பூம்புகார், மேலையூர்
5. திரு என். அன்பழகன்
   ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு
6. திரு வை. ஜெயராமன் பி.ஏ பி,எட் ,
   எஸ்.எம் எச். சீர்காழி
7. திரு வை. ஆறுமுகம்
8. திரு ஆர். சச்சிதானந்தம்
9. திரு சீனிவாசன், தலைமை ஆசிரியர்
10. திரு கோ. இராசேந்திரன், எம் ஏ., ம்.எட்,
    திருமருகல்
11. திரு ஆர். கோவிந்தசாமி, எம்.ஏ ,எம்.எட்,
    ஆடுதுறை
12. திரு. சு. சுப்பிரமணியம்
    தலைமை ஆசிரியர், ஞானகிரி.
13. திரு ஆர் இரமணி
    தலைமை ஆசிரியர், நெப்பத்தூர்.
14. திரு. சி. நரசிம்மன்
15. திரு இராமச்சந்திரன்

16. திரு. கலிவரதன்
17. திரு. ச. இலக்குவன், மயிலாடுதுறை
18. திருமதி, இல, சித்ரா
19. திரு. ந. முத்துவேல், எம் ஏ., பி. எட்,
கீவலூர்.
20. திரு. சி. நரேந்திரன் எம் எஸ்ஸி., பி. எட்.,
அரசு மேனிலைப்பள்ளி கீவளூர்
21. திரு. ச. முருகேசன் எம். எஸ்ஸி. பி. எட்,
மயிலாடுதுறை
22 திரு. ஆறுமுகம், கீழ சட்டநாதபுரம்
22 திரு எஸ். ரெங்காச்சாரி
அண்ணன் பெருமாள் கோயில்
23 செல்வி B. பத்மாவதி, கீழச் சாலை
24 திரு வி. செளரிராஜன், நெப்பத்தூர்
25 திரு. ஆ மதிவாணன்
26 திரு. ஆ. இராஜகோபாலன்

தமிழ்புலவர்கள்

1. புலவர் மு, நாராயணன்
2, புலவர் சு கோவிந்தராஜன்
தமிழாசிரியர், மேனிலைப்பள்ளி
கிழக்குத்தாம்பரம், சென்னை.
3. புலவர். இரா. செல்வமுத்துக்கருப்பன்
5. திருமதி அலமேலு (சிங்கப்பூர்)
6. திருமதி. இராமாமிர்தம்
7. திரு, இரா. மனோகரன்
8. திரு வி. இரவிச்சந்திரன்

9. திரு கோ, செல்வராஜ்
10 திரு இரா செல்லக்குமார்
11 திருமதி இல, சித்ரா
12. செல்வி. பி, பத்மினி

மருத்துவத்துறை

1. டாக்டர் இரா. இராஜசேகரன் எம்.பி பி.எஸ் ,
2. டாக்டர் ஆ அறிவழகன் எம். பி. பி எஸ் ,

பேராசிரியர்கள்

1. பேரா ஆ. இராமகிருஷ்ணன், எம். ஏ.,
   ஆங்கில பேராசிரியர்,
   சரபோஜி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்,
2. டாக்டர் இரா. பாஸ்கரன், எம் எஸ்ஸி, பி எச்டி.,
   விவசாய பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
3. டாக்டர் கு. தர்மலிங்கம், பி. ஈ., பி எச். டி.,
   பேராசிரியர்,
   அண்ணாபல்கலைகழகம், சென்னை-25

பொறியியல்துறை

1) திரு. கு. நடராஜன் எம். ஈ., நிர்வாகஇயக்குநர்,
   ஜீவாபோக்குவரத்துக்கழகம், ஈரோடு.
2) திரு. ஆர். முருகன், பி. ஈ, (தற்போது வெளிநாட்டில் பணியில் உள்ளார்)
3) திரு. எஸ். இராமலிங்கம், பொறியாளர்.
4) திரு. கே.எஸ். கண்ணன், பொறியாளர்.
5) திரு. டி. இராஜசேகரன், எம். ஈ.
6) திரு ஆர். தியாகு எம். ஈ.
7) திரு என், மதியழகன் பி. ஈ.

கவிஞர்கள்

திரு ஆர். வரதராஜன் (தற்போது சென்னையில் பணியில் உள்ளார்)

கலைஞர்கள்

1.	திரு. உ. கலியமூர்த்தி	நாதசுவரம்
2.	திரு. ஜெ. இராமகிருஷ்ணன்	நாதசுவரம்
3.	திரு. சி செந்தில்நாதன்	நாதசுவரம்
4.	திரு. பி. ஜெயராமன்	தவில்
5.	திரு. கே. கருப்பையா	தவில்
6.	திரு. எஸ், இராமு	தவில்
7.	திரு. கே. கே. செல்வகணபதி	தவில்
8.	திரு டி. ஜம்புநாதன்	தவில்

வானொலியில் இவர்களுடைய கச்சேரிகள் நிறைய ஒலிபரப்பப்படும்.

திரு வை. ஆறுமுகம் - கரகாட்டம்.

திருநாங்கூர்உயர்நிலைப்பள்ளி

தலைமை ஆசிரியர் - கே. இராஜகோபால் எம்.ஏ, எம்.எட்,

ஊராட்சிஒன்றியப்பள்ளி

தலைமை ஆசரியர் - சண்முகம்.

தொல்லியல்துறை

திரு கா. நெடுஞ்செழியன், எம்.ஏ., பி.ஜி.டி. இ ஏ, காப்பாட்சியர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, கங்கை கொண்ட சோழபுரம், திருச்சிமாவட்டம்

ஆய்வுக்கு உதவிய நூல்கள்

1) பூம்புகார் தொ, பொ: ஆ, துறை': வெளியீடு, 1973 ஆசிரியர் அறுவர் : இரா, நாகசாமி நடன, காசிநாதன் அ. அப்துமல்ஜீத் ச. ஹரிஹரன் கு. தாமோதரன் மா. சந்திரமூர்த்தி

2) Annaual Report on Indian Epigraphy : 1951-52

3) Temple of TamilNadu
Thanjavur VII : K. Chockalingam

4) Tamil Epigraphy A Survey 1980, N. Supramanian, R. Venkatraman

5) Journed of Oriental Reseorch VOl VI

6) சீர்காழிக்கோயில்கள், த, அகரமுதல்வன் 1984

7) திருவாலி திருநகரி தலவரலாறு 1988
Dr·A.V. ரங்காச்சாரியார்


8) திருவெள்ளக்குளம் 1979 ஸ்ரீனிவாசபக்தசபா

9. நாங்கூர் தலச்சிறப்பும், தேவாரப்பாடல்களும் தருமை ஆதீனம் 1988

10. பராசவபுராணம், சாம்பசிவசாஸ்திரிகள், இராசகோ-ல்சாமி, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது 1922

11. ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் 705-ஆம திருநஷத்ர வெளியீடு தொகுப்பாசிரியர் ஸ்ரீநிவாசாசாரியர் 1972


12. பிற்காலச்சோழர் வரலாறு தி. வை, சதாசிவபண்டா-ரத்தார் 1974



நாராயணப்பெருமாள் கோயில் விமானம்,
நாங்கூர்



நாராயணப்பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி
நாங்கூர்




11 கருடசேவை மண்டபம் நாராயணப்பெருமாள் கோயில், நாங்கூர்




புண்டரீகவல்லித்தாயார் சந்நிதி நாராயணப்பெருமாள்கோயில், நாங்கூர்



நாராயணப்பெருமாள்கோயில், நாங்கூர்




புருஷோத்தமன் கோயில், நாங்கூர்




பள்ளிகொண்ட பெருமாள்கோயில், நாங்கூர்




வைகுந்தப்பெருமாள் கோயில், நாங்கூர்




குடமாடுங்கூத்தர் கோயில், கோபுரம்
கருடாழ்வார் விமானம், பலிபீடம் நாங்கூர்




குடமாடுங்கூத்தர் கோயில் விமானம்
நாங்கூர்



மாதவப் பெருமான் கோயில், கீழச்சாலை



மாதவப்பெருமாள் கோயில் விமானம்
கீழச்சாலை




அண்ணன் பெருமாள் கோயில், திருவெள்ளக்குளம்



காளி மதங்கீஸ்வரர் கோயில்,
நாங்கூர்



மதங்கரிஷி, மதங்கீஸ்வரர் கோயில்
நாங்கூர்



அடிமுடிகாணா அண்ணல், மதங்கீஸ்வரர் கோயில்
நாங்கூர்



தட்சிணாமூர்த்தி, மதங்கீஸ்வரர் கோயில்
நாங்கூர்



தட்சிணாமூர்த்தி, நம்புவார்க்கன்பர் கோவில்
நாங்கூர்



சங்கநிதி, நாலாயிரத்தொருவர்
விநாயகர்கோயில், நாங்கூர்



பத்மநிதி, நாலாயிரத்தொருவர்
விநாயகர்கோயில் நாங்கூர்




சுரம்தீர்த்த விநாயகர்கோயில், நாங்கூர்



தாய்லாந்து தமிழ்க்கல்வெட்டு

இந்நூலாசிரியர்



திரு கா. நெடுஞ்செழியன், திரு. ப. காளிமுத்து, திருமதி. உதயத்தம்மாள் ஆகியோருக்கு 13-10-1954ல் திருநாங்கூரில்மகனுகப் பிறந்தார் இந்தியப் பண்பாட்டில் இளங்கலைப்பட்டத்தைப் பூம்புகார் கல்லூரியில் பயின்று பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொன்மை வரலாறும் தொல்லியலும் பயின்று 'O' கிரேட் (out Standing) பெற்றுத்தேறி எம்.ஏ. பட்டம் பெற்ற வர். 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்று கல்வெட்டியல் மற்றும் தொல்லியலில் முதுநிலை டிப்ளமோ பட்டம் பெற்றார். அது முதல் அத்துறையில் பணியிடம் பெற்று காப்பாட்சியாளராக மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை கோவலன் பொட்டல் அகழ்வைப்பகம், தஞ்சை மராட்டா அரண்மனை அகழ்வைப்பகம் ஆகியவற்றில் பணியாற்றித் தற்போது கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில பணியாற்றி வருகிறார். தொல்லியல் ஆர்வம் மிக்க இவர் 25க்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதி ஆய்வு இதழ்களில் வெளியிட்டும் கருத்தரங்குகளில் சமர்பித்துமுள்ளார். கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயிலூர் ஆகிய அகழ்வாய்வுகளில் பங்கு பெற்றுள்ளார். 'திருப்புகலூர்' பற்றி நூல் எழுதிய இவர் 'இராசேந்திரசோழன் அகழ்வைப்பகம்' நூலிற்கு இணை ஆசிரியரும் ஆவார்.